# இயேசுவே வாரும்

காலேப் யோசுவா
செல்: 9444701953
E-mail: brocalebjoshua@gmail.com

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி.22.20

எண்: 11/2 மாடி, பெரியார் நகர், E. B. எதிர்
சென்னீர்குப்பம், பூந்தமல்லி போஸ்ட், சென்னை – 600 056

## கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்ளும் அதிகமான பேர்களிடத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பிரியமாக இல்லை

**அ) விபசாரரே, விபசாரிகளே, உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? யாக் 4: 4**

**ஆ) இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம். 1 கொரி 15:19**

**கிறிஸ்துவின் பேரிலுள்ள திரித்துவ ஸ்தாபன சபைகள் யாவும் மக்களை உலக சிநேகத்திற்கே வழிநடத்தி, இம்மைக்காக மாத்திரம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாக்குகிறது என்ற எனது பழைய குற்றச்சாட்டையே மீண்டும் இந்த புதிய ஆண்டில் புதுப்பிக்கிறேன்.**

1. கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாய் இருக்கிற எனக்கு மிகவும் பிரியமான சகோதரர்களுக்கு : நாம் கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்க பூரண புருஷராகும் வரைக்கும் (2 பேது 1:5-8) பரிசுத்தவான்கள் பூரணப்படும் பொருட்டும், சுவிசேஷத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தி அடைவதற்காகவும் கர்த்தரால் சுவிசேஷகனாக (எபே 4:11-13) ஏற்படுதப்பட்டவனாகிய காலேப் யோசுவா எழுதுகிறதாவது : பிரியமானவர்களே, உங்களுக்கு இரக்கமும் கிருபையும் சமாதானமும் அன்பும் இந்த 2016 -ம் ஆண்டில் சம்பூரணமாக பெருகக்கடவது. ஆமென்

2. கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமானவர்களே, நம்முடைய மணவாளனாகிய கிறிஸ்து, தம்முடைய சரீரமாகிய சபையாகிய அவருடைய மணவாட்டியாகிய நம்மை மத்திய ஆகாயத்தில் எடுத்துக்கொள்ள காலம் நிறைவேறிக்கொண்டிருக்கும் இந்த வேளையில், தேவன் நம்மை ஒரு புதிய ஆண்டுக்குள் பிரவேசிக்க செய்துள்ளார். ஆதலால் அவர் வரும் வேளையில் நம்முடைய ஆவி ஆத்துமா சரீரம் அவர் சமூகத்தில் குற்றமற்றதாக காணப்படும்படிக்கு அவர் கிருபை நமக்கு போதுமானதாக இருக்க தேவன் தம்முடைய ஆசிர்வாத மழையை நம் மீது சம்பூரணமாக பொழிந்தருளுவாராக. ஆமென்

3. இது சத்தியத்துக்கு செவியை விலக்கி (அ) அதாவது எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு : அவர் எல்லார்மேலும் (பிதாவின் தன்மையில் கர்த்தராக ), எல்லாரோடும் (குமாரன் தன்மையில் இயேசுவாக), உங்கள் எல்லாருக்குள்ளும் (பரிசுத்த ஆவியின் தன்மையில் கிறிஸ்துவாக) இருக்கிறவர் (எபே 4:6). தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக கர்த்தராகிய இயேசுவுக்குள் வாசமாய் இருக்கிறது.(கொலோ 2:9) என்ற தேவத்துவதுக்கடுத்த சத்தியத்துக்கு செவியை விலக்கியும்
(ஆ) மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகலதேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே(கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ) பிரசிங்கிக்கப்பட வேண்டியது என்று இயேசு சுறினார் (லூக்24:47) வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்து வந்த தேவபக்தியுள்ள யூதர்கள் (அப் 2:5) சுமார் 17 தேசங்களிலிருந்து எருசலேமுக்கு வந்த ஜனங்கள் தங்கள் ஜென்மபாஷையில், கலிலேயராகிய அப்போஸ்தலர்கள் பேசுவதை கேட்டு, இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி,பேதுருவையும் அப்போஸ்தலர்களையும் நோக்கி:சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்ட போது, பேதுரு அவர்களை நோக்கி, நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புகென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவீர்கள் என்றான் . இங்கு வரம் என்பது பரிசுத்த ஆவியை குறிக்கிறது (அப் 11:17) அவனுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் அன்றைய தினம் ஏறக்குறைய 3000 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப் 2:38,41) இவ்வாறாக இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் தம்முடைய சரீரமாகிய சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார் (அப் 2:47)பாருங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளை இடப்படவுமில்லை .(அப் 4:12) கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, தன்னுடைய பாவங்களுக்காக மரித்தார், அடக்கம் பண்ணப் பட்டார், மூன்று நாள் கழித்து உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசிக்கிறவன். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே பாவமன்னிப்பை பெறுவான் என்று எழுதப்பட்டுள்ளது.(1கொரி 15:3-4, அப் 10:43) ஆக ஒருவனுடைய பாவமன்னிப்பு இயேசு கிறிஸ்து நாமத்தில் மாத்திரமே உள்ளது.கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்திலே நித்திய ஜீவன் (யோ 20:31) கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றவர்களே பாவமன்னிப்பை பெற்றவர்கள். பிதா குமாரன் பரிசுத்தஆவி என உச்சரித்து ஞானஸ்நானம் பெற்றவர்கள் பாவமன்னிப்பை பெறவில்லை. இன்னும் அவர்கள் தங்கள் பாவத்திலே மரித்துக்கொண்டிருகிறார்கள். பாருங்கள் அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளி, நான் வானத்திற்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என்

சிங்காசனத்தை உயர்த்துவேன், வடபுறங்களில் உள்ள ஆராதனைக் கூடத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன், மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன், உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்று தன் இருதயத்தில் சொன்னான். வானத்தில் இருந்து தரையிலே விழ வெட்டப்பட்டான் (ஏசா 14:12-14) லூசிபர் பரலோகத்தை ஆளுகை செய்ய நினைத்தான். பூமியிலே தள்ளப்பட்டான். பின் ஏதேன் தோட்டத்தில் காணப்பட்டான்.ஏவாளை வஞ்சித்தான். பூமியின் மீது இருந்த ஆதாமுடைய ஆளுகையை தன் வசப்படுத்தினான். இப்பிரபஞ்சத்தின் அதிபதி ஆனான். கத்தோலிக்க திருச்சபை வாயிலாக, தொடர்ந்து ஸ்தாபன சபைகள் மூலமாக மக்களை வஞ்சித்தான். இயேசு கிறிஸ்து மத் 28:19ல் சொல்லியபடியே பிதா குமாரன் பரிசுத்தஆவி என உச்சரித்து ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்றான். அப்போஸ்தலர்கள் யார்? பேதுரு இயேசுவை மூன்று முறை மறுதலித்தவன் தானே என சாதூரீயமாக பேசி, அவன் சொல்லுக்கு கீழ்ப்படிய கூடாது என்று நயவஞ்சக வலையை விரித்தான். மகாவேசியும், அவளது குமாரத்திகளும் அந்த வலையில் விழுந்தார்கள். இன்று தங்களது பாவங்களுக்கு மன்னிப்பை பெறாத, சாத்தனுடைய ஏதேனில், இப்பிரபஞ்சத்தில் சாத்தானுடைய பிள்ளைகளாக, பாவமன்னிப்பை இயேசு கிறிஸ்து நாமத்தினால் பெறாது தங்கள் பாவத்திலே அவர்கள் மரித்துகொண்டிருக்க வஞ்சித்து விட்டான். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று, பாவமன்னிப்பை பெறாதவர்கள் பாவத்திற்கு அடிமையாக ஒரு பேர் கிறிஸ்தவர்களாக சாத்தானுக்குள் ஜீவிக்கிறார்கள். அவர்களுக்கு பாவமன்னிப்பு, இரட்சிப்பு, மீட்பு இல்லை. உங்கள் ஆலயத்திலே, நீங்கள் சபை கூடும் இடத்திலே சாத்தான் தேவன் போல் உட்கார்ந்து தன்னைத்தான் தேவன் என்று காண்பிக்கிரவனாயிருக்கிறான். நீங்கள் சாத்தானைதான் ஆராதித்து வருகிறீர்கள் அவனுடைய தூதர்கள் கல்விமான்களும் ஞானிகளுமாய் இருக்கிறார்கள். இவர்களுக்கு தேவன் தம்மை வெளிபடுத்துவது இல்லை. ஆதலால் இவர்கள் பிதா குமாரன் பரிசுத்த ஆவி என உச்சரித்து ஞானஸ்நானம் கொடுத்து நீங்கள் உங்கள் பாவமன்னிப்பை பெறாதபடி வழி செய்கிறார்கள். ஆனாலும் அறியாமையின் காலத்தில் தேவன் காணாதவர் போல் இருந்தார். ஆனால் இப்பொழுதோ அப்படி அல்ல. ஆக சாத்தான் அவனுடைய தூதர்களைக் கொண்டு உங்களுக்கு நீங்கள் உங்கள் பாவ மன்னிப்பை பெறவிடாதபடி வழி செய்து அவனுடைய திரித்துவ ஸ்தாபன சபைகளில் சேர்த்துவிடுகிறான். பரலோகத்தில் ஆளுகை செய்ய நினைத்தவன், இப்பொழுது பூமியில் ஆளுகை செய்கிறான். இயேசு நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் அவருடைய இரத்தத்தினால் உண்டான இரட்சிப்பை நாம் பெற்று விடாதபடி திரித்துவ உபதேசத்தை கொண்டு வந்து மக்களை வஞ்சித்து அவர்களை தன் ஆட்சிக்குள் இழுத்துக்கொண்டான்.ஆனால் இயேசு கிறிஸ்துவின் ஊழியகாரர்கள் படிப்பறியாதவர்களும், பேதைகளுமாயிருந்து, பட்டங்கள் பதவிகள் எதுவுமில்லாது வேதவாக்கியங்களின் மேல் உள்ள வெளிப்பாடுகளைப் பெற்று பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்ற பதவிகளுக்குரியவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்ற வெளிப்பாட்டை பெற்று தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி விசுவாசமுள்ளவர்களானவர்களுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுக்க அதை கர்த்தர் அங்கீகரித்து அவ்வாறாக இரட்சிக்கப்பட்டவர்களை அனுதினமும் தம்முடைய சரீரமாகிய சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார்.(அப் 2:47) ஆனால் பிதகுமாரன் பரிசுத்த ஆவி என உச்சரித்து ஞானஸ்நானம் பெற்றவர்களை சாத்தான் தன்னுடைய ஸ்தாபன சபைகளில் சேர்த்து வருகிறான். ஆம், நீங்கள் சத்தியத்துக்கு உங்கள் செவியை விலக்கி கட்டுகதைகளுக்கு செவிசாய்த்து அவமாய்போனீர்கள்.

4. ஆம் நாம் வாழும் இந்த காலம், ஆரோக்கியமான உபதேசத்தை பொறுக்க மனதில்லாமல் செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களை (திரித்துவ ஸ்தாபன சபை போதகர்களை, கள்ள கபடமுள்ள வேலையாட்களை) தங்களுக்கு திரளாய் சேர்த்துக்கொள்ளும் காலம். இந்த உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது.(1 யோ 5:19) ஆம், இந்த உலகம் முழுவதும் திரித்துவ உபதேசத்துக்குள் அதாவது தேவத்துவத்தில் மூவர் உண்டு என்ற உபதேசத்தில் நிலைத்திருக்கிறது. ஆனால் கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களோ ஒரே தேவன் உண்டு அவர் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்று உபதேசித்தார்கள். ஆனால் ஸ்தாபன சபை மக்களோ பிசாசின் திரித்துவ உபதேசத்தில் மதிமயங்கி தங்களுடைய பந்தயபொருளை இழந்து போனார்கள். அந்தோ அவர்கள் நிலை பரிதாபம்!. ஆதலால் சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் திருவசனத்தை, அப்போஸ்தலர் உபதேசங்களை, ஏழாம் சபைக்கால தூதனுடைய உபதேசங்களை மிக்க ஜாக்கிரதையாய் பிரசங்கம் பண்ணி, எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் அன்பின் நிமித்தமாக கண்டனம் பண்ணி கடிந்து கொண்டு உங்களுக்கு புத்தி சொல்லி வருகிறேன். ஏற்றுக்கொள்வது, கொள்ளாதது உங்கள் விருப்பம். பரியாசக்காரனை கடிந்து கொள்ளாதே அவன் உன்னை பகைப்பான். ஞானமுள்ளவனை கடிந்துகொள் அவன் உன்னை நேசிப்பான். (நீதி 9:8) நீங்கள் ஞானமுள்ளவர்களாய் எனது கடிந்து கொள்ளுதலை, புத்திமதிகளை காத்துக் கொள்வீர்களானால் ஜீவ வழியை கண்டடைவீர்கள்.

5. இந்த புத்தகத்தின் தலைப்புக்காக நான் எடுத்துக்கொண்ட வேதபகுதி 1 கொரி10:1-6 வசனங்களில் அடங்கியிருக்கிறது. சகோதரரே நீங்கள் எவைகளை அறிய வேண்டுமென்று இருக்கிறேனென்றால் : நம்முடைய பிதாக்கள் எல்லாரும் மேகத்துக்கீழாயிருந்தார்கள். எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்து வந்தார்கள். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். எல்லாரும் ஒரே ஞான போஜனத்தை புசித்தார்கள். எல்லாரும் ஒரே ஞானபானத்தை குடித்தார்கள். எப்படி எனில் அவர்களோடே கூட சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரை குடித்தார்கள். அந்தக்கன்மலை கிறிஸ்துவே. அப்படியிருந்தும், அவர்களில் அதிகமான பேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை. ஆதலால் வனாந்தரத்திலே அவர்கள் அழிக்கப்பட்டார்கள். இதுகுறித்து மேலும் யூதா : நீங்கள் முன்னமே அறிந்திருந்திருந்தாலும் நான் உங்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறது என்னவெனில், கர்த்தர் தமது ஜனத்தை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணி, இரட்சித்து, பின்பு விசுவாசியாதவர்களை அழித்தார் என்கிறான் (யூதா :5)

6. இங்கு சகோதரரே என்று அப்.பவுல் தொடக்கத்தில் யாரை குறிப்பிடுகிறான்? கொரிந்து பட்டிணத்திலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவருமாகிய தேவனுடைய சபையை. அதாவது தேவனுடைய சபையிலுள்ள சகோதரர்களை குறிப்பிடுகிறான். அதோடு மட்டுமல்ல ஆண்டவராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை (பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்றதொரு நாமத்தை அல்ல , கர்த்தராகிய பிரன்ஹாம் கிறிஸ்து நாமத்தை அல்ல ) எங்கும் எவ்விடத்திலும் தொழுதுகொள்ளுகிறவர்களை, ஆராதிக்கிறவர்களை சகோதரரே என அழைக்கிறான்.

திரித்துவ ஸ்தாபன சபை மக்கள் அப்.பவுலுக்கு சகோதரர்கள் அல்ல. ஏனென்றால் திரித்துவ ஸ்தாபன சபைகள் தேவனுடைய சபை அல்ல. அவைகளுக்கு தேவனோடு சம்பந்தமில்லை.

**7.** இப்போது இவர்களுக்கு பவுல் கூறும் புத்திமதி / ஆலோசனை என்ன? அதாவது அவர்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்று பவுல் விரும்புவது என்ன? நம்முடைய பிதாக்கள் என்று ஆரம்பிக்கிறான். அதாவது எகிப்துக்கு சென்று அங்கு குடியேறிய யாக்கோபின் கர்ப்பப் பிறப்பாகிய அனைவரையும் நம்முடைய பிதாக்கள் என்று அழைக்கிறான். அவர்கள் எகிப்து தேசத்திலே நல்ல நாடாகிய ராமசேஸ் என்னும் நாட்டிலே சுதந்திரம் பெற்று குடியேறி, மிகுதியாக பலுகி ஏராளமாய் பெருகி வந்தார்கள் / பலத்தார்கள். தேசம் அவர்களால் நிறைந்திருந்தது. (ஆதி 47:11, யாத் 1:7) அப்பொழுது பன்னிரண்டு கோத்திர பிதாக்களில் ஒருவனாகிய யோசேப்பு, எகிப்து தேசம் முழுமைக்கும் அதிகாரியாக இருந்தான் ( ஆதி 41:41)

**8.** வானமும் பூமியும் அவைகளின் சர்வ சேனையும் உண்டாக்கப்பட்ட காலத்தில் தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார். மனுஷனை தேவ சாயலாகவே சிருஷ்டித்தார். பின்பு தேவன் அவர்களை நோக்கி : நீங்கள் பலுகிப் பெருகி / பூமியை நிரப்பி, அதை கீழ் படுத்தி.... ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி அவர்களை ஆசிர்வதித்தார் (ஆதி 1:27,28) மனுக்குலம் பலுகிப் பெருகி பூமியை நிரப்பவே தேவன் ஆசீர்வதித்தார். மனுக்குலம் பலுகி பெருக வேண்டும் என்பதே தேவனுடைய அநாதி நோக்கமாயிருந்தது. ஆனால் தேவனுடைய ஆசிர்வதங்களை எப்பொழுதுமே தடை செய்து அதை சீர்குலைப்பது தான் சாத்தானுடைய வேலை. ஆம் சத்தியத்தை தாறுமாறாக்குவதே சாத்தனின் வேலை. தேவனுடைய ஜனங்கள் தேவனுடைய ஆசிர்வதங்களை இழந்து, மன நிம்மதியற்றவர்களாக திரிய வைப்பதே சாத்தானின் நோக்கம். அதற்காக எந்தெந்த வகையில் மனுமக்களை ஏமாற்ற முடியுமோ, அதற்கடுத்த அணைத்து வகை தந்திரங்களையும் அவன் கையாளுவான். அவனுடைய வலையில் வீழ்பவர்கள் அநேகர். பாருங்கள் நாம் பலுகி பெறுவதே தேவனுடைய சித்தம், நோக்கம், விருப்பம். நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு அனைவரையும் பலுகி பெருகவே தேவன் ஆசிர்வதித்தார்.(ஆதி 9:1-7, 22:15-18, 17:20, 26:24,35:11,எசே 36:37, லேவி 26:9, உபா 1:10-11, 28:63) ஆபிரகாமின் சந்ததியாகிய நாம் பலுகி பெருகுவதில் தான் தேவன் மகிமைபடுகிறார். கர்த்தர் பிரசிவிக்கபண்ணுகிறவராகிய நான் பிரசவத்தை தடுப்பேனோ என்கிறார்.(ஏசா 66:9) பாருங்கள் அவர் பிரசவத்தை தடுக்கிற தேவன் அல்ல. ஆனால் நாமோ இப்பிரபஞ்சத்தின் தேவனாகிய சாத்தனுடைய வழிகளை தெரிந்து கொண்டு, பிரசவத்தை தடுப்பதற்குரிய அநேக உபாய தந்திரங்களை தெரிந்து கொண்டு தேவனின் நியமங்களை பிரமாணங்களை, நோக்கங்களை தாறுமாறாக்குகிறோம். நம்முடைய தேவன் ஒரு ஸ்திரீ மலடியாக இருந்தாலும், அவளை சந்தோசமான பிள்ளைதாய்ச்சியாக்கி, வீட்டிலே குடியிருக்கப் பண்ணுகிறார்.(சங் 113:9) ஆக பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம். கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன் (சங் 127:4) பிரியமானவர்களே நாம் பலுகி பெருகவே ஆசிர்வதிகப்பட்டிருப்பதால் நம் மத்தியில் கர்ப்பம் விழுதல், மலடு இருக்காது.(யாத் 23:26, உபா 7:16)

**9.** ஆனால் இதோ மலடிகள் பாக்கியவதிகள் என்றும், பிள்ளை பெறாத கர்ப்பங்களும், பால் கொடாத முலைகளும் பாக்கியமுள்ளவைகள் என்று சொல்லப்படும் நாட்கள் வரும் (லூக் 23:29) பிரியமானவர்களே நாம் அப்படிப்பட்டதான நாட்களில் தான் வசித்துக் கொண்டிருக்கிறோம். பெண்கள் குழந்தை பிரசவத்தை முடிவுக்கு கொண்டுவந்து விட்டனர். நமது பெண்கள் பிசாசினுடைய கரத்திலிருந்து தேவனுடைய நியமத்திற்கு, நோக்கத்துக்கு விரோதமாக பாவம் செய்து, தங்களை கிறிஸ்தவ பெண்மணிகள் என்று அழைத்துக் கொள்கிறார்கள். இது ஒரு வெட்கக்கேடு இவர்கள் தாய்மையை ஒரு முடிவுக்கு கொண்டு வந்துள்ளார்கள். கர்ப்பத்தடை எல்லா இடங்களிலும் பிரசங்கிக்கப்படுகிறது. குழந்தைகள் படுத்து விளையாடவேண்டிய தாய் மடியில், அவர்களுடைய செல்ல பிராணிகளாகிய நாய் மற்றும் பூனைக்குட்டிகள் துள்ளி குதித்து விளையாடுகிறது. பெண்கள அவைகளை தங்கள் இடுப்பில் தூக்கி வைத்துக் கொள்ளுகிறார்கள். அதற்கு முத்தம் இடுகிறார்கள், அதை மார்போடு அரவணைத்துக் கொள்ளுகிறார்கள், அதை தங்களுடன் படுக்கையில் படுக்க வைத்துக் கொள்ளுகிறார்கள். குழந்தை பாசத்தை செல்ல பிராணிகள் மீது காட்டுகிறார்கள். இது என்ன ஒரு அலங்கோலம், கேவலம்? மானிடகுலத்தில் இந்த பெண்கள் சர்ப்பத்தின் வித்துக்களே. இவர்களால் தாய்மை படுகுழியில் தள்ளப்பட்டுள்ளது. நாளுக்கு நாள் அது மூழ்கி கொண்டே வருகிறது. அவர்களுக்கு பிள்ளைகளை பெற்று அவர்களை வளர்க்க கூடிய மனப்பக்குவம் இல்லை. ஏதோ மலடி என்று அழைக்கப்படாதபடிக்கு ஒன்றே ஒன்று போதும் என்கிறார்கள். இதனால் அவர்கள் தேவனுடைய நோக்கத்தை சீர்குலைக்கிறார்கள். இவர்களுடைய மனப்பக்குவம், மனப்பான்மை பிசாசினுடயதே. தேவனுக்கும் இவர்களது இல்லற வாழ்க்கைக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. இவர்களுடைய இல்லற வாழ்க்கை கிறிஸ்துவுக்கும் அவருடைய சரீரமாகிய சபைக்கும் உள்ள ஐக்கியத்தை பிரதிபலிக்காது. ஆதலால் தேவனுடைய பார்வையில் தடை செய்யப்பட்ட கர்ப்பம், சபிக்கப்பட்ட கர்ப்பமே. இது குறித்து நீங்கள் மேலும் அறிய விரும்பினால் எனது **கர்ப்பம் விழுதல், மலடு, மற்றும் கருச்சிதைவு, கர்ப்பத்தடை** புத்தகத்தை கேட்டு வாங்கி தியானியுங்கள். இது ஜுன் 2008 ல் வெளியிடப்பட்டது. மேலும் கவனியுங்கள் பரிசுத்த வேதாகமத்தில் எங்காவது கர்பத்தடை செய்த ஒரு ஸ்திரீயை அடையாளம் காட்ட முடியுமா? கர்ப்பத்தடை என்ற சொல் எங்காவது காணப்படுகிறதா? ஆனால் இது சாத்தனுடைய புத்தகத்திலே உள்ளது. இப்பிரபஞ்சம் அவனுடைய கரத்தில் இருப்பதால் அவன் கர்ப்பதடையை எடுத்துரைக்கிறான். மக்கள் அவனுக்கு செவி கொடுக்கிறார்கள்.

**10.** அடுத்து காலம் மாறியது. யோசேப்பை அறியாத ராஜா எகிப்தில் தோன்றினான் (யாத் 1:8) எகிப்தில் ஒரு யுத்தம் உண்டானால் இஸ்ரவேலர் , எகிப்தியரின் பகையாளிகளோடு கூடி எகிப்தியருக்கு விரோதமாக யுத்தம் பண்ணி, எகிப்தை விட்டு புறப்பட்டு போகாதிருக்க அவன் ஒரு உபாயத்தை செய்தான்( யாத் 1:10) அதன்படி எகிப்துக்கு பண்டகசாலைகளை கட்ட பார்வோன் இஸ்ரவேலரை சுமை சுமக்குகிற வேலைகளில் ஒடுக்கினான் (யாத்1:11) பார்வோன் இஸ்ரவேலரைக்கொண்டு செய்வித்த எல்லா வேலைகளிலும் அவர்களை கொடுமைபடுத்தினான் (யாத் 1:14) பார்வோன் இஸ்ரவேலர்களுக்கு அவர்கள் ஜீவனை கசப்பாகினான் (யாத்1:14) ஆனால் பார்வோன் அவர்களை எவ்வளவு ஒடுக்கினானோ அவ்வளவாய் அவர்கள் பலுகி பெருகினார்கள்.(யாத் 1:12).

**11.** இந்த காலகட்டத்தில் மோசே பிறந்தான்.(யாத் 2:1) மோசே பார்வோனுடைய குமாரத்திக்கு குமாரனானான் (யாத் 2:10) மோசே பெரியவன் ஆன போதுதான் எகிப்தியன் அல்ல, ஒரு எபிரேயன் என்பதை அறிய வந்து, தன் சகோதரர்களை சந்தித்தான்(யாத் 2:11) தன் சகோதரராகிய எபிரேயனை ஒரு எகிப்தியன் அடிக்கிறதை கண்டான்(யாத் 2:11) அந்த எகிப்தியனை வெட்டி மண்ணிலே புதைத்தான். (யாத் 2:12) இது ஒரு கொலைக்குற்றமா? இல்லவே இல்லை! ஏன்? அவன் துன்பப்பட்டவனுக்கு நியாயம் செய்தான்(அப் 7:24) இது நிமித்தம் பார்வோன் மோசேயை கொலை செய்ய வகைதேடினான்(யாத் 2:15) மோசே மீதியானுக்கு தப்பி ஓடினான்(யாத் 2:15) மோசே, மீதியான் தேசத்தில் தன் மாமன் எத்திரோவின் ஆடுகளை மேய்த்து வந்தான் (யாத் 3:1)

**12.** சில காலம் சென்ற பின், எகிப்தின் இராஜா மரித்தான். இஸ்ரவேல் புத்திரர் அடிமை தனத்தினால் தவித்து முறையிட்டு கொண்டிருந்தார்கள்.அவர்கள் சத்தம் தேவசந்நிதியில் எட்டியது.(யாத் 2:23) தேவன் இஸ்ரவேல் புத்திரரை கண் நோக்கினர். தேவன் அவர்களை நினைத்தருளினார் (யாத் 2:25) ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கி கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்(சங் 50:15) தேவபர்வதமாகிய ஓரேபில் கர்த்தருடைய தூதனானவர்/ கர்த்தர் / தேவன் மோசேக்கு தரிசனம் ஆனார்(யாத் 3:2) தேவன் தம்முடைய ஜனங்களாகிய இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி மோசேயை பார்வோனிடதிற்கு அனுப்ப, அவனை அழைத்தார்(யாத் 3:10) மோசே பார்வோனுக்கு தேவன் ஆனான். மோசேயின் சகோதரன் ஆரோன், மோசேக்கு தீர்க்கதரிசி ஆனான்(யாத் 7:1) இப்பொழுது மோசேக்கு வயது 80. ஆரோனுக்கு வயது 83(யாத் 7:7) இஸ்ரவேல் புத்திரர் எகிப்தில் குடியிருந்த காலம் 430 வருடங்கள். 430 தாவது வருடம் முடிந்த அன்றைய தினமே, கர்த்தருடைய சேனைகள் எல்லாம் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டது(யாத் 12:41) அப்பொழுது 20 வயது முதல் அதற்கு மேற்பட்ட ஆண்கள் 6,03,550 பேராக இருந்தார்கள்(யாத் 38:26) ஆனால் அன்றைய தினம் புறப்பட்ட, பெண்கள், குழந்தைகள், வாலிபர்கள், புறஜாதிகள் அனைவருமாக சுமார் 20,00,000 பேர்கள் என சரித்திர ஆசிரியர்களால் கணக்கிடப்படுகிறது. பிரயாணத்தில் பகலில் ஜனங்களை வழிநடத்த மேகஸ்தம்பமும், இரவில் வெளிச்சம் காட்ட அக்கினிஸ்தம்பமும் அவர்களுக்கு முன் சென்றது. கர்த்தரே அவர்களுக்கு முன்பாக மேக, அக்கினி ஸ்தம்பத்தில் முன் சென்றார்.

**13.** இப்பொழுது நமது தலைப்பின் பொருளுக்கு வருவோம். இதற்கு முன்பு கூறப்பட்டவைகள் யாவும் ஒரு முன்னுரையாகும். பிதாக்கள் மேகத்துக்கு கீழாயிருந்தார்கள். கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்த பகலில் மேகஸ்தம்பத்தினால் அவர்களுக்கு முன் சென்றார்(யாத் 13:21) அதாவது இரவில் அக்கினியினாலும், பகலில் மேகத்தினாலும் இஸ்ரவேல் ஜனங்களுக்கு முன் சென்றார்.(உபா 1:33) நம்முடைய வாழ்க்கை பயணத்தில் தேவன் நமக்கு முன் செல்ல வேண்டும்.அவரைக் கொண்டே நமது அனைத்து செயல்பாடுகளையும் ஆரம்பிக்க வேண்டும், தொடங்க வேண்டும்.அவரே நமக்கு எந்த காரியத்திலும் ஆரம்பம். அவர் நமக்கு முன் செல்லும்போது நமது வாழ்க்கை பிரயாணத்தில் எந்த விதமான தொல்லைகளும் இருக்காது. அவருடைய சமுகம் நமக்கு முன் செல்ல வேண்டும். இது குறித்து ஒரு பக்தன் பாடுகிறான்: யாக்கோபு என்னும் சிறு பூச்சியே நீ ஒன்றுக்கும் கவலை படாதே. இஸ்ரவேலின் சிறு கூட்டமே நீ எதற்கும் பயந்து விடாதே.உன்னை உண்டாக்கினவர், உன்னை சிருஷ்டித்தவர், உன் முன்னே கடந்து செல்கிறார்.தீங்கு உன்னை ஒன்றும் செய்யாதே. அடுத்து மோசே கூடாரத்துக்குள் பிரவேசிக்கையில் மேகஸ்தம்பம் இறங்கி கூடார வாசலில் நின்றது. கர்த்தர் மோசேயோடே பேசினார் (யாத் 33:9) உன் வாழ்க்கை பிரயாணத்தில் உனக்கு முன் செல்லும் தேவன் உன்னோடு பேசவும் வேண்டும். ஆம் இன்று தேவன், தமது வார்த்தையை கொண்டு நம்மோடு பேசிக்கொண்டிருக்கிறார். ஒரு முறை பெந்தெகொஸ்தே அனுபவத்தில் இருக்கிறேன் என்று கூறும் ஒரு சகோதரியோடு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் குறித்து பேசினேன். அவர்கள் தேவன் என்னோடு பேசினால், அதாவது ஜெபவேளையில் தேவன் அவர்களோடு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் எடு என்று கூறினால் எடுப்பேன் என்றார்கள். நானோ இந்த மணி வேளையிலே கர்த்தர் உங்கள் கரத்தில் உள்ள பரிசுத்த வேதாகமத்தில் அப் 2:38 உள்ள வார்த்தையை கொண்டு உங்களோடு பேசிகொண்டிருக்கிறார். ஆனால் நீங்களோ உங்கள் கண்களினால் காணாமலும், காதுகளால் கேளாமலும், இருதயத்தில் உணர்ந்து குணப்படாமலும் இருக்கிறீர்கள் என்றேன் (அப் 28:26,27) ஆக தேவன் ஆதி 1:1 முதல் வெளி 22:21 வரை உள்ள, தேவ ஆவியினால் அருளப்பட்ட வேதவாக்கியங்களைக்கொண்டு அனுதினமும் உங்களோடு பேசி, உறவாடிக்கொண்டு வருகிறார். நீங்கள் தான் அவருடைய வார்த்தைக்கு செவி கொடுப்பதில்லை. முதலாவது தேவன் உங்கள் வாழ்க்கைப்பயணத்தில் உங்களுக்கு முன் செல்ல வேண்டும் (யாத்33:14) இரண்டாவது அவர் உங்களோடு பேசவேண்டும் அதாவது தேவன் உங்களோடு தம்முடைய வார்த்தையை கொண்டு பேசுகிறார். மூன்றாவதாக தேவன் இஸ்ரவேல் ஜனங்களை வழி நடத்தினார். பாருங்கள் பகலிலே மேகத்தினாலும் இராமுழுவதும் அக்கினி வெளிச்சத்தினாலும் வழி நடத்தினார்.(சங் 78:14) வழி இதுவே, இதிலே நடவுங்கள் என தேவன் உங்களை வழிநடத்த வேண்டும். ஏனென்றால் இயேசுவே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார். அவர் ஒரு நல்ல மேய்ப்பனாக இருந்து உங்களை வழிநடத்த வேண்டும். நீங்கள் சார்ந்திருக்கும் ஸ்தாபன சபைகள், அவைகளின் தலைவர்கள் உங்களை சத்தியத்தின் பாதையில் வழிநடத்த முடியாது. தேவனே தம்முடைய வார்த்தையை கொண்டு வழி இதுவே, இதிலே நடவுங்கள் என வழி காட்ட வேண்டும். இது குறித்து ஒரு பக்தன் பாடுகிறான் : வழிநடத்தும் வல்ல தேவன் வாழ்வில் நாயகனே, போகும் வழியைகாட்டி நல்ல போதனை செய்வார் என்று. உங்களை வழி நடத்த தேவன் தமது சபையில் (ஸ்தாபன சபையில் அல்ல) ஐந்து வகை ஊழியங்களை வைத்துள்ளார். நீங்கள் அவர்களை / அவைகளை அடையாளம் கண்டு கொண்டு, அவர்களால் வழிநடத்தப்பட வேண்டும். தேவன் உங்களுக்கு முன் சென்று, உங்களோடு பேசி, உங்களோடு இடைப்பட்டு, வழிநடத்தி செல்வாராகில் நீங்கள் அவருடைய பாதுகாப்புக்குள் இருக்கிறீர்கள். அப்பொழுது தீங்கு ஒன்றும் உங்களை அணுகாது. பாருங்கள் பார்வோனின் மனம் வேறுபட்டது (யாத் 14:5). இஸ்ரவேல் புத்திரரை அவன் பின் தொடர்ந்தான் (யாத் 14:8). அவர்களை கிட்டிச் சேர்ந்தான் (யாத் 14:9). அப்பொழுது இஸ்ரவேலரின் சேனைக்கு முன்பாக நடந்த தேவதூதனானவர் விலகி, அவர்களுக்குப்பின்னாக வந்தார். அவர்களுக்கு முன் இருந்த மேகஸ்தம்பம் விலகி, அவர்கள் பின்னே நின்றது. அது எகிப்தியரின் சேனையையும் இஸ்ரவேலரின் சேனையையும் இராமுழுவதும் ஒன்றோடு ஒன்று சேராதபடிக்கு அவர்கள் நடுவில் வந்தது. எகிப்தியருக்கு அது மேகமும் அந்தகாரமுமாக இருந்தது. இஸ்ரவேலருக்கோ அது இரவை வெளிச்சம் ஆக்கியது. இவ்வாறாக இஸ்ரவேல் ஜனங்களை தேவன் பாதுகாத்தார். மேகத்தை மறைவுக்காக விரித்து, இரவை வெளிச்சமாக்குகிறதற்காக அக்கினியையும் கொடுத்து இஸ்ரவேல் ஜனங்களை அவர்களது பிரயாணத்தில் பாதுகாத்தார். அவ்வாறாக நீயும் உன் வாழ்க்கை பயணத்தில் இயேசு கிறிஸ்து உன் முன் செல்ல

அனுமதித்து, அவருடைய வார்த்தைக்கு கீழ்படிந்து அவர் உன்னோடு தம்முடைய வார்த்தையைக் கொண்டு பேச அனுமதித்து, அதன்படி நடந்து வந்தால், நீ அவருடைய செட்டைகளின் கீழ் பாதுகாப்பாய் இருப்பாய். தீங்கு ஒன்றும் உன்னை அணுகாது.

**14.** இங்கு மேகம் என்பது தேவனுடைய பிரசன்னத்தை குறிக்கிறது. தேவன் மேகத்தின் நடுவிலிருந்து மோசையை கூப்பிட்டார். கர்த்தருடைய மகிமையின் காட்சி பட்சிக்கிற அக்கினிபோல் இருந்தது(யாத் 24:15-18). கர்த்தர் மேகத்தில் இறங்கி மோசேயின் அருகில் நின்று கர்த்தருடைய நாமத்தை கூறினார் (யாத் 34:5). கர்த்தர் மோசேயை நோக்கி: கிருபாசனத்தின் மேல் ஒரு மேகத்தில் நான் காணப்படுவேன் என்றார்(லேவி 16:2). கர்த்தர் மேகத்தில் இறங்கி மோசேயோடு பேசினார்(எண் 11: 25, 12: 5). மேகமானது கர்த்தருடைய ஆலயத்தை நிறப்பிற்று. கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிறப்பிற்று( 1 இரா 8:10, 11, ஏசே 10:4). ஒளியுள்ள மேகம் பேதுரு, யாக்கோபு, யோவான் மேல் நிழலிட்டது. அந்த மேகத்திலிருந்து சத்தம் உண்டாயிற்று(மத் 17:5) இதோ வெண்மையான மேகத்தையும் அந்த மேகத்தின் மேல் மனுஷகுமாரனுக்கு ஒப்பானவராய் தமது சிரசின் மேல் பொற்கிரீடத்தையும் தமது கையிலே கூருக்குள்ள அரிவாளையும் உடைய ஒருவர் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டேன்(வெளி 14:14). ஆக மேகம் தேவனுடைய பிரசன்னத்தைக் காட்டி அவருடைய மகிமையை ஜனங்களுக்கு மறைக்கிறது(யாத் 16:10, சங் 119:9) அதாவது இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய பிரசன்னத்தின் கீழ் இருந்தார்கள். தேவன் அவர்கள் முன் சென்றார், அவர்களொடு பேசினார், அவர்களை வழிநடத்தினார், பாதுகாத்தார். இதுதான் பிதாக்களேல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள் என்பதன் பொருள். நீயும் தேவனுடைய பிரசன்னத்தின் கீழிருக்கும்பொது தேவன் உனக்கு முன் செல்வார், அவருடைய வார்த்தையைக் கொண்டு உன்னிடம் பேசுவார், நீ நடக்கவேண்டிய, போக வேண்டிய வழிகளை உனக்குக் காட்டி உன்னை எல்லா தீங்குக்கும் விலகிக் காப்பார். நீ அவருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலம் கொண்டிருப்பாய்.

**15.** அடுத்து பிதாக்கள் எல்லோரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்து வந்தார்கள்(யாத் 14:16-31, 15:8, சங் 78:13). இஸ்ரவேலர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்து போனார்கள். சமுத்திரம் பிரிந்து வலது, இடதுபுறம் மதிலாக நின்றது. ஒரு பக்கம் இஸ்ரவேலருக்கு இரட்சிப்பு. அது ஜீவனைக் கொண்டு வந்தது. அதனால் நன்மையையும் ஆசிர்வாதமும். மறுபக்கம் எகிப்தியரை கர்த்தர் கடலின் நடுவே கவிழ்த்துப் போட்டார். அவர்களின் ஒருவனாயிலும் தப்பவில்லை. ஆம் இந்த மறுபக்கத்தில் அழிவு. அது மரணத்தைக் கொண்டு வந்தது. அது தீமையாக இருந்தது. அது சாபத்தின் விளைவாக இருந்தது(உபா 30:15,17). ஆக ஒரே தண்ணீர் ஒருபக்கம் ஜீவனைக் கொடுத்தது, மறு பக்கம் மரணத்தைக் கொண்டுவந்தது . அதே போன்று தேவனுடைய வார்த்தை: இதில் நித்திய ஜீவனுக்கென்று நியமிக்கப்பட்டவர்கள் தேவனுடைய வார்த்தையைக் கேட்டு விசுவாசித்தார்கள். அதே வார்த்தையை இடறுகிறதற்கென்று நியமிக்கப்பட்டவர்கள், திருவசனத்திற்கு கீழ்படியாதிருந்து இடறுகிறார்கள்( அப் 13:48, 1 பேது 2:8). இது குறித்து இயேசுவும் என் ஆடுகள் என் சத்தத்திற்கு செவி கொடுக்கிறது(யோ 10:27). அது அந்நியனுடைய சத்தத்தை அறியாதபடியால், அவைகள் அந்நியனுக்கு பின் செல்லாமல் அவனை விட்டு ஓடிப் போகும்.(யோ 10:4) என்றார். ஆம், தேவனுடைய ஆடுகள் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிகிறது. திரித்துவ ஸ்தாபன சபை ஆடுகள், அந்நிய மந்தையின் ஆடுகளாக இருப்பதால் அவைகள் பிசாசின் உபதேசங்களுக்கு கீழ்படிந்து, பிசாசுக்குப் பின் செல்லுகின்றன. ஆதலால் அவைகள் தேவஆவியினால் அருளப்பட்ட, போதனையாக கொடுக்கப்பட்ட அப் 2:38, 1 கொரி 11:15, மாற் 12:29, கொலோ 2:9, 1 பேது 3:3-6, 1 தீமோ 2:12 , 3:4,5 போன்று வசனங்களில் உள்ள உபதேசங்களுக்கு கீழ்படிகிறதில்லை. ஆக பிதாக்கள் நடந்துசென்ற சமுத்திரம்/தண்ணீர் அவர்களுக்கு ஜீவனைக் கொண்டு வந்தது. ஆனால் நடக்க முயன்ற எகிப்தியர்களுக்கோ மரணத்தைக் கொண்டுவந்தது. இங்கு தேவனுடைய நியாத்தீர்ப்பு நடைபெற்றது. இன்றும் தேவனுடைய வார்த்தை திரித்துவத்தையும், ஒரே தேவன் உண்டு என விசுவாசிப்பவர்களையும் நியாயம் தீர்த்து வருகிறது(யோ 12: 48)

**16.** அடுத்து பிதாக்கள் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். இது ஒருவன் தன் பாவமன்னிப்புக்கென்று பெறவேண்டிய ஞானஸ்நானத்திற்கு முன் அடையாளமாக இருக்கிறது. இது நாம் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுவற்கு எடுத்துக்காட்டு. கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொன்டார்கள்(கலா 3:27, ரோ 6:3,5,யோ 3:5) ஆனால் சத்தியம் வெளிப்பட்டபோது, அதற்கு செவிக்கொடாது, ஏழாம் சபைக்கால தூதனுடைய சத்தத்திற்கு செவிகொடுக்காது, பிதா குமாரன் பரிசுத்தஆவி என உச்சரித்து ஞானஸ்நானம் பெற்றவர்கள் அவர்கள் சார்ந்திருக்கும் திரித்துவ ஸ்தாபன சபைகளையே தரித்துக்கொண்டவர்கள். ஆதலால்தான் அவர்கள் நான் தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்தவன், நான் தி பெந்தெகொஸ்தே சபையைச் சார்ந்தவன், நான் அசெம்ப்ளி ஆப் காட் சபையைச் சேர்ந்தவன், நான் அப்போஸ்தல சபையைச் சேர்ந்தவன் என்ற தங்களை அழைத்துக்கொள்கிறார்கள். இவர்களுக்கு இவர்கள் சார்ந்திருக்கும் ஸ்தாபன சபைதான் எல்லாவற்றுக்கும் முடிவு. அது என்ன உபதேசிக்கிறதோ, போதிக்கிறதோ அதற்கே அவர்கள் கீழ்படிவார்கள். அவர்களுக்கு அவர்களுடைய போதகரின் வாக்கே வேதவாக்கு. அவர்களுக்கு வேதவாக்கியங்களை குறித்து அக்கறையில்லை. தேவனுடைய வார்த்தை என்ன கூறினாலும் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆனால் என்னைப் பொறுத்த அளவில் திரித்துவ ஸ்தாபன சபைகள் யாவும் தவறு. தேவனுடைய வார்த்தை மாத்திரமே எல்லாவற்றிற்கும் முடிவு. அதில் கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களின் உபதேசங்கள் உண்டு. அடுத்து சபைக்கால தூதர்களின் போதனைகளும் உண்டு. இவர்களுடைய உபதேசங்களுக்கு தேவனுடைய வார்த்தை அடிப்படையாக இருக்கிறது.

**17.** பிதாக்கள் எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தை ( spiritual food ) புசித்தார்கள், வானத்தின் அப்பதினலே அவர்களை திருப்தியாக்கினார் (சங்105:40) மன்னவை அவர்களுக்கு ஆகாரமாக வருஷிக்கப்பண்ணி, வானத்தின் தானியத்தை அவர்களுக்கு கொடுத்தார். தூதர்களின் அப்பத்தை மனுஷன் சாப்பிட்டான்: அவர்களுக்கு ஆகாரத்தை பூரணமாய் அனுப்பினார்(சங் 78:24.25) வானத்திலிருந்து அப்பம் வருஷிக்கப்பண்ணினது குறித்து நீங்கள் யாத் 16:4-36 வசனங்களை தியானிக்கலாம்.இது இஸ்ரவேல் ஜனங்களுக்கு சரீரத்துக்குரிய ஆகாரமாக இருந்தது. ஆனால் ஆவிக்குரிய ஞானபோஜனமாக கற்பனைகளும், கட்டளைகளும், பிரமாணங்களும் இருந்தது.இது குறித்து நீங்கள் யாத் 20-25 அதி, 34,35 அதி, லேவி 1 அதி, எண் 5, 6,15,27-30,36,உபா 12-26 அதிகாரங்களில் தியானிக்கலாம்.

**18.** ஆனால் நமக்கோ ஞானபோஜனமாக அந்தந்த சபை காலங்களின் தூதர்களால் ஆவிக்குரிய மன்னாவாக கொடுக்கப்பட்டு வருகிறது. இஸ்ரவேலர் இந்த ஞானபோஜனத்தை மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்ட பின்பு புசித்தார்கள். இது நம்முடைய இராப்போஜனதுக்கு அதாவது கர்த்தருடைய பந்திக்கு அடையாளமாக இருக்கிறது.நாம் ஞானஸ்நானம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் பெற்ற பின்பு, அவர் நம்முடைய பாவங்களுக்காக தம்முடைய சரீரத்தில் பட்ட பாடுகளை நினைவு கூரும்படி கர்த்தருடைய இராப்போஜன பந்தியில் பங்கு பெறுகிறோம்.(யோ 6:48-58) நானே வானத்திலிருந்து இறங்கின ஜீவ அப்பம். இந்த அப்பத்தை புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்.நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார். நாம் இராப்போஜனத்தில் கர்த்தருடைய சரீரத்திற்கு அடையாளமாக அப்பத்தை புசிக்கிறோம். அனால் நாம் புசிக்கும் அப்பம் கர்த்தருடைய சரீரமாக மாறுவது இல்லை. இவ்வண்ணமாகவே திராட்சை ரசமும். நாம் புசிக்கும் அப்பமும் பானம்பண்ணும் திராட்சை ரசமும் கிறிஸ்துவின் மாம்சத்திற்கும், இரத்திற்கும் அடையாளமாக/எடுத்துகாட்டாக இருக்கிறது.

**19.** அந்தப்படியே பிதாக்கள் எல்லாரும் ஒரே ஞானபானத்தை குடித்தார்கள்.இஸ்ரவேல் ஜனங்கள் குடித்த கன்மலையின் தண்ணீர் குறித்து நீங்கள் யாத் 17:1-6, சங் 78:16, 105,11 ல் தியானிக்கலாம். ஆனால் அந்த கன்மலை கிறிஸ்து என ஏசா 26:4,48:8,1 கொரி 10:4 ல் தியாணிக்கலாம்.இதுவும் கர்த்தருடைய இராப்போஜன பந்தியில் நாம் பருகும் திராட்சைரசத்துக்கு அடையாளமாக இருக்கிறது. யோ 6:48-58.

**20.** தேவனுடைய ஜனங்கள் மோசேக்குள் ஞானஸ்நானம் பெற்றார்கள். ஞானபோஜனத்தை புசித்து, ஞானபானத்தை குடித்தார்கள்.நாம் அவ்வாறே கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற பின்பு அப்பத்தை புசித்து திராட்சைரசத்தை பானம் பண்ணுகிறோம். அதன் வாயிலாக நாம் நித்திய ஜீவனை உடையவர்கள் என சாட்சி பகருகிறோம்.இது இயேசு கிறிஸ்து நம்மில், நாம் அவரில் நிலைத்திருப்பதை சாட்சியாக எடுத்துகாட்டுகிறது.

**21. இப்பொழுது இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவன் செய்த நன்மைகளை கவனியுங்கள்.**

1) தேவன் தம்முடைய ஜனத்தை அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், பலத்த கைகளினாலும், ஓங்கிய புயத்தினாலும், மகா பயங்கரத்தினாலும், எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்.(உபா 26:8, எரே 32:21).
2) இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தியரின் பொன், வெள்ளி உடைமைகளை பெற்று, எகிப்தியரை கொள்ளையிட்டார்கள்.(யாத் 12:35,36)
3) பிரயாணத்தின் பாதையில் அவர்களை காக்கிறதற்கு ஒரு தூதனை அவர்களுக்கு முன்பாக அனுப்பினார். (யாத் 23:20).
4) மோசே, ஆரோன் என்பவர்களின் கையில் ஒரு ஆட்டு மந்தையை போல இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்தினார்.(சங் 77:20)
5)ஒரு மனிதன் தன் பிள்ளைகளை சுமந்து கொண்டு போவது போல அவர்களை சுமந்து கொண்டு வந்தார்(உபா 1:31)
6) செம்மையான நீதிநியாங்களையும் நல்ல கட்டளைகளையும், கற்பனைகளையும் ஆவிக்குரிய மன்னாவாக / ஞானபோஜனமாக கொடுத்தார்.(நெகே 9:13)
7) சிவந்த சமுத்திரத்தை பிளந்து மத்தியில் வெட்டாந்தரையை உண்டாக்கி ஜலம் வலது இடது புறம் மதிலாக நின்றது. இஸ்ரவேல் ஜனங்கள் வெட்டாந்தரையில் பிரயாணம் செய்தனர்.(யாத் 14:21,22)
8) பகலில் மேக ஸ்தம்பம், இரவில் அக்கினி ஸ்தம்பம் அவர்களை வழிநடத்தியது. (யாத் 13:21)
9) மாராவின் கசப்பான தண்ணீரை மதுரமாக மாற்றி அவர்கள் தாகத்தை தீர்த்தார்.(யாத் 15:22-25)
10) பிரயாணத்தில் அவர்களோடே கூட சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரை குடித்தார்கள்.அந்த கன்மலை கிறிஸ்து (சங் 78:15, 1 கொரி 10:4)
11) தூதர்களின் மன்னாவை புசித்தார்கள்.யாத் 16:14, சங் 78:74. ஆனால் தூதர்கள் புசிப்பதுமில்லை குடிப்பதுமில்லை என நமக்கு தெரியும். ஏனென்றால் அவர்களுக்கு மாம்ச சரீரம் கிடையாது. அவர்கள் ஆவிக்குரிய சரீரத்தில் உள்ளனர். அப்படியானால் இஸ்ரவேல் ஜனங்கள் புசித்தது என்ன? அவர்கள் வானத்திலிருந்து இறங்கின / உண்டான மன்னாவை புசித்தார்கள்.
12) காடைகளின் இறைச்சியை அவர்களுக்கு புசிக்க கொடுத்தார்.(யாத் 16:13)
13) 40 ஆண்டுகள் வனாந்தர பிரயாணத்தில் அவர்கள் கால்கள் வீங்கவில்லை (நெகே 9:21)
14.) 40 வருட வனாந்தர பிரயாணத்தில் அவர்கள் வஸ்திரம் பழமையாய் போனதில்லை (உபா 29:5)
15) தங்கள் பிரயணத்தில் அந்நிய ஜனங்களுடைய பிரயாசத்தின் பலனை சுதந்தரித்துக் கொண்டார்கள்.(சங் 105:45)
16) தேவன் தம்முடைய ஜனங்களுக்கு வழிப்பிரயாணத்தில் ஒன்றும் குறைவு படாதபடிக்கு பாதுகாத்து, பராமரித்து வந்தார்.?
(நெகே 9:21)

**22.** தேவன் இஸ்ரவேல் ஜனங்களின் வனாந்தர வழி பிரயாணத்தில் மேற்கண்ட நன்மைகளை விட இன்னும் அதிகமாகவே செய்து அற்புதப்பிரகரமாக ஆச்சரியப்பிரகாரமாக அடையாளங்களின் கீழ் வழிநடத்தியும் அவர்கள் இருதயம் அவரிடத்தில் நிலைவரப்படவில்லை அவருடைய உடன்படிக்கையில் அவர்கள் உண்மையாய் இருக்கவில்லை (சங் 78:37) **தேவனுக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். அவைகளில் சில:**

1) பார்வோனின் சேனை அவர்களை பின்தொடர்கையில் எகிப்திலே எங்களுக்கு பிரேதக்குழிகள் இல்லையோ ? நாங்கள் வனாந்தரத்திலே சாகிறதை பார்க்கிலும் எகிப்தியருக்கு வேலை செய்வது நல்லது என முறுமுறுத்தார்கள்(யாத் 14:11-16)
2) மாராவின் தண்ணீர் விஷயத்தில் மூன்று நாட்கள் வனாந்தரத்தில் தண்ணீர் இல்லை. என்னத்தை குடிப்போம் என்று முறுமுறுத்தார்கள்.(யாத் 15:22-25)
3) இறைச்சிக்காகவும் அப்பதிற்காகவும் முறுமுறுத்தார்கள்.(யாத் 16,எண்11 அதி ) நாங்கள் எகிப்திலே இறைச்சி பாத்திரங்கள் அண்டையில் உட்கார்ந்து அப்பத்தை திருப்தியாக சாப்பிட்டோம்.இங்கு பட்டினியாக எங்களை கொல்லவா கொண்டு வந்தீர் என்றார்கள்?
4) எங்களையும் எங்கள் பிள்ளைகள் ஆடு மாடுகள் அனைத்தையும் தண்ணீர் தாகத்தினால் கொன்று போடவா கொண்டு வந்தீர் என முறுமுறுத்தார்கள்.(யாத் 17:1-3)

5) சீனாய் மலைக்கு ஏறிச்சென்ற மோசேக்கு என்ன ஆயிற்றோ, எங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை உண்டு பண்ணுகிறோம் என்று கூறி கன்றுக்குட்டியை உண்டாக்கினார்கள்.(யாத் 32:1)
6) மோசே விவாகம் பண்ணின எதியோப்பிய ஸ்திரீயின் விவகாரத்தில் கர்த்தர் மோசேயை கொண்டு மாத்திரம் பேசினாரோ எங்களைக்கொண்டும் அவர் பேசவில்லையோ என முறுமுறுத்தார்கள்.( எண் 12 அதி.)
7) கானான் தேசத்து ஜனங்கள் பலவான்கள். அவர்களை நாம் எதிர்க்க கூடாது என கானான் தேசத்தை வேவு பார்த்து வந்த பிறகு முறுமுறுத்தார்கள்.(எண் 14:1-4)

**23.** ஆதலால் தேவன் இதுவரை பத்துமுறை தம்மை பரீட்சை பார்த்த மனிதர்களில் ஒருவனும் ஆணையிட்டு கொடுத்த தேசத்தை காணமாட்டான் என்றார் (எண் 14:22,23) காலேப், யோசுவா தவிர எகிப்திலிருந்து வந்தவர்களில் 20 வயது முதல் அதற்கு மேற்பட்ட மனிதர்களில் ஒருவனும் கர்த்தரை உண்மையாய் பின்பற்றவில்லை. ஆதலால் பொல்லாப்பு செய்த இந்த சந்ததியை அவர் நிர்மூலம் ஆக்கும் வரை அவர்களை வனாந்தரத்தில் 40 ஆண்டுகள் அலையப்பண்ணினார்.

**24. தேவன் இஸ்ரவேல் ஜனங்களிடம் எதிர்பார்த்தது :**
1) உன் தேவனாகிய கர்த்தருக்கு பயப்படு 2) உன் தேவனாகிய கர்த்தருடைய வழிகளில் நட.
3) உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்பு கூர். 4)உன் தேவனாகிய கர்த்தரை முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் சேவி 5) உன் தேவனாகிய கர்த்தருடைய கற்பனைகளையும், கட்டளைகளையும், பிரமாணங்களையும் கைக்கொள்.(உபா 10:12,13)

**25. இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய மேற்கண்ட எதிர்பார்ப்புக்கு கொடுத்த வாக்காவது :**
1. கர்த்தர் எங்களுக்கு தேவன் 2. அவர் வழிகளில் நாங்கள் நடப்போம்
3.கர்த்தருடைய கட்டளைகளையும், கற்பனைகளையும்,நியாங்களையும், பிரமாணங்களையும் கைக்கொள்ளுவோம்.
4.கர்த்தருடைய சத்தத்துக்கு கீழ்ப்படிவோம் (உபா 26:17)

**26. இஸ்ரவேலரின் ஜனங்களின் வாக்குறுதியை கொண்டு கர்த்தர் அவர்களுக்கு கொடுத்த மறு வாக்காவது:**
1. நீ எனக்கு சொந்த ஜனமாய் இருப்பாய்
2. நான் உண்டு பண்ணின எல்லா ஜாதிகளை பார்க்கிலும் உன்னை புகழ்ச்சியிலும், கீர்த்தியிலும்,மகிமையிலும் சிறந்திருக்க செய்வேன்.
3. நீ எனக்கு பரிசுத்த ஜனமாய் இருப்பாய் (உபா 26,18:19)

**27. ஆனாலும் இஸ்ரவேல் ஜனங்களின் இருதயம் தேவனிடத்தில் நிலைவரப்படவில்லை. அவருடைய உடன்படிக்கையில் உண்மையாய் இருக்கவில்லை (சங் 78:37) ஆதலால் பிதாக்களில் அதிகமான பேர்களிடத்தில் தேவன் பிரியமாக இல்லை. அவர்கள் வனாந்தர பிரயாணத்தில் அழிக்கப்பட்டார்கள்( எண் 32:10-13, 26:23-25). பிரியமானவர்களே இவைகள் யாவும் அவர்களுக்கு திருஷ்டாந்தமாக சம்பவித்தது. ஆனால் நமக்கோ எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டிருக்கிறது.**

**28. இஸ்ரவேல் ஜனங்களுக்கு வாக்குதத்தம் பண்ணி, அவர்களை எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து கொண்டுவந்த கானான் தேசத்தின் செழிப்பைக் கவனியுங்கள்.** தேவனாகிய கர்த்தர், இஸ்ரவேல் ஜனங்களை பிரவேசிக்கப்பண்ணக் கொண்டுவந்த அந்த நல்ல தேசம் பள்ளத்தாக்குகளிலிருந்தும், மலைகளிலிருந்தும் புறப்படுகிற ஆறுகளும், ஊற்றுக்களும் எங்கும் உள்ள தேசம். அது கோதுமையையும், வாற்கோதுமையையும், திராட்சை செடிகளும், அத்தி மரங்களும், மாதுளை செடிகளும் உள்ள தேசம். அது ஒலிவ மரங்களும் எண்ணெயும் தேனும் உள்ள தேசம். அது தாழ்ச்சி இல்லாமல் அப்பம் புசிக்கத் தக்கதும், ஒன்றும் குறைவுபடாதுமான தேசம். அது கல்லுகள் இரும்பாயிருக்கிறதும், செம்பு வெட்டி எடுக்கத் தக்க மலைகள் உள்ளதுமான தேசம்(உபா 8:7-9). இஸ்ரவேல் ஜனங்கள் கட்டாத வசதியான பெரிய பட்டிணங்களைக் கொண்டதும், அவர்கள் நிரப்பாத சகல நல்ல வஸ்துக்களாலும் நிரம்பிய வீடுகளைக் கொண்டதும், வெட்டாமல் வெட்டப்பட்டிருக்கிற துரவுகளையும் நடாத திராட்சைத் தோட்டங்களையும் கொண்ட தேசம்(உபா 6:10,11). அது பாலும் தேனும் ஓடுகிற தேசம்(உபா 11:9).

**29.** இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்திலே விதையை விதைத்து, கீரைத் தோட்டத்திற்கு நீர் பாய்ச்சுகிறதுபோல தங்கள் காலால் நீர் பாய்ச்சி வந்தார்கள். ஆனால் அவர்கள் சுதந்திரிக்கப் போன தேசம் மலைகளும் பள்ளத்தாக்குக்களுமுள்ள தேசம். வானத்தின் மழைத் தண்ணீரை குடிக்கும் தேசம். அது அவர்களுடைய தேவனாகிய கர்த்தர் விசாரிக்கிற தேசம். வருஷத்தின் துவக்கமுதல் வருஷத்தின் முடிவு மட்டும் அவர்களுடைய தேவனாகிய கர்த்தரின் கண்கள் அதன் மேல் வைக்கப்பட்டிருக்கும் தேசம். முன் மாரியும் பின் மாரியும் பெய்யும் தேசம்(உபா 11:9-14). கூட்டு மொத்தமாகக் கூறப்போனால் அது சூரியன் பக்குவப்படுத்தும் அருமையான கனிகளையுடையதாயும், சந்திரன் பக்குவப்படுத்தும் அருமையான வளங்களைக் கொண்டதும், ஆதி பர்வதங்களினால் உண்டாகும் திரவியங்களினாலும், நித்திய மலைகளினால் பிறக்கும் அரும் பொருட்களையும், நாடு அதன் நிறைவை அளிக்கும் அருமையான தானியங்களைக் கொடுக்கக்கூடியதான தேசம். இப்படிப்பட்டதான தேசத்தை அவர்களுக்குக் கொடுக்க நாற்பது ஆண்டுகள் அவர்கள் ஒன்றுமே செய்யாது, ஒன்றுமே கொடுக்காது, ஒன்றுமே விதைக்காது அறுவடை செய்ய வைத்துக் கொள்ளச் செய்தார்.

**30.** எனக்குப் பிரியமானவர்களை மேற்கண்ட ஆசிர்வாதங்களைக் கொண்ட கானான் தேசத்திற்கு தம்முடைய ஜனங்களை தேவன் அவர்களுடைய அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து அழைத்துக்கொண்டு வந்தார். ஆனால் அவர்களோ அக்கிரமங்களில் நிறைந்து அகங்காரமாய் நடந்து தங்கள் கழுத்தைக் கடினப்படுத்தி தேவன் அவர்களுக்கு ஞானமன்னாவாக கொடுத்த கற்பனைகளுக்கும், கட்டளைகளுக்கும், பிரமாணங்களுக்கும், நீதிநியாயங்களுக்கும், செவிகொடுக்காமல் போனார்கள். ஆதலால் தேவனும் எந்தவிதமான பாரபட்சமில்லாமல் தம்முடைய ஜனங்களை அழிக்கத் தயங்கவில்லை. அன்று எகிப்திலிருந்து சுமார் 20 லட்சம் பேர் புறப்பட்டார்கள். அதில் 20 வயதுக்குமேல் உள்ளவர்களில் காலேப், யோசுவா இருவர் தவிர மற்ற அனைவரையும்

வனாந்தரத்திலே அழித்தார். அவர்களை வாக்குப் பண்ணின கானான் தேசத்தில் பிரவேசிக்க அனுமதிக்கவில்லை. பாருங்கள் இந்த அழிக்கப்பட்ட ஜனங்கள் யாவரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்திற்கு அழைக்கப்பட்டவர்கள். அவர்கள் மிக்க மனமகிழ்ச்சியோடும், சந்தோஷத்தோடும், ஆரவாரத்தோடும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்தை சுதந்தரிக்கப் புறப்பட்டுச் சென்றார்கள். ஆனாலும் தேவன் அவர்களை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கக் கூடாதபடிக்கு, தேசத்தின் வளங்களைப் புசிக்கக் கூடாதபடிக்கு, அவர்கள் பிரயாண வழியிலே அவர்களை அழித்தார். உத்தமமாய் கர்த்தரைப் பின்பற்றின கேனோசியனான எப்புனேயின் குமாரன் காலேப்பும், நூனின் குமாரன் யோசுவாவும் தவிர எகிப்திலிருந்த வந்தவர்களில் இருபது வயது முதல் அதற்கு மேற்பட்ட மனிதர்களில் ஒருவரும் கர்த்தரை உத்தமமாய் பின்பற்றாததால் அவர்களை வனாந்தரத்திலே அழித்தார். ஆணையிட்டுக் கொடுக்க தேசத்தை அவர்கள் காணவுமில்லை, சுதந்தரிக்கவுமில்லை (எண் 37:11,12). வனாந்தரத்திலே அழிக்கப்பட்டவர்கள் எந்த நோக்கத்திற்காக அழைக்கப்பட்டார்களோ, வழிநடத்தப்பட்டார்களோ அந்த கானான் தேசத்தை சுதந்தரிக்க முடியவில்லை. தங்கள் பிரயாணத்தின் வழியில் இம்மைக்குரிய அநேக நன்மைகளை ஆசிர்வாதமாகப் பெற்று அனுபவித்தார்கள். ஆனால் முடிவில் தங்கள் பந்தயப் பொருளை இழந்து போனார்கள். ஏனென்றால் தேவனுடைய கட்டளைகளுக்கும் பிரமாணங்களுக்கும் நீதிநியாங்களுக்கும் அவர்கள் செவிகொடுக்கவில்லை. அதன்படி நடக்கவுமில்லை. அதே நேரத்தில் இம்மைக்குரிய நன்மைகளை ஆசிர்வாதங்களை மட்டும் அனுபவித்தார்கள். ஆதலால் தேவன் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட தம்முடைய ஜனங்களில் அநேகரிடத்தில் பிரியமாய் இருந்ததில்லை. ஆதலால் அவர்களை வனாந்தரத்தில் அழித்தார்(1கொரி 10:1-5)

31. கிறிஸ்துவுக்குள் எனக்குப் பிரியமானவர்களே இவைகள் யாவும் அவர்களுக்கு அவர்களுடைய வனாந்தர வாழ்க்கையில், சுபபோகமான வாழ்க்கையில் பிரத்தியட்சமாக சம்பவித்தது. ஆனால் உலகத்தின் முடிவு மணிவேளையில் இருக்கும் நமக்கு எச்சரிப்பு உண்டாகும்படி இவைகள் திருஷ்டாந்தமாக எழுதி வைக்கப்பட்டுள்ளது. மேற்கொண்டும் சற்று தியானியுங்கள். தேவன் இஸ்ரவேல் ஜனங்களோடு செய்த உடன்படிக்கையை கவனியுங்கள். நான் எகிப்தியருக்கு செய்ததையும் நான் உங்களை கழுகுகளுடைய செட்டைகள் மேல் சுமந்து உங்களை என் அண்டையில் சேர்த்துக் கொண்டதையும் நீங்கள் கண்டிருக்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, எண் உடன்படிக்கைகளை கைக்கொள்வீர்களானால் சகல ஜனங்களிலும் நீங்களே எனக்கு சொந்த சம்பந்தமாய் இருப்பீர்கள்: பூமி எல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும், பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரருடைய சொல்லவேண்டிய வார்த்தைகள் என்றார். ஜனங்கள் ஏகமாய் கர்த்தர் சொன்னவைகளை எல்லாம் செய்வோம் என்று பிரதியுத்தரம் சொன்னார்கள்(யாத் 19:5-8). ஆனால் அவர்கள் தங்கள் உடன்படிக்கையை மறந்தார்கள். தேவனுடைய வார்த்தைக்கு செவிகொடுக்க மனவிருப்பமில்லாமல் போனார்கள். அவர் செய்த உபகாரங்களையும் அற்புதங்களையும் நினையாமல் தங்கள் கழுத்தைக் கடினப்படுத்தி தங்களில் அடிமைத்தனத்திற்கு மறுபடியும் திரும்ப ஒரு தலைவனை ஏற்படுத்தினார்கள்.(நெகே 9:17). நீங்கள் இன்று ஸ்தாபன சபைகளை ஏற்படுத்திக்கொண்டீர்கள். எதற்கு? தேவனுடைய வார்த்தையை விட்டு விலகி பின்னோக்கி செல்வதற்குத்தானே. தேவன் அவர்களை அழித்தார். முடிவாக இஸ்ரவேல் ஜனங்களுக்கு அடுத்த காரியத்தில் தேவன் அவர்களுக்கு வாக்கு கொடுத்த கானான் தேசத்தின் செல்வ செழிப்பையும் தேவன் அவர்களை அற்புதப்பிரகாரமாக் வனாந்தரப் பிரயாணத்தில் வழி நடத்தியதையும், அவர்களுக்குக் கொடுத்த ஞானபோஜனமாகிய கட்டளைகளையும், கற்பனைகளையும், பிரமாணங்களையும் கடைப்பிடிக்காமல் போனதினால் காலேப், யோசுவா இருவரைத் தவிர மற்றவர்களை வனாந்தரத்திலே அழித்தார். இது நமக்கு திருஷ்டாந்தமாக எழுதிவைக்கப்பட்டுள்ளது.

32. இப்பொழுது கிறிஸ்தவ வாழ்க்கையிலே என்னிலுள்ள கிறிஸ்துவினுடைய சத்தியத்தைக் கொண்டு நமக்கு அடுத்து சில காரியங்களை சற்று தியானிப்போம். கர்த்தர் என்னை அதிகம் அதிகமாய் எனது இல்லற வாழ்க்கையில், தொழிலில், பணியில், ஊழியத்தில் ஆசீர்வதித்திருக்கிறார் என்கிறார்கள். இது பொதுவாக இம்மைக்குரிய நன்மைகளை இப்பிரபஞ்ச, வனாந்திர வாழ்க்கையில் பெற்றுள்ள அநேக கிறிஸ்தவ மக்கள், கிறிஸ்தவ ஊழியக்காரர்கள் தாங்கள் சார்ந்திருக்கிற சபைகளில், கிறிஸ்தவ பத்திரிகைகளில், TV நிகழ்ச்சிகளில், பொதுக்கூட்டங்களில், தங்கள் நண்பர்களிடத்தில் கூறும் சாட்சிகள் ஆகும். இப்படிப்பட்ட சாட்சிகளில் அநேகர் பொய்களையும், புரட்டுகளையும், பெற்ற நன்மைகளை மிகைப்படுத்தி உண்மைக்குப் புறம்பாகக் கூறுவதுண்டு. சிலர் உண்மையாகவே உத்தம இருதயத்தோடு நடந்ததைக் கூறுவதும் உண்டு. இதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் பொய் மற்றும் போலி சாட்சிகளை, விளம்பரங்களை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, சின்ன மீனைப் போட்டு பெரிய மீன்களைப் பிடிக்கும் கள்ள கபடமுள்ள வேலையாட்களும் கிறிஸ்தவ மக்கள் மத்தியில் அதிகம் அதிகம் உண்டு. இதையும் யாரும் மறுக்க முடியாது. இயேசு கிறிஸ்து என்னோடு நடந்து வந்தார், என்னோடு உட்கார்ந்து அநேக காரியங்களைக் குறித்து சம்பாஷித்தார். என்னோடு அமர்ந்து சாப்பாட்டு மேசையில் உணவு அருந்தினார், என்னோடு எனது படுக்கையில் உறங்கினார், இதுபோன்ற சாட்சிகளும் உண்டு. இவை அனைத்தும் மக்கள் தங்களைக் குறித்து ஒரு பொருட்டாக எண்ணிக்கொள்வார்கள் என்பதற்காக கள்ள கபடமுள்ள ஊழியக்காரர்கள் போடும் வேஷம். பண ஆசையினால் இப்படிப்பட்டதான சாட்சிகளை இழிவான பண ஆதாயத்தை இட்சிக்கும், பிழைப்புக்கடுத்த தொழிலை மையமாகக் கொண்டுள்ள கிறிஸ்து மக்கள் மத்தியில் உள்ள கள்ள கபடமுள்ள வேலையாட்களுடைய நாடகம் ஆகும். இவ்வாறாக நாள்தோறும் இப்படிப்பட்டதான சாட்சிகளை, கள்ளகபடமுள்ள வேலையாட்களுடைய அக்கிரமக்கிரியைகளையும் அவர்கள் தங்களது லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும் மக்களை கொள்ளை கொண்டு போவதை கண்களால் கண்டும், காதுகளால் கேட்டும், நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்தையும் நாம் இந்த நேரத்தில் நினைவு கூற வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

**அ)** எங்களது குடும்ப வாழ்க்கையில் வறுமை மிக்கக் கொடூரமாகத் தாண்டவமாடியது.கர்த்தர் எங்களுக்குக் கொடுத்த கர்ப்பத்தின் கனிகள் நன்கு படித்து பட்டங்கள் பல பெற்று அதன் பலனாக உத்தியோகத்தில் அமர்ந்து, சமுதாயத்தில் சீர்சிறப்புடன் வாழ வேண்டும் எனக் கனவு கண்டோம். இந்த வேளையில், இளம் பங்காளர் திட்டம் குறித்து கேள்விப்பட்டோம்(**இந்த காலக் கட்டத்தில்தான் பிசாசு இவர்களோடு இடைபடுகிறான், வஞ்சிக்கிறான்**). அதில் பிள்ளைகளை சேர்த்தோம். அதற்கான பீஸுக்காக வட்டிக்குப் பணம் வாங்கி செலுத்தினோம். எங்கள் பணத்தை பெற்ற சகோதரன் அதன்பின் எங்கள் பிள்ளைகளுக்காக ஊக்கமாக ஜெபிக்க ஆரம்பித்தார். அவரது ஜெபத்தினால் எங்களுடைய பிள்ளைகள் நன்கு படித்தார்கள். பட்டங்கள் பல பெற்றார்கள். நல்ல வேளையில் அமர்ந்தார்கள். நாங்கள் கொடுத்த கூலி மிக்க ஆசிர்வாதங்களைக் கொண்டு வந்தது.

இப்பொழுது எங்கள் பிள்ளைகள் பல லட்சங்கள் சம்பாதிக்கின்றார்கள். நாங்களும் ஊழியத்த்ற்கு பல லட்சங்கள் கொடுத்து உதவி செய்கிறோம். ஊழியருடைய இளம் பங்காளர் திட்டத்தினால் கர்த்தர் எங்கள் பிள்ளைகளை அதிகம் அதிகமாக ஆசிர்வதித்தார். கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம் என்கிறார்கள். இப்படிபட்டதான சாட்சிகளை எழுத வைத்தோ அல்லது அவர்களாகவே வெளியிட்டோ ஊழியக்காரர்கள் தங்களுடைய ஊழியத்தின் பாதையில் தங்களுடைய தொழிலை விளம்பரப்படுத்துகிறார்கள். ஆனால் கர்த்தருடைய வார்த்தை இது குறித்து என்ன சொல்லுகிறது? கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் (நீதி 1:7) கர்த்தர் ஞானத்தை தருகிறார். அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும் (நீதி 2:4) கர்த்தருக்கு பயப்படுதல் ஞானத்தை போதிக்கும் (நீதி 15:33) உதடுகளின் மதுரம் கல்வியை பெருகப்பண்ணும் (நீதி 16:21) ஞானிகளின் இருதயம் அவன் வாய்க்கு அறிவை ஊட்டும். அவன் உதடுகளுக்கு அது மேன்மேலும் கல்வியை கொடுக்கும் (நீதி 16:23) நம்முடைய தேவன் ஒன்றைப்பெற்று அதற்கு ஈடாக மற்றொன்றை கொடுப்பவர் அல்ல. உங்கள் பிள்ளைகளை கர்த்தருக்கு பயப்படுகிற பயத்தில் வளர்த்து வாருங்கள் கல்வி அவர்களிடத்தில் கிணற்றில் ஊறும் தண்ணீரைப்போன்று ஊற்றெடுக்கும். இதற்காக யாருக்கும் லஞ்சம் கொடுத்து உங்கள் காரியத்தை அவர்கள் முடித்து எதிர்பார்க்க வேண்டாம். இதில் கொடுமையிலும் கொடுமை என்ன வென்றால் இப்படிபட்ட விளம்பரங்கள் தான் ஆவிக்குரிய பத்திரிக்கை என்று சொல்லப்படும் புத்தகங்களில் வருகிறது.

**ஆ)** அன்று நான் கைவண்டி இழுத்து தெருத்தெருவாக சுற்றி வந்து வியாபாரம் செய்து வந்தேன். வர்த்தகர்களின் தொழில் அபிவிருத்திக்காக விஷேசித்த ஜெபம் பரலோகத்திலிருக்கிற தேவனிடத்திற்கு ஊழியக்காரர் ஏறெடுக்கிறார் என்று கேள்விப்பட்டேன். எனது சிறு தொழிலின் முதலீடுக்காக ஒரு சிறுதொகை சேர்த்து வைத்திருந்தேன்.அதை அப்படியே காணிக்கையாக அவரிடம் கொடுத்தேன். அவர் ஊக்கமாக மிக்க பாரத்தோடு எனது தொழில் அபிவிருதிக்காக ஜெபித்தார்.அவருடைய ஜெபம் எனக்கு மிக்க ஆசிர்வாதங்களை கொண்டு வந்தது. நாளுக்கு நாள் நல்ல வருமானம் கிடைத்தது. நான் மேலும் மேலும் கொடுக்க ஆரம்பித்தேன். ஊழியக்காரர் மிக்க கண்ணீரோடு எனக்காக ஜெபித்தார்கள்.நான் இன்று ஒரு மாலின்(Mall) முதலாளி மற்றும் பங்களா கார் வசதியுடன் வாழ்கிறேன்.கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம். இப்படி பட்டதான சாட்சிகளுக்கு நம் மத்தியில் குறைவு இல்லை. இவையனைத்தும் ஏமாற்று வேலைகள். ஆனால் பரிசுத்த வேதாகமம் இது குறித்து என்ன கூறுகிறது? கர்த்தருக்கு பயந்து அவர் வழிகளில் நடக்கிறவன் பாக்கியவான்.அவன் தன் கைகளின் பிரயாசத்தை சாப்பிடுவான். அவனுக்கு பாக்கியமும் நன்மையையும் உண்டாயிருக்கும் (சங் 128:1,2) உன் வழியை கர்த்தருக்கு ஒப்புவித்து அவர் மேல் நம்பிக்கையாய்யிரு. அவரே காரியத்தை வாய்க்க செய்வார்(சங் 37:5). ஆதலால் உன் பிரயாசத்தின் ஆசிர்வாதத்திற்காக நீ எந்த ஒரு ஊழியக்காரனுக்கும் லஞ்சமாக காணிக்கை கொடுத்து ஜெபிக்க வேண்டிய தேவை இல்லை. உனக்கு பண ஆசை, பொருள் ஆசை. அதை பெற நீ குறுக்கு வழியை கையாளுகிறாய், நீ இப்பிரபஞ்சதுக்குரிய பொருளாசைக்காரன். ஆதலால் தேவன் உன்னிடத்தில் பிரியமாய் இல்லை.

**இ)** அன்று ஒரு கைப்பையில் எனது பரிசுத்த வேதாகமத்தையும், ஒரு பாட்டு புத்தகத்தையும் வைத்துக்கொண்டு, கிறிஸ்தவ வீடுகளுக்கு சென்று ஒரு பாட்டு பாடி, ஒரு சங்கீதம் வாசித்து சிறு ஜெபம் ஒன்று செய்து காணிக்கைகளை பெற்று ஆத்தும ஆதாயம் செய்து வந்தேன்.கொஞ்சம் பணம் சேர்ந்தது.ஒரு குடிசை போட்டு, சில விசுவசிகளைக்கொண்டு சபை கூட ஆரம்பித்தோம். கர்த்தாவே ஆத்துமாக்களை கொண்டு வாரும் கொண்டு வாரும் என குரல் ஓங்க உபவாசம் இருந்து ஜெபித்தோம். வியாதியஸ்தர்களுக்கு ஜெபிக்கப்படும் என விளம்பரப்படுத்தினோம். கூட்டம் சேர ஆரம்பித்தது. வருமானமும் பெருகியது. எங்கள் கூடத்தில் பெண்களையே அதிகமாக ஆதாயப்படுதினோம். அவர்கள் தான் தங்கள் கணவர்களுக்கு தெரியாமல் காணிக்கை அதிகமளவில் வந்து கொடுப்பார்கள். இதன் பின் ஞாயிறு ஆராதனை முடிந்தவுடன் மதிய சாம்பார் சாப்பாடு. இப்போது கூட்டம் முன்பு விட அதிகமானது. இதனால் சிலருக்கு வீட்டுவாடகை உதவி, பிள்ளைகள் படிக்க உதவி செய்து மக்களை கவர்ச்சிக்குள்ளாகினோம். இன்று சுமார் ஆயிரம் பேர் கூடுகிறார்கள். சபை கூடுதலுக்கு ஒரு பெரிய கட்டிடத்தை என் பெயரில் கட்டி அதை A.C படுத்திவிட்டேன். தொடக்கத்தில் ஒரு சைக்கிள் பயணம். இப்போது காரில் பிரயாணம் செய்கிறேன்.தொடக்கத்தில் ஜெபவீடு ஒரு குடிசையில். இப்பொழுது சொந்த கட்டிடத்தில். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இது ஒரு மாய்மாலக்காரனின் ஊழியத்தொழில். இவன் தன் மந்தையை மேய்க்காதபடி மந்தையிலுள்ள ஆடுகளை தன்னுடைய வாய்க்கு ஆகாரமாக கொண்ட ஓநாய் ஆகும். இவனிடம் கர்த்தர் பிரியமாக இல்லை. ஏனென்றால் இவன் ஒரு கள்ள கபடம் உள்ள, ஒளியின் தூதனுடைய வேஷத்தைத்தரித்த ஊழியன்.

**ஈ.)** அன்று எனது பாடுகள் கஷ்டங்கள் மத்தியில் ஊழியக்காரனுடைய அழைப்புக்கு செவிகொடுத்து, ஜெபவீடு கட்ட ரூ 1000/- நன்கொடையாக கொடுத்தேன். ஊழியக்காரர், கர்த்தர் என்னை பலமடங்கு ஆசிர்வதிப்பார் என்றார். அந்த நம்பிக்கையின் பேரில்தான் இந்த பணத்தை கொடுத்தேன். எனது நம்பிக்கை வீண் போகவில்லை. எதிர்பாராத விதமாக லாட்டரியில் ரூ.1,00,000/- கிடைத்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இது எனக்கு அநேகருடைய ஊழியங்களை தாங்க வேண்டும் என்ற வாஞ்சையை கொண்டு வந்தது. சமீபத்தில் ஊழியத்திற்காக ரூ.1,00,000/- கொடுத்தேன்.அதற்கு பிரதிபலனாக பலமாநில லாட்டரி சீட்டுகளிலிருந்து எனக்கு மொத்தமாக ரூ.10,00,000/- கிடைத்தது. இப்பொழுது நான் 3 சினிமா தியேட்டர்களுக்கு சொந்தக்காரன். இனி சினிமா எடுக்க வேண்டும் என்ற ஆசையிலும் இருக்கிறேன். என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி. கர்த்தர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே! அல்லேலுயா!. இவர்கள் வாயில் உண்மை இல்லை. பாஸ்டர் மற்றும் விசுவாசி இருவர் உள்ளமும் கேடுள்ளது. இப்படிபட்ட ஏமாற்று வித்தைகாரர்களிடத்தில் கர்த்தர் ஒருகாலும் பிரியமாக இருக்க முடியாது.

**33.** இப்படியாக மக்கள் கொடுத்தார்கள், அதன் பலனாக பலமடங்கு தேவனிடத்திலிருந்து பெற்றார்கள் என தன் ஊழியத்தில், தன் தொழில் ரீதியில் நயவஞ்சகமாக பொய் சாட்சிகளை வெளியிட்டு மக்களிடம் சாதூரியமாக பேசி பணம் பறிக்கும் கொள்ளை கூட்டத்திற்கு நம் மத்தியில் குறைவு இல்லை. இவர்கள் செம்மையான வழியை விட்டு தப்பி நடந்து பேயோரின் குமாரனாகிய பிலேயாமின் வழியை பின்பற்றி போனவர்கள்.இவ்வாறாக பொருளாசை என்னும் அக்கிரமத்தில் பழகினவர்களின் கவர்ச்சியான திட்டங்களில் விளம்பரங்களில் மனம் மயங்கி தங்கள் பொருளை இழந்தவர்களும் உண்டு. இப்படியாக போலி விளம்பரங்களை பிரசுரித்து, மக்களை ஏமாற்றி பிழைக்கும் கொள்ளை கூட்டங்கள் தான் நம் மத்தியில் அதிகமதிகம். இயேசு கிறிஸ்துவின் பெயரில் மோசடி. இவர்கள் வாயின் வார்த்தைகளில் வஞ்சனை அதிகம். ஆதலால் தான் தேவன் இவர்களிடத்தில் பிரியமாய் இல்லை. பிரியமானவர்களே, நீங்கள் உங்கள் சரீர பிரச்சினைகளை ஒரு டாக்டர்ரிடம் உத்தம இருதயத்தோடு கூறுவது போன்று நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் உங்கள் பிரச்சனைகளை ஒப்புவியுங்கள். நிச்சியமாக கேட்கிறவன் எவனும் பெற்று

கொள்கிறான். ஆதலால் நீங்களும் உங்கள் ஜெபத்தின் பலனை பெற்று கொள்வீர்கள். பிறகு நீங்கள் ஒருபோதும் உங்கள்ளுக்காக ஜெபிக்க எந்த ஊழியகாரனிடத்திற்கும் போக வேண்டிய தேவை இல்லை. அவர்களை தேடி அழைய வேண்டியதும் இல்லை. அவர்கள் ஜெபதிற்காக காணிக்கை, நன்கொடை வேண்டிய தேவையும் இல்லை. நீங்கள் கேட்டதை பெற்று கொண்டேன் என்ற விசுவாசத்தில் இருப்பீர்களானால் நிச்சயமாக ஜெயத்தை பெறுவீர்கள். உங்கள் ஜெபமே ஜெயம். விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும். ஆம், கர்த்தர் இடத்தில் மனமகிழ்சியாயிறு. அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை அருள் செய்வார்.

**34.** நான் ஒரு காரியத்தை உங்கள் சிந்தனைக்கு இந்த புதிய ஆண்டு 2016 ன் தொடக்கத்தில் கொண்டு வர விரும்புகிறேன். இங்கு நீங்கள் ஊழியர்களுக்கு, ஊழியங்களுக்கு சிறுக கொடுத்ததினால் பெருக கர்த்தர் உங்களை ஆசிர்வதித்தார் என்றீர்கள். இப்படிப்பட்ட அநேக சாட்சிகளை கேட்டு சிறுக விதைத்து பெருக அறுவடை செய்ய முயற்சித்தவர்களும் உண்டு.அந்த முயற்சியில் அநேகர் தோல்வி அடைந்ததையே நான் காண்கிறேன். இந்த முயற்சி குறித்து தேவனுடைய வார்த்தை என்ன கூறுகிறது? ஒருவன் தேவ பக்தி உள்ளவனாயிருந்து தேவனுக்கு சித்தமானதை செய்தால் தேவன் அவனுக்கு செவி கொடுக்கிறார்.(யோ 9:31) நாம் எதையாவது அவருடைய சித்தத்தின்படி கேட்டால் அவர் நமக்கு செவி கொடுக்கிறார். நாம் எதை கேட்டாலும் அவர் செவி கொடுக்கிறார் என்று நாம் அறிந்திருந்தோம் என்றால், நாம் கேட்டுக்கொண்டதை பெற்றுக்கொண்டோம் என்று அறிந்திருக்கிறோம் (1 யோ 5:14,15) நாம் அவருடைய கற்பனைகளை கைகொண்டு அவருக்கு பிரியமாணவைகளை செய்தால் நாம் வேண்டிகொள்ளுகிரதை பெற்று கொள்ளுவோம். (1 யோ 3:22) ஆனால் நாம் விண்ணப்பம் பண்ணியும் அவைகள் கேட்கப்படுவது இல்லை. ஏன்? நம்முடைய இச்சைகளை நிறைவேற்றும்படி தகாத விதமாய் விண்ணப்பம் பண்ணுகிறோம்.(யாக் 4:3) இப்படியிருக்க உங்கள் உள்நோக்கம் என்ன என்பதே காரியம். உங்களுக்கு பண ஆசை. இது உலக சிநேகம். உலக சிநேகம் பொருளாசை கொண்டு வந்து இம்மைக்குரிய நன்மைகளுக்காக கிறிஸ்துவை பற்றிக்கொண்டிருக்க செய்கிறது. இவை எல்லாவற்றிலும் சாத்தான் கிறிஸ்துவின் பெயரை சொல்லி உங்களை வஞ்சிக்கிறான். நயவஞ்சமாக ஊழியர்களைகொண்டு உங்களை ஏமாற்றுகிறான். நீங்கள் ஏமாற்றப்படுகிறீர்கள். இதுதான் உண்மை. நீங்களும் உங்கள் ஊழியக்காரனும் ஆசீர்வாதங்களைப் பெற்றதாக பொய் சாட்சி சொல்லுகிறீர்கள், எழுதுகிறீர்கள். பொதுவாக நான் அறிய இப்பிரபஞ்சதுக்குரிய நன்மைகளுக்காகவே ஊழியக்காரர்கள் கிறிஸ்துவினிடத்தில் உங்களை வழிநடத்துகிறார்களேயன்றி ஆத்தும இரட்சிப்பை பெற இல்லை.நான் என்னுடைய 38 ஆண்டு ஊழியத்தில் எந்த ஒரு ஸ்தாபன சபை ஊழியக்காரனும் தன்னுடைய பொது கூட்டங்களில் அல்லது சபையில் ஜனங்களுடைய ஆத்தும இரட்சிப்பை குறித்து பிரசங்கிப்பதை பார்த்ததும் இல்லை,கேட்டதும் இல்லை.

**35.** ஒரு ஊழியக்காரன் தன் ஊழியத்தை கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அவன் தன்னைத்தானே ஒரு ஊழியக்காரனாக அழைத்துக்கொள்ள கூடாது. அவன் ஒரு ஸ்தாபன சபையால் நியமிக்கப்பட்ட ஊழியக்காரனாக இருக்கமுடியாது. ஆனால் நான் மேற்கூறிய இரு முறைகளின்படியே ஒருவன் தன்னை கிறிஸ்துவின் ஊழியக்கரனாக அழைத்துக்கொள்கிறான். இது தவறு.இது தேவசித்தத்திற்கு புறம்பாக அவருக்கொரு சேவை செய்வதாகும்.கிறிஸ்துவின் ஊழியக்காரன் ஒரு ஸ்தாபன சபையின் ஊழியக்காரனாக இருக்கமுடியாது. ஒரு ஸ்தாபன சபை ஊழியக்காரன் தன்னை நியமித்த அந்த ஸ்தாபன சபைக்கே ஊழியம் செய்து ஊதியம் பெறுகிறான். அதலால் அவன் தேவனுடைய ஊழியக்காரன் அல்ல. தான் சார்ந்துள்ள ஸ்தாபன சபை தலைமையை பிரியப்படுத்த மக்களை கவர்ந்து ஊழியம் செய்கிறவன். ஆதலால் அவன் தேவனுடைய ஊழியக்காரன் அல்ல.(கலா 1:10) தேவனுடைய ஊழியக்காரன் இரட்சிப்பின் வழியையே மக்களுக்கு அறிவிக்க வேண்டும்.(அப்16:13) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமமேயல்லாமல் வேறொரு நாமம் நம்முடைய இரட்சிப்புக்கு கட்டளையிடப்படவில்லை.(அப்4:12) பாருங்கள் விசுவாசம் உள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்.(மாற் 16:16) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்.(அப்16:31) கொர்நேலியுவுக்கும், அவன் ஜனங்களுக்கும் பேதுரு இரட்சிப்புக்கேதுவான வார்த்தைகளை பேசினான். அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றார்கள்.(அப்11:14, 10:48) மேலும் கவனியுங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே பாவமன்னிப்பை பெறுவான் (அப்10:43) ஆக ஒருவன் தன் பாவத்திற்காக மனந்திரும்பி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது. இரட்சிக்கப்படுகிறான். இந்த போதனையை உபதேசிப்பவனே, ஒருவனுடைய இரட்சிப்புக்குரிய வழியை உபதேசிப்பவனே உண்மையுள்ள உக்கிராண பொறுப்புடைய ஒரு ஊழியக்காரன். மற்றபடி திரித்துவ முறைப்படி ஞானஸ்நானம் கொடுக்கும் அணைத்து ஊழியக்காரர்களும் கள்ளகபடமுள்ள வேலை ஆட்களே. ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்தவர்களே.ஆட்டுதொழுவத்துக்குள் வேறு வழியாய் நுழைந்தவர்களே / ஏறினவர்களே. இவர்களுக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷ ஊழியத்துக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. நீங்கள் இரட்சிக்கப்படுவதற்குரிய வழியை உங்களுக்கு காட்டாதவன்/ வழி நடத்தாதவன் கிறிஸ்துவின் உண்மையான வேலைக்காரன் அல்ல. ஆக இன்று உங்கள் மத்தியில் உள்ள ஸ்தாபன சபை ஊழியக்காரர்களுக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷ ஊழியத்திற்கும் எந்த விதமான் சம்பந்தமும் இல்லை. இன்று உலகம் பொல்லாங்கனுக்குள் தான் கிடக்கிறது. ஸ்தாபன சபைகள் மற்றும் அதன் ஊழியக்காரர்களைக் கொண்டு சாத்தான் இரட்சிப்புக்கேதுவான சத்தியத்தை சீர்குலைத்து வருகிறான்.மனிதர்கள் ஒரு குருவி தன் பிராணனை வாங்கும் கண்ணியே அறியாமல் அதில் விழ தீவிரிப்பது போல சாத்தனுடைய கண்ணியை அறியாது அதில் விழுந்து, தங்கள் ஆத்தும இரட்சிப்பை இழந்து போனார்கள். வேடனுடைய கண்ணிக்கு தப்பாத குருவியை போல, இவர்களுடைய ஆத்துமா அக்கிரமகாரனுடைய கண்ணியில் விழுந்தது. அந்த கண்ணியிலிருந்து தப்ப ஒரே வழி அப் 2:38 தான்.

**36.** இவ்வாறாக பிரியமானவர்களே நீங்கள் உங்கள் ஊழியக்காரர்களுக்கு லஞ்சத்தின் வடிவில் காணிக்கை கொடுத்து, சின்ன மீனைப் போட்டு பெரிய மீனைப் பிடித்து ஆசிர்வாதங்களை பெற்றதாக கூறுகிறீர்கள். அவ்வண்ணமாகவே உங்கள் ஊழியக்காரனும் தன் மந்தையில் உள்ள ஆடுகளை தன் வாய்க்கு ஆகாரமாகக் கொண்டு ஆசிர்வாதங்களை பெற்றதாக கூறுகிறார்கள். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ எந்த விதமான பிரயாசங்களோ உழைப்போ இல்லாது உயர வானத்திலிருந்து

உண்டாகும் ஆசிர்வாதங்களினாலும், கீழே ஆழத்திலிருந்து உண்டாகும் ஆசிர்வாதங்களினாலும் ஆசீர்வதிக்கப்பட்ட தேவனுடைய சுதந்தரம். எல்லாவிதமான நன்மைகளினாலும் ஆசிர்வதிக்கப்பட்ட ஜனங்களாக இருந்தார்கள். அவர்கள் உழைக்க தேவை இல்லை. மோசேக்கு லஞ்சம் கொடுத்து ஜெபிக்க கேட்டுக்கொள்ள தேவை இல்லை. யாருக்கும் லஞ்சம் கொடுக்க தேவையும் இல்லை. ஆனாலும் 40 ஆண்டுகள் தங்கள் வனாந்தர ஜீவியத்தில் எந்த விதமான குறைவும் இன்றி வாழ்ந்தார்கள்.ஆனாலும் அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்தை சுதந்தரிக்க தேவன் அனுமதிக்கவில்லை. அவர்கள் வனாந்தரத்திலே அழிக்கப்பட்டார்கள். தேவன் அவர்களிடத்தில் பிரியமாய் இருந்ததில்லை? மேன்மையான ஆசீர்வாதங்களை பெற்ற ஜனத்தை, வாக்குதத்தம் கொடுக்கப்பட்ட தேசத்திற்கு வழிநடத்தப்பட்ட ஜனங்களை சுதந்திரிக்க விடாதபடி வழியிலே அழித்தார். ஏன்? தேவன் அவர்களிடத்தில் பிரியமாய் இருந்ததில்லை? அவர்கள் தேவனுடைய வார்த்தைக்கு செவி கொடுக்கவில்லை.அவர்களுடைய கற்பனைகளுக்கும் பிரமாணங்களுக்கும் தங்கள் இருதயத்தை கடினப்படுத்தினார்கள். அவருடைய இம்மைக்குரிய ஆசிர்வாதங்களை மாத்திரமே நாடினார்கள்.ஆனால் கட்டளைகளுக்கு கீழ்ப்படிய விரும்பவில்லை. இம்மைக்குரிய நன்மைகளுக்காக மாத்திரமே தேவன் மீது பற்றுதலாய் இருக்க விரும்பினார்கள். அல்லேலுயா! ஸ்தோத்திரம் சொன்னார்கள் அதினால் தேவனோ அவர்களில் அதிகமான பேர்களிடத்தில் பிரியமாக இல்லை.

**37.** அக்கிரமங்கிளினாலும், பாவங்களினாலும் நீங்கள் மரித்தவர்களாய் இருந்தீர்கள்(எபே 2:11). தேவனோ நம் மீது இரக்கத்தில் ஐசுவரியம் உள்ளவராய், நம்மில் அன்பு கூர்ந்து, அவருடைய மிகுந்த அன்பினாலே, கிறிஸ்துவுடனே கூட நம்மை உயிர்பித்தார். கிருபையினாலே இரட்சிக்கப்பட்டோம். (எபே 2: 4,5). தேவபக்திக்கு ஏதுவான சத்தியத்தை அறிகிற அறிவும் விசுவாசமும் நமக்கு உண்டாயிற்று. ஆனாலும் சத்தியத்தை விட்டு விலகுகிற மனுஷருடைய கற்பனைகளுக்கு செவிகொடுத்தோம்(தீத் 1:13). அப்போஸ்தல உபதேசங்களுக்கு செவிகொடுக்காமல் போனோம். பிசாசின் உபதேசமாகிய திரித்துவத்தில் நாட்டம் கொண்டோம். பாவமன்னிப்பின் நிச்சயத்தை பெறாது, பாவமன்னிப்பை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் பெறாது, அதை அலட்சியப்படுத்தி, பாவமன்னிப்பை பெறாத ஒரு பேர் கிறிஸ்தவனாகவே வாழ்ந்து வந்தோம். ஸ்தாபன சபையை சார்ந்திருக்கிற தலைவர்களும், தொண்டர்களும் பாவமன்னிப்பின் நிச்சயத்தை பெற்றுக்கொள்ளவே இல்லை. அந்த அளவுக்கு அவர்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தில் உணர்ந்து குணப்படாமலும், தேவன் அவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படிக்கு, அவர்கள் இருதயம் கொடுமுழுத்திருக்கிறது. காதுகளினால் மந்தமாய் கேட்டு, தங்கள் கண்களை மூடிக் கொண்டார்கள். சமீபத்தில் எனது உறவினர் ஒருவர் கூறியதாவது: அப் 2:38ன் படி ஞானஸ்நானம் எடுக்க அவர் அறிந்த பகுதிகளில் யாரும் தயாராக இல்லை என்றார்.

**38. இப்பொழுது எந்தெந்த வகையில் நம்முடைய இருதயம் தேவனிடத்தில் நிலைவரப்படவில்லை என்பதைக்குறித்து சற்று தியானிப்போம்.** நாம் தேவனுடைய வார்த்தையை, லவோதிக்கேயா சபைக் காலத்து தூதன் கொடுத்த செய்தியை நமது முதுக்குப் பின்னால் எறிந்துவிட்டோம். மாறாக ஸ்தாபன சபைகளுடைய, தனி நபர்களின் ஆலோசனைகளுக்கு, பொதுவாகக் கூறப்போனால் மனுஷருடைய கற்பனைகளுக்கும், பிரமாணங்களுக்கும், கட்டளைகளுக்கும் கீழ்ப்படிகிறவர்களானோம். எடுத்துக்காட்டுக்காக:

1) **"தேவத்துவம்"**- பிதாவாகிய தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் உரிய இரகசியம் என்ன? (கொலோ 2:2). தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார்.(1 தீமோ 3:16). தேவத்துவத்தின் பரிபூரணம் எல்லாம் சரீரப் பிரகாரமாக கிறிஸ்துவுக்குள் வாசமாய் இருக்கிறது.(கொலோ 2:9). பிதாவாகிய தேவனுடைய பரிபூரணம் சரீரப் பிரகாரமாக கிறிஸ்துவுக்குள் இருக்கிறது. அப்படியானால் பிதாவாகிய தேவனும் கிறிஸ்தும் ஒருவரே அன்றி இருவர் கிடையாது. இயேசுவே கிறிஸ்து(அப் 5:42). கிறிஸ்து இயேசுவே கர்த்தர்.(2 கொரி 4:5). கர்த்தரே தேவன்(சங் 100:3). கர்த்தரையல்லாமல் தேவன் யார்? நம்முடைய தேவனையன்றி கன்மலையும் யார்? அந்த கன்மலை கிறிஸ்து (சங் 18:21, 1 கொரி 19:4) ஆக தேவன் ஒருவர். அவர் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. இதுவே வேதவாக்கியங்களுக்கு அடுத்த உபதேசம். ஒரு விசை பரிசுத்தவான்களுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசம். ஆனால் அதநாஷியஸ் என்ற ஒரு நபருடைய போதனைகளை கொண்டு பிதா ஒருவர், குமாரன் ஒருவர், பரிசுத்த ஆவி ஒருவர்: பிதா தேவன், குமாரன் தேவன், பரிசுத்த ஆவி தேவன்: பிதா கர்த்தர், குமாரன் கர்த்தர், பரிசுத்த ஆவி கர்த்தர் என்ற திரித்துவ உபதேசம் பிசாசினுடையது. இது லௌகிக சம்பந்தமான சாத்தானுடைய உபதேசம். சாத்தானால் மோசம் போனீர்கள். இந்த உபதேசத்தில் பிரதான கற்பனையின்படி முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்பு செலுத்த முடியாமல் உங்கள் அன்பை மூவரிடத்தில் பகிர்ந்துகொள்ள வேண்டியதாயிற்று. உங்களால் 100ஐ மூன்று சரிசமமாக பங்குபோட்டு மூவரிடத்தில் அன்பு செலுத்த முடியாது. ஆனாலும் இந்த திரித்துவ உபதேசம்தான் உலகம் முழுவதும் பரவிக்கிடக்கிறது. இவர்கள் பலத்துக்கொள்வது பொல்லாப்பிலிருந்து பொல்லாப்புக்கு நடந்தேருவதால் (எரே 9:3). இந்த உலகம் முழுவதும்பொல்லாங்கனுக்குள்தானே கிடக்கிறது.(1 யோ 5:19). நீங்கள் இந்த உபதேசத்தின்மேல் உங்கள் முழுவிசுவாசத்தைக்கொண்டு பல தேவர்கள் வழிபாட்டுக்கு சென்றுவிட்டபடியினால் தேவன் உங்களிடத்தில் பிரியமாக இல்லை.

2) **"ஞானஸ்நானம்"** - இது எதற்காக?. பாவமன்னிப்புக்கென்று. பாவமன்னிப்பு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தில் மாத்திரமே உள்ளது. நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உங்கள் பாவங்களுக்காக மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார். மூன்று நாட்களுக்குப் பின்பு உயிர்த்தெழுந்தார் என்ற விசுவாசத்தில் உங்கள் பாவங்களை அறிக்கைவிட்டு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெறும்போதுதான் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுகிறது. (1 கொரி 15:3, அப் 2:38). ஆனாலும் ஒருவன் ஞானஸ்நானம் பெற்ற பின், அவன் நடந்துகொள்ளும் விதத்தில் இருந்து, அவன் கனிகளில் இருந்து, அவன் உண்மையாகவே மனம்திரும்பி ஞானஸ்நானம் பெற்றவனா அல்லது மனமாற்றம் அல்லாது ஞானஸ்நானம் பெற்றவனா என்று நாம் அறிந்து கொள்ளலாம். பாவமன்னிப்பாகிய மீட்பு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது(எபே 1:7). மேலும் கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொள்கிற எவனும் இரட்சிக்கப்படுவான். கர்த்தருடைய நாமம் என்ன? அது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அல்லவா! இப்படியாக உங்களுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால்தான் இரட்சிப்பு இருக்கிறது. பாவத்திலிருந்து மீட்பு இருக்கிறது. இரட்சிப்பின் வழியே மக்களுக்கு அறிவிக்கவேண்டிய ஒரு ஊழியக்காரன் மக்களுக்கு இப்பிரபஞ்சத்துக்குரிய நன்மைகளுக்காகவே கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டிருக்கப் போதிக்கிறான். நீங்கள் பிதா குமாரன் பரிசுத்த ஆவி என உச்சரித்து ஞானஸ்நானம் பெறும்போது உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவது இல்லை. ஆனாலும் அறியாமையின் காலங்களில் தேவன் கானாதவர்போல் இருந்தார். ஆனால் இப்பொழுதோ சத்தியம் வெளிப்படுத்தப்பட்டபடியினால் நீங்கள்

யாவரும் சத்தியத்துக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று விரும்புகிறார். முதலாவது நீங்கள் அறியவேண்டியது பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்பது தேவனுடைய நாமம் அல்ல. இது தேவனுடைய ஸ்தானங்கள், பண்புகள் ஆகும். இதை ஆங்கிலத்தில் சொல்வோமானால் தேவனுடைய Attributes . தேவனுடைய நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்பதே. உலகில் அநேகப் பிதாக்கள் உண்டு, அநேக குமாரர்கள் உண்டு. ஆனால் இவர்கள் ஒவ்வொருவருக்கும் பற்பல நாமங்கள் - பெயர்கள் உண்டு. ஆனால் நம்முடைய விசுவாசத்திலுள்ள பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்ற தன்மைகளுக்கு ஒருவரே காரணகர்த்தர். அவர் பெயர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. ஆதலால் நீங்கள் பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்று உச்சரித்து தேவனுடைய பட்டப்பெயர்களால் ஞானஸ்நானம் பெறும்போது அதற்கு வல்லமையில்லை. அதில் இரட்சிப்பு இல்லை. அதனால் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவது இல்லை. நீங்கள் இன்னும் உங்கள் பாவத்திலே மரித்துக்கொண்டிருக்கிறீர்கள். ஆதலால் நீங்கள் உங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொண்டாலும் நீங்கள் ஒரு பேர் கிறிஸ்தவர்களாகவே இருக்கிறீர்களே அன்றி உண்மையான கிறிஸ்தவர்களாக இல்லை. ஆதலால் தேவன் உங்களிடத்தில் பிரியமாக இல்லை. உங்களுக்கு ஸ்தாபன சபைகள்மேல்தான் பிரியம். அதுபோல ஸ்தாபன சபைகளுக்கு உங்கள் மேல்தான் பிரியம். ஆதலால் உங்கள் இருவர்மீதும் தேவனுக்குப் பிரியமில்லை.

3) **ஊழிய அழைப்பு:** உங்களில் அநேகர் தேவனுடைய பணிக்காக ஊழிய அழைப்பு இல்லாமல், தேவனுடைய சித்தத்திற்குப் புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்து வருகிறார்கள். நீங்கள் தேவனால் ஏற்படுத்தப்பட வேண்டும்.(எபே 4:13). நீங்கள் வேதாகம கலாசாலையில் படித்து, பட்டங்கள் பெற்று தேவனுடைய ஊழியத்துக்கு வருகிறீர்கள். இந்த அழைப்புக்கு வேத வாக்கியங்களில் எங்கும் ஆதாரங்கள் கிடையாது. அநேகர் வேலை வாய்ப்பு எதுவும் இல்லாததால் முடிவில் தாங்களே ஊழியத்தைத் தெரிந்துக்கொண்டு பெயருக்கு தேவஅழைப்பு என்று கூறி ஊழியத்துக்கு வருகிறார்கள். இவைகளெல்லாம் வேதவாக்கியங்களின் அடிப்படையில் ஆதாரமற்ற அழைப்பு. தேவன் இவர்களில் பிரியப்படுவது இல்லை.

4) **ஐந்து வகை ஊழியங்கள்:** ஐந்து வகை ஊழியத்தில் (எபே 4:13) அனைத்து ஊழியங்களும் வரங்களாகும் (Gifts Of God to the Church ). இந்த ஐந்து வகை ஊழியங்களுக்கும் தேவனே அழைப்புக் கொடுக்கிறார், அவரே நியமிக்கிறார். இந்த ஐந்து வகை ஊழியங்களும் தனித்தனி தன்மையுடையது. ஒன்றை மற்றொன்றோடு இணைக்க, கலக்கக் கூடாது. ஒருவர் ஒரு வரத்தை மட்டுமே கொண்டவராக இருப்பார். ஆனால் நீங்கள் அனைத்து வரங்களையும் ஒருவராகவே எடுத்துக் கொள்கிறீர்கள். இதுவும் தவறு. ஆதலால் தேவன் உங்களில் பிரியப்படுவது இல்லை. ஏனென்றால் நீங்கள் அவருடைய சித்தத்திற்கு புறம்பாக இருக்கிறீர்கள்.

5)**மேய்ப்பன்:** ஒரு மேய்ப்பனுடைய தகுதிகள் தீத்து, தீமோத்தேயுவில் கூறப்பட்டுள்ளது. ஆனால் இந்த தகுதிகளை உங்களிடத்தில் காண்பது அரிதாக இருக்கிறது. உங்களில் பலர் பல மனைவிகளை உடையவர்களாக இருக்கிறார்கள். சிலர் பெரிய வீடு சின்ன வீடு உடையவர்களாக இப்பிரபஞ்சத்தில் வாழ்கிறார்கள். இவர்கள் எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாய் இருக்கிற பெண் பிள்ளைகளுடைய வீடுகளில் நுழைந்து அவர்களை வசப்படுத்திக் கொள்கிறார்கள். உங்களை ஒரு மந்தையின் மேய்ப்பன் என்று கூறிக்கொண்டு தேவனுடைய வசனத்தை சபைக்குப் போதிப்பதிலும், அவர்களுக்காக அதாவது மந்தையிலுள்ள ஆடுகளுக்காக இடைவிடாமல் ஜெபத்திலும் விண்ணப்பத்திலும் தரித்திருக்காது (அப் 6:6) உலகம் சுற்றும் வாலிபனாக பிரயாணம் செய்து வருகிறீர்கள், வெளிநாடுகளில் இருந்து வரும் ஊழியக்காரர்களுக்கு வால்பிடித்து அவர்களுக்கு பின்னாக ஊர் சுற்றிதிரிகிறிர்கள். ஏன்? பண வேட்டைக்காக அன்றி வேறு எதற்காக? இதுவே உங்கள் ஊழிய இலட்சணத்தின் எல்லையாக இருக்கிறது. இதனால் நீங்கள் உங்களுடைய ஊழிய அழைப்பை உறுதி செய்ய முடியவில்லை(2 பேது 1:10). வேதத்தைப் போதிக்க வேண்டிய மேய்ப்பர்கள் தேவனை அறியாதிருந்து அவருக்குத் துரோகம் பண்ணுகிறார்கள். பிதாவுக்கும் குமாரனுக்கும் உள்ள இரகசியம் அவர்களுக்குத் தெரியவில்லை. காலத்தையும் அதன் நேரத்தையும் அவர்களால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. மந்தைக்கு மாதிரியாக இருக்க முடியவில்லை. காணாமல் போன ஆட்டை தேடிக் கண்டுபிடிக்க விருப்பமில்லை. கொழுத்த ஆடாக இருந்தால் தேடி கண்டு பிடிக்கிறார்கள். நலிந்த ஆடாக இருந்தால் அதைப் பற்றிக் கவலைபடுவதே இல்லை. இவ்வாறாக மந்தையிலுள்ள ஆடுகளை மேய்க்காது தங்களை மந்தையிலுள்ள ஆடுகளைக் கொண்டு மேய்த்துக்கொள்கிறார்கள். இப்படியாக இக்காலத்து மேய்ப்பவர்களைக் குறித்து நான் எழுதிக்கொண்டே போகலாம். ஆனால் விரும்பவில்லை. ஏனென்றால் தேவனுக்கு இவர்கள்மேல் பிரியமில்லை.

6) **மேய்ப்பர்களின் பொருளாசை** - ஊழியக்காரர்களிடம் பொருளாசை என்னும் விக்கிரகாராதனை (எபே 5:4) காணப்படுகிறது. சபை மக்களிடமிருந்து தசமபாகம், காணிக்கை, நன்கொடை, ஊழியத்தில் பங்கு என பற்பல திட்டங்களை அவர்கள் முன் வைத்து பணம் பறிக்கிறார்கள். ஊழியக்காரர்கள் சபையில் உள்ள கரும் பலகையில் வரவு செலவு எழுதிப்போட்டு பணம் வசூல் செய்கிறார்கள். ஒரு முறை ஒரு சபை விசுவாசியின் வீட்டிற்கு நான் தெய்வ செயலாக செல்ல நேர்ந்தது. அப்பொழுது அவர்கள் தங்களது பாஸ்டருடைய பொருளாசையைக் குறித்து என்னிடம் பேசினார்கள். பாஸ்டர் சபையை தனது வீடு மாடியில் ஒரு கொட்டகை போட்டு நடத்துகிறார். தனது வீட்டு மாடியில் உள்ள ஓலைக் கொட்டகையைப் பிரித்துவிட்டு ஒரு மாடி கட்டி எழுப்ப விரும்பினார். சபையார் வீடு வீடாக ரூ. 5000 - ரூ. 10000 நன்கொடையாகக் கொடுங்கள் எனக் கேட்டார். பாருங்கள் சபையாரின் பணத்தினாலே தனக்கு சொந்தமான தன் வீட்டில் ஒரு மாடி கட்டி எழுப்ப விரும்புகிறார். நாங்கள் பல லட்சங்கள் போட்டு சபை பெயரில் மாடி இவருக்குக் கட்டிக் கொடுக்க பின் அதன் உரிமை யாருக்கு? அது பாஸ்டருக்குத்தானே அவர் எந்த அளவுக்கு சபையாரை ஏமாற்றுகிறார் பாருங்கள் என்று கூறினார். நானும் அவருடைய கருத்தை ஆதரித்தேன். இப்படியாக மேய்ப்பருடைய பொருளாசை குறித்து ஏன் ஊழியத்தின் பாதையில் ஏன் கண்களினால் கண்டும், காதுகளினால் கேட்டும் இருக்கிறேன். இவர்களுடைய வீடு வஞ்சகத்தினாலும் கொடுமையினாலும் நிறைந்துள்ளது. பல வகையில் ஓயாமல் கொள்ளை நடக்கிறது. தங்கள் வீட்டுக்கு, தன் சபைக்கு பொல்லாத ஆதாயத்தை தேடிக்கொண்டார்கள். இவர்களுடைய காரியங்களெல்லாம் கேடானவை. பொல்லாப்பு செய்யவே இவர்களுடைய இரு கைகளும் கூடும். ஆதலால் தேவன் இவர்களிடத்தில் பிரியமாயில்லை.

7) **இரு எஜமான்களுக்கு ஊழியம்:** அநேகர் இரு எஜமான்களுக்கு ஊழியம் செய்து ஊதியம் பெறுகிறார்கள். வாரத்தின் ஆறு நாட்கள் இப்பிரபஞ்சத்தின் அதிபதிக்கு ஊழிய ஊதியம். வாரத்தின் கடைசி நாள் கிறிஸ்துவுக்கு ஊழியம், ஊதியமாக தசமபாகம் மற்றும் காணிக்கை வரவுகள். ஒரு நல்ல பிழைப்பு. அதாவது முதல் ஆறு நாட்கள் சாத்தானுக்கு ஊழியம் செய்கிறார்கள். கடைசி நாள் தேவனுக்கு ஊழியம் செய்கிறேன் என்கிறார்கள். அனால் இரு எஜமான்களுக்கு ஒருவனும் ஊழியம் செய்யக் கூடாது. ஏனென்றால் ஒருவனை பகைத்து மற்றவனை சிநேகிப்பான். அல்லது ஒருவனை பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டை

பண்ணுவான்(மத் 5:24). பாருங்கள் ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பு இல்லை(1 யோ 2:15). தேவனுடைய இராஜ்ஜியத்தில் ஊழியம் செய்கிறவன் தேவனுக்கு பயந்து நடக்க வேண்டும். இப்பிரபஞ்சத்து அதிபதி, இந்த சாத்தானின் ஏதேனில் பணி செய்கிறவன் சாத்தானுக்கு பயந்து நடக்க வேண்டும். ஆக ஒரே நேரத்தில் நீ இரு எஜமாங்களுக்குப் பயந்து நடந்து பணி செய்ய முடியாது. (2 இரா 13:41 ஒரு எடுத்துக்காட்டு). யாதொருவன் இரு நினைவுகளால் குந்திக் குந்தி நடக்க முடியாது. ஒன்று கர்த்தரைப் பின்பற்றி அவருக்கு ஊழியம் செய் அல்லது சாத்தான் இப்பிரபஞ்சத்தின் தேவனைப் பின்பற்றி, உலகத்தைப் பின்பற்றி அதற்கு ஊழியம் செய்(1 இரா 18:21 எடுத்துக்காட்டு). மேலும் ஒருவன் தேவனுக்கென்று ஊழியம் செய்ய, அவரால் அழைக்கப்பட்டபின், அவன் இப்பிரபஞ்சத்தில் தன் பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ள முடியாது. ஒன்று இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச் சேவகனாய் தீங்கு அனுபவி. அல்லது சாத்தானுக்கு நல்ல போர்ச் சேவகனாயிருந்து உலகத்தை அனுபவி. இவ்விரண்டில் ஒன்றை நீ தீர்மானித்துக்கொள்ள வேண்டும்(லூக் 16:13, 2 தீமோ 2:4). ஆக இரு எஜமான்களுக்கு பலர் துணிகரமாக் ஊழியம் செய்து ஊதியம் பெறுவதினால் தேவன் அவர்களிடத்தில் பிரியமாயில்லை.

8) **பெண்கள் ஊழியம்:** பெண்கள் ஊர் ஊராக சுற்றித் திரிந்து பரிசுத்த வேதாகமத்தைக் கரத்தில் கொண்டு, பொதுக் கூட்டங்களில் அதாவது ஆண்பெண் இருபாலரும் கூடியுள்ள பொதுஸ்தலங்களில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள். தகாத காரியங்களைப் பேசுகிறார்கள். வீண் அலுவல் காரிகளாக இருக்கிறார்கள், அலப்புகிற வாயையுடவர்களாய் இருக்கிறார்கள். ஆண்கள் பெண்கள் கூடும் விசுவாசிகளைக் கொண்ட சபையிலே பெண்கள் பேசத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் அமர்ந்து இருக்கும்படி வேதம் கட்டளை இடுகிறது(1 கொரி 14:34). ஏனென்றால் புருஷனானவன் தேவனுடைய சாயலும் மகிமையுமாயிருக்கிறான். ஆனால் ஸ்திரீயோ புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள். இதனால் பெண்கள் புருஷர்கள் மத்தியில் பிரசங்கிக்கக் கூடாது. மேலும் ஸ்திரீ புருஷனலிருந்து தோன்றியவள். புருஷன் ஸ்திரீயிலிருந்து தோன்றினவன் அல்ல. ஆதலால் ஸ்திரீ புருஷனுக்குப் பிரசங்கிக்க முடியாது. மேலும் புருஷன் ஸ்திரீக்காக சிருஷ்டிக்கப்பட்டவன் அல்ல. ஸ்திரீயே புருஷனுக்காக சிருஷ்டிக்கப்பட்டவள். ஆதலால் அவள் புருஷர்கள் மத்தியில் அவர்களுக்கு போதனை செய்ய முடியாது (1: கொரி 11:7-9) மேலும் கிறிஸ்து சபைக்கு தலை . ஆதலால் தலைதான், சரீரத்தின் இதர பாகங்களுக்கு போதிக்க வேண்டும். சபை கிறிஸ்துவுக்கு முற்றிலுமாக கீழ்படிய வேண்டும். சபை கிறிஸ்துவுக்கு உபதேசம் பண்ண முடியாது. அவ்வண்ணமாகவே மனைவிக்கு தலை புருஷன் . மனைவி புருஷனுக்கு எந்த காரியத்திலேயும் கீழ்படிந்திருக்க வேண்டும். ஆதலால் மனைவி புருஷனுக்கு உபதேசிக்க முடியாது. அப்படி உபதேசிப்பது அவள் தன் ஸ்தானத்தின் கட்டுபாட்டுக்குள் இல்லை. ஏனென்றால் அவள் தேவனுடைய சிந்தனையில் இல்லை. அவள் தேவ சித்தத்திற்கு புறம்பானவள்(எபே 5:22-24) தேவனுடைய வார்த்தைக்கு/ உபதேசத்திற்கு / போதனைக்கு கட்டுப்படாத ஒரு ஸ்திரீ தன் புருஷனுக்கு எப்படி கட்டுபட்டு இருப்பாள்? அவள் தன் புருஷன் மீது அதிகாரம் செலுத்துகிரவளாகவே இருப்பாள். இராஜாவின் வார்த்தை எங்கு உண்டோ அங்கு அதிகாரம் உண்டு.(பிர 8:5) ஒருவன் தேவனுடைய வார்த்தையை மிக்க அதிகாரத்தோடு பிரசங்கிக்கிறான். ஆனால் ஒரு ஸ்திரீ புருஷர்கள் மத்தியில் அதிகாரத்தோடு பிரசிங்கிக்க முடியாது. ஏனென்றால் தேவனுடைய வார்த்தையில் கடிந்து கொள்ளுதல், கண்டனம் செய்தல் போன்ற அதிகாரங்கள் உண்டு. ஆனால் உங்கள் பெண்கள் பிரசிங்கிக்கிறார்கள் திரித்துவ ஸ்தாபன சபைகள் அவர்களை ஆதரிகின்றன. தேவனுடைய வார்த்தைக்கு மாறாக செயல்படுகிற உங்கள் இருவர் மீதும் தேவன் பிரியமாக இல்லை.

9.**பொது ஸ்தலங்களில் பெண்களின் பணி:**பொது ஸ்தலங்களில் பெண்களின் பணி செய்வதால் தேவனுடைய நாமம் துஷிக்கப்படுகிறது. தகாதவைகளை செய்யும்படி தேவன் இவர்களை கேடான சிந்தனைக்கு ஒப்புக்கொடுத்தார் .ஆதலால் இவர்களுக்கு வீட்டில் தரித்திருக்க மனமில்லை .இது குறித்து தேவனுடைய ஊழியக்காரனும், இயேசு கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனுமாகிய பவுல், பொதுவான விசுவாசத்தின் படி, உத்தம குமாரனாகிய தீத்துக்கு எழுதும்போது, தேவவசனம் தூஷிக்கப்படாதபடிக்கு பாலிய ஸ்திரீகள் (YOUNG WOMAN) வீட்டில் தரித்திருக்கிறவர்களாக (KEEPERS AT HOME) இருக்க வேண்டும் என அறிவுரை கூறுகிறான்.(தீத் 2:5) அதாவது ஒரு ஸ்திரீ தன் வீட்டில் தரித்திருக்காது வெளியில் தரித்திருப்பாளாகில் அவளால் தேவனுடைய வசனம், நாமம் தூஷிக்கப்படுகிறது என அர்த்தம். பொதுவாக ஒரு பெண் விவாகம் பண்ணுவதும், பிள்ளைகளை பெற்றெடுப்பதும், வீட்டில் தரித்திருந்து தன் வீட்டை நடத்துவதுமே அவருடைய கடமை. இதில் தவறினால் விரோதியானவன் நிந்திக்கிறதுக்கு அவள் இடம் கொடுக்கிறாள்.(1 தீமோ5:14) பொதுவாக GIRL என்றால் அவள் திருமணம் ஆகாத ஒரு வாலிப பெண். YOUNG WOMAN என்றால் அவள் திருமணம் ஆனா ஒரு இளம் பெண் என்று அர்த்தம்.ஆக திருமணம் ஆன ஒரு இளம் பெண் தன் வீட்டில் தரித்திருந்து தன் குடும்பத்தை நன்கு நடத்துகிறவளாக இருக்க வேண்டும். மேலும் சங் 68:12,13 வசனங்களை நீங்கள் தியானிக்கும்போது ஒரு ஸ்திரீ வீட்டில் அடுப்பின் அடியில் தரித்திருக்கிரவளாக இருக்க வேண்டும் என்று காண்கிறோம். ஆக உங்கள் ஸ்திரீ வீட்டுக்குள்ளே இருந்தால் அவள் கிறிஸ்துவுக்குள், வீட்டுக்கு வெளியே இருந்தால் அவள் சாத்தானுக்குள். ஆனால் உங்கள் பெண்கள் வீட்டுக்கு வெளியே தரித்திருப்பதையே விரும்புகிறார்கள். நீங்களும் உங்கள் ஸ்தாபன சபைகளும் அவர்களை ஆதரிக்கிறீர்கள்.இது குறித்து லவோதிக்கேயா சபை கால தூதனாகிய நம்முடைய சகோதரன் வில்லியம் மாரியன் பிரன்ஹாம் கூறும்போது: பெண்கள் பொதுஜன வேலைகளில் இருக்கிறார்கள், (அதாவது பெண்கள் பொது இடங்களில் பணிபுரிகிறார்கள்) அவர்கள் இரட்சிக்கப்பட்டால் அப்படி செய்ய மாட்டார்கள். (அதாவது அவள் இரட்சிக்கப்பட்டவளாக இருந்தால், அவள் பொது இடங்களுக்கு சென்று பணி செய்ய மாட்டாள்.) பரிசுத்த ஆவி அவளை வழிநடத்துகிறது என்று கூறுகிறாயா? வார்த்தைக்கு முரணான ஒன்றை பரிசுத்த ஆவி என்று அழைக்காதே என்கிறார். அதாவது பரிசுத்த ஆவியை பெற்ற ஒரு ஸ்திரீ பொது இடங்களுக்கு சென்று பணிபுரிய மாட்டாள். அவள் வீட்டில் தரித்திருக்கிரவளாக இருப்பாள் என்கிறார்.ஆனால் இந்நாட்களில் இப்பிரபஞ்சத்தின் பெண்கள் தன் வீட்டில் உண்ண உணவு, உடுக்க உடை, மற்றும் அணைத்து வசதிகள் இருந்தாலும் அவள் கால்கள் வீட்டில் தரித்திருக்க அவள் விரும்புவது இல்லை. எங்காவது சென்று ஒரு வேலை செய்ய வேண்டும் பணம் சம்பாதிக்க வேண்டும், கை நிறைய பணம் வைத்துக்கொண்டு ஆடம்பரமாக செயல் பட வேண்டும் என்றே விரும்புகிறாள். அவள் வீட்டில் தரித்திருக்க கூடாது என்ற மனப்பக்குவத்தில் பிசாசின் வலையில் விழுந்து பொது இடங்களில் பணிக்கு சென்று தன் மனம் போன போக்கில் வாழ விரும்புகின்றாள். ஏனென்றால் அவள் கணவன் பெண் சுபாவம் கொண்டவன். ஆதலால் தன் மனைவியை அடக்கி ஆள அவனால் முடியவில்லை. ஆதலால் அவள் தேவனால் புகழப்படத்தக்கவள் அல்ல. ஏனென்றால் அவள் இரட்சிக்கபடவும் இல்லை,

பரிசுத்தஆவியை பெறவும் இல்லை. அவளால் தேவனுடைய வசனம்/நாமம் தூஷிக்கப்ப்டுகிறது. ஆதலால் தேவன் அவர்களிடத்தில் பிரியமாக இல்லை.

10. **பண ஆசை எல்லா தீமைக்கும் வேர்:** பண ஆசையை மையமாக கொண்டு இந்நாட்களில் கணவன் மனைவி ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து வாழ்கிறார்கள். ஒரு இல்லற வாழ்க்கை அவர்களிடத்தில் தேவன் விரும்பும் விதமாக காணப்படுவது இல்லை. இது குறித்து அப்.பவுல் கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களுமாயிருக்கிற தேவனுடைய சபைக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுது கொள்ளுகிற அனைவருக்கும் எழுதும்போது: உபவாசத்திற்கும், ஜெபத்திற்கும், தடை வராத படிக்கு கணவன் மனைவி இருவரும் சில காலம் பிரிந்திருக்க வேண்டும் என்று ஒருவொருக்கொருவர் சம்மதித்தாலன்றி, ஒருவரை விட்டு ஒருவர் பிரியக்கூடாது என்று புத்திமதி கூறுகிறான்.(1 கொரி1:2, 7:5) அதாவது திருமணம் ஆன கணவன் மனைவி இருவரும் உபவாசம், ஜெபம் இதன் காரணமாக ஒருவொருக்கொருவர் சம்மதித்தால் அன்றி பிரிந்திருக்க கூடாது. சம்மதித்தால் மாத்திரமே பிரிந்திருக்கலாம். நீங்கள் பிரிந்து சில காலம் வாழும்போது அந்த காலகட்டத்தில் சாத்தான் உங்களை மாம்சத்தின் இச்சைகளுக்கும், கண்களின் இச்சைகளுக்கும் தூண்டி விட வாய்ப்பு உள்ளது. அநேகருடைய காரியங்களில் பிரிந்த வாழ்க்கை ஒரு விபசார வாழ்கையாக மாறிவிடுகிறது. பணம் சம்பாதித்தாலே பிரதானமாக கொண்டு அநேக குடுமபங்களில் இன்று இது தான் நடக்கிறது. கணவன் மனைவி பிரிந்து ஆளுக்கொரு இடத்தில் பணி புரியும் போது ஒரு பால் மற்றொரு பால் இனத்தாரோடு கள்ளத்தொடர்பு உண்டாகி அந்த குடும்பம் சீர்குலைகப்படுவதை நாம் கண்கூடாக காண்கிறோம். இவை எல்லாவற்றிற்கு காரணம் பண ஆசை.அதுவே எல்லா தீமைக்கும் வேர்.மனைவி புருஷனுடைய சரீரத்தின் ஒரு பாகமாக இருக்கிறாள். ஆதலால் அந்த சரீரத்தை இரு பாகமாக பிரிக்க முடியாது. இருவரும் ஒரே சரீரமாகவே கூடி வாழ்வதே இல்லற வாழ்க்கை. ஒரு மனிதன் தனிமையாக வாழக்கூடாது, அது முடியாது என்பதற்காகவே தேவன் அவனுக்கு ஒரு ஏற்ற துணையை அவனுடைய சரீரத்திலிருந்து ஒரு பாகமாக எடுத்து அவனுக்கு கொடுத்தார். ஆனால் துணையை கொடுத்த பிறகும் அவர்கள் பிரிந்து வாழ்வார்கள் ஆகில் அது தேவனுடைய நியமத்தை சீர்குலைக்கும் ஒரு பாதக செயலாகும். ஆக பொருளாசை நிமித்தமாக கணவன் மனைவி இருவரும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து வாழ்ந்து வேதவாக்கியங்களுக்கு முரணாக வாழ்வதால் தேவன் உங்களிடத்தில் பிரியமாய் இல்லை. ஆனால் சாத்தானின் ஆளுகையின் கீழ் உள்ள ஸ்தாபன சபைகள் உங்களை ஆதரிக்கும்.

11. **ஒரு ஸ்திரீயின் புறம்பான அலங்கரிப்பு:** இது குறித்து அப்பேதுரு ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே கீழ்படிதலுக்கு தெரிந்துகொள்ளபட்டவர்களுக்கு எழுதுகிறதாவது: பெண்கள் மயிரைப் பின்னி, பொன் ஆபரனகளை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாக இருக்க வேண்டாம். மாறாக அழியாத அலங்காரமாய் இருக்கிற சாந்தமும் அமைதலும் உள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாக இருக்ககடவது. அதுவே தேவனுடயா பார்வையில் விலையேறப்பெற்றது எங்கிறான் (1 பேது 3:3,4) இங்கு நாம் காண்பது என்ன? ஒரு பெண் தன் தலை மயிரை பல வகையிலே/ பல விதமாக பின்னி தன்னை அலங்கரிக்க கூடாது. இரண்டாவதாக அவள் பொன் ஆபரணங்களை அணிந்து தன்னை புறம்பாக அலங்கரிக்க கூடாது. அதாவது பொன்னினால் செய்யப் பட்ட கம்மல், மூக்குத்தி, வளையல், கழுத்து மாலை (செயின் ) போன்ற அநேக ஆபரணங்களை பெண்கள் அணிவது உண்டு. உன்னை அலங்கரிக்கும் நோக்கத்தில் நீ எந்த விதமான ஆபரணங்களையும் அணியக் கூடாது. கிறிஸ்தவ மார்க்கம் வெளிப்புற அழகு அல்ல. மாறாக அது உட்புறத்தில் உள்ள அழகு ஆகும். அது பரிசுத்த ஆவியின் அபிஷேகமாகும். சிலர் திருமண வேளைகளில் ஒரு பெண் அணியும் தாலிக்கொடி அல்லது மோதிரம் புறம்பான அலங்கரிப்பு என்பார்கள். இது ஒரு வீண் வாக்குவாதம். திருமணத்தில் அணியும் தாலிக்கொடியையோ அல்லது மோதிரத்தையோ யாரும் அலங்கரிபுக்காக அணிவதில்லை. மாறாக அவர்கள் திருமண வேளையில் செய்யும் ஒப்பந்தத்திற்கு அடையாளமாக அணியப்படுகிறது. அதுவும் தன் இன ஜன மக்கள் மத்தியில் அவர்களுடைய பழக்க வழக்கத்திற்கு ஏற்றவாறு தாலிக்கொடியோ அல்லது மோதிரமோ அணியப்படுகிறது. அடுத்து உயர்ந்த வஸ்திரங்களையும் அணியகூடாது. விலை உயர்ந்த வஸ்திரங்கள் எதற்காக? அது ஒரு அலங்கரிபுக்காகத்தானே. நாம் பொதுவாக ஒரு வைபவத்துக்கு செல்லும்போது நன்கு விலை உயர்ந்த ஆடைகளை அணிந்து கொண்டு செல்கிறோம் அது எதற்காக? பிறர் முன்னிலையில் எடுப்பாக / ஆடம்பரமாக / தோரணையாக நாம் நம்மை காட்டிக்கொள்ள வேண்டும். பிறர் நம்மை மதிக்க வேண்டும் என்ற ஒரு மனப் போக்கை கொண்டுதானே. ஆக இப்படிப்பட்ட அலங்கரிப்பு நமக்கு தேவையா? அது தேவனுடைய சபைக்கு தேவை இல்லை என பேதுரு எழுதுகிறான்.ஆனால் ஸ்தாபன சபை ஊழியர்கள் புறம்பான அலங்கரிப்பை ஆதரிக்கிறார்கள். ஏனென்றால் இவர்களுக்கும் இவர்களை பின்பற்றுகிற விசுவாசிகளுக்கும் தேவனுடைய சத்தியத்திற்கு /வார்த்தைக்கு கீழ்படியாமல் போகிறதே வழக்கமாயிற்று . இவர்கள் தேவனுடைய ஆலோசனைகளை / புத்திமதிகளை ஏற்றுகொள்ளவே மாட்டார்கள். ஏனென்றால் அவர்களை வழிநடத்துவது இப்பிரபஞ்சத்தின் அதிபதியேயன்றி தேவன் அல்ல.ஒரு பெண்ணுக்கு தேவை அவளுடைய நற்குணம், அது தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது. அப்படியானால் ஒரு பெண்ணின் நற்குணத்தை தவிர வேறு எந்த ஒரு அலங்கரிப்பும் தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது அல்ல. அவை யாவும் வீண் என்று பேதுரு ஆலோசனை கூறுகிறான். பாருங்கள் எலியேசர், ரெபெக்காளை பார்த்து நான் தண்ணீர் குடிக்க உன் குடத்தை சாய்க்க வேண்டும் என்றான். அவன் தன்னுடைய ஒட்டகங்களுக்காக தண்ணீர் கேட்கவில்லை. ஆனால் அவளோ உமக்கு மாத்திரம் அல்ல, உம்முடைய ஒட்டகங்களுக்கும் தண்ணீர் வார்ப்பேன் என்றால். அவள் தன் குணத்தினால் தன்னை அலங்கரித்திருந்தாள். மேலும் அந்நாட்களில் அநேக ஸ்திரீகள் தங்கள் ஆஸ்திகளால் கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்து கொண்டு வந்தார்கள்.(லுக் 8:3) அதாவது பெண்கள் தங்களது செல்வங்களை ஊழியங்களுக்காக செலவு செய்தார்கள். அது அவர்களுடைய நற்குணத்தையே / பண்பையே எடுத்துக்காட்டுகிறது. இன்றைய பெண்கள் வெண்மை ஆடை அணிந்து இயேசு கிறிஸ்துவின் பெயரை சொல்லி வீடு வீடாக, தெருத் தெருவாக, ஊர் ஊரக சென்று பண வேட்டை ஆடுகிறார்கள். இதை அவர்கள் சார்ந்திருக்கும் சபை ஆதரிக்கிறது.முக்கியமாக தி பெந்தெகொஸ்தே சபை. அன்று தன் குடும்ப செல்வதை பெண்கள் ஊழியத்துக்கு பயன்படுத்தினார்கள். இன்று ஊழியத்தின் பெயரில் தங்கள் குடும்ப செல்வத்தை பெருக்குகிறார்கள். இதனால் தான் தேவன் உங்களிடத்தில் பிரியமாய் இல்லை. உங்களை ஆதரிக்கும் ஸ்தாபன சபைகள் மீதும் தேவனுக்கு பிரியம் இல்லை.

12. **கர்ப்பத்தடை:** இது குறித்து ஏற்கெனவே முன் பகுதியில் எழுதியுள்ளேன். இதுவும் தேவன் விரும்பாத தேவனுடைய நோக்கத்திற்கு எதிரான ஒரு பாதக செயலாகும். தேவன் எதற்காக ஆண் பெண் இருவரையும் சிருஷ்டித்து உருவாக்கினாரோ,

எதற்காக திருமணத்தை ஏற்படுத்தினரோ அந்த நோக்கத்தை சீர்குலைக்கும் சாத்தனுடைய வேலையாகும். ஆதலால் கர்ப்பத்தடை செய்யும் பெண்கள் மீது தேவன் பிரியமாக இல்லை .

13. **விவாகரத்து:** ஒரு ஆண் பெண் திருமண நிச்சயத்தின் போது இந்த காரியம் கர்த்தரால் வந்தது என்கிறோம். மேலும் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்ககடவன் என்றும் நமக்கு அறிவுரை கூறப்பட்டுள்ளது.(மாற் 10:9) விவாகரத்து இந்நாட்களில் நமது ஜனங்கள் மத்தியில் அதிகமதிகமாக காணப்படுகிறது. காரணம் என்ன? அழகு பார்த்து , பொருளாதார ரீதியை பார்த்து , பெண் வேலை வாய்ப்பை பார்த்து, அவள் படிப்பு அந்தஸ்த்தை கொண்டு பொதுவாக திருமணம் நிச்சயிக்கப்படுகிறது. முடிவில் இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது என்று ஒரு பொய்யை சத்தியமாக கூறுவார்கள். ஒரு பெண்ணின் குணத்தை குறித்து அவளுடைய ஆவிக்குரிய வாழ்க்கை குறித்து கிறிஸ்துவோடு அவள் வைத்துள்ள தொடர்பை குறித்து யாரும் கவலைப்படுவதில்லை. இதனால் காலப்போக்கில் அவர்களுக்குள் மனஸ்தாபம் ஏற்படுகிறது. அதன் முடிவு விவாகரத்து. ஆனால் தேவனுடைய வார்த்தை இவ்வண்ணமாக கூறுகிறது. எவனாகிலும் தான் மனைவியை தள்ளி விட்டு வேறு ஒருத்தியை விவாகம் பண்ணினால் அவன் அவளுக்கு விரோதமாய் விபச்சாரம் செய்கிறவனாக இருக்கிறான். அவ்வண்ணமாகவே மனைவியும் தான் புருஷனை தள்ளி விட்டு வேறு ஒருவனை விவாகம் பண்ணினால் அவளும் விபச்சாரம் செய்கிறவளாய் இருப்பாள்.(மாற் 10:11,12) ஏனென்றால் விவாக ஒப்பந்தம் மரணம் கணவன் மனைவியை ஒருவரில் இருந்து ஒருவரை பிரிக்கும் மட்டும். மரணம் அவர்களில் ஒருவரை பிரிக்காத நிலையில் விவாகரத்து செய்து ஒரு ஆண் மற்றொரு பெண்ணை, பெண் மற்றொரு ஆணை திருமணம் செய்தால் அவர்களது வாழ்க்கை விபசார வாழ்க்கை ஆகும். ஏனென்றால் அந்த புருஷனுக்கு அவன் மனைவியாக வேறொருத்தி உயிரோடு இருக்கும் போது அவன் மற்றொரு பெண்ணை திருமணம் செய்கிறான். அவ்வாறாக அந்த பெண்ணும் தன்னுடைய புருஷன் உயிரோடு இருக்கும்போது மற்றொரு நபரை திருமணம் செய்கிறாள். இதனால் இவர்களுடைய இல்லற வழக்கை ஒரு விபச்சார வாழ்க்கை ஆகும். ஏனென்றால் இருவருக்கும் ஏற்கெனவே ஒரு மனைவி, ஒரு புருஷன் உயிரோடு இருகிறார்கள். மனைவியோ கணவனோ உயிரோடு இருக்கும்போது மற்ற நபரை திருமணம் செய்வது விபச்சார வாழ்கை ஆகும். ஆனால் முடியாத சூழ்நிலையில் விவாகரத்து ஏற்பட்டால் அதன் பின்பு ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் அவர்கள் மறுமணம் செய்ய முடியாது. இருவரில் ஒருவரை மரணம் சந்திக்குமாயின் அதன் பின் மற்ற நபர் வேறொருவரை திருமணம் செய்து கொள்ளலாம். ஆனால் இந்நாட்களில் அநேக ஊழியக்காரர்கள் தங்கள் மனைவியை தள்ளி விட்டு பின் மற்றொருத்தியை விவாகம் செய்கிறார்கள். அல்லது இரு மனைவிகளை உடையவர்களாகவே இல்லற வாழ்க்கை வாழ்கிறார்கள். அல்லது பெரிய குடும்பம், சின்ன குடுமபத்துடன் வாழ்கிறார்கள். தேவன் தன்னை ஊழியத்திற்கு அழைத்தார் என்று பொய்யை நம்பும் ஜனங்களுக்கு ஒரு பொய்யை கூறி ஊழியம் செய்கிறார்கள். மக்களும் அவர்களை ஆதரித்து அவர் வழிகளில் செல்கிறார்கள். இவர்களுடைய காரியங்களை கேள்விப்படும்போது உள்ளம் மிக்க வேதனைப்படுகிறது. இவர்கள் யாவரும் கள்ளத்தனமாய் தேவனிடத்தில் திரும்பினர்களேயன்றி முழு இருதயத்தோடு அல்ல. ஊழியக்காரன் ஒரு மனைவியை உடைய புருஷனாக இருக்க வேண்டும். (1 தீமோ 3:2, தீத் 1:6) ஆதலால் இவர்கள் யாவரும் தேவனுக்கு அருவருப்பானவர்கள். இவர்கள் தேவ சித்தத்திற்கு புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்ய , தங்கள் சுயஇச்சைகளின்படி சுயஆதாயத்துக்காக வந்தவர்கள். ஆதலால் தேவன் இவர்கள்மேல் பிரியமாய் இருப்பதில்லை.

14. **கர்த்தருக்குரிய தசமபாகம்:** யாக்கோபு தேவரீர் எனக்கு தரும் எல்லாவற்றிலும் உமக்கு தசமபாகம் செலுத்துவேன் என்று சொல்லி ஒரு பொருத்தனை செய்துகொண்டான்(ஆதி 28:22). தேசத்திலே நிலத்தின் வித்திலும், விருட்சங்களின் கனியிலும் தசமபாகம் எல்லாம் கர்த்தருக்குரியது. அது கர்த்தருக்கு பரிசுத்தமானது(லேவி 27:30). ஒரு உண்மையான கிறிஸ்தவன் கர்த்தருக்குரிய தசமபாகத்தைக் கொடுக்க கடமைப்பட்டிருக்கிறான். பாருங்கள் ஆபிராம் தன் சத்ருக்களைத் தன் கையில் ஒப்புக் கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் சொல்லி, தசமபாகம் கொடுத்தான். ஆனால் அதற்குமுன் மெல்கிசேதேக்கு அவனுக்கு அப்பமும் திராட்சை ரசமும் கொடுத்தான்(ஆதி 14:18-20). நாம் நம்முடைய சத்ருவாகிய சாத்தானை வென்று, ஞானஸ்நானம் பெற்று மறுகரை சேர்ந்தவுடன் முதலாவது கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கு பெறுகிறோம். அதன்பின்பு கர்த்தருக்குரிய தசமபாகத்தை செலுத்துகிறோம். நாம் கிறிஸ்துவினுடையவர்களாய் இருப்பதால் ஆபிரகாமின் சந்ததி. (கலா 3:29). நாம் ஆபிரகாமின் பிள்ளைகளாய் இருப்பதால், ஆபிரகாமின் கிரியைகளை செய்ய கடமைப்பட்டுள்ளோம்(யோ 8:29). இப்பொழுது கவனியுங்கள். தேவனை மனுஷன் வஞ்சிக்கலாமா? எதிலே? தசமபாகத்திலும் காணிக்கைகளிலும் தானே (மல் 3:8). இதிலிருந்து நாம் அறிந்துகொள்வதென்ன? தசமபாகம் என்பது கர்த்தருக்குரியது. அது கர்த்தருக்குப் பரிசுத்தமானது. அது ஒரு மனுஷனுடையது அல்ல. மேலும் தசமபாகம் என்பது ஒரு சபைக்குரியதும் அல்ல, ஒரு ஸ்தாபனத்துக்குரியதுமல்ல, ஒரு தனிப்பட்ட ஊழியக்காரனுக்குமல்ல, அது ஒரு கன்வென்ஷன் கூட்டம் போடுவதற்குமல்ல, அது ஒரு சபைக் கட்டிடம் கட்டுவதற்குமல்ல, அது ஒரு சபையின் வருடாந்திரப் பிரதிஷ்டக்கு அல்ல. அது சபைக் கட்டிடத்தை பழுது பார்க்க அல்ல, அது சபையிலுள்ள ஏழை எளிய விதவைகளுக்கு அல்ல, ஒரு ஏழை விசுவாசியின் வீட்டு வாடகைக்கும் அல்ல, வியாதியில் படுத்திருக்கும் ஒரு விசுவாசியின் மருத்துவ செலவுக்குமல்ல, மாறாக அது கர்த்தருக்குரியது, அது கர்த்தருக்கு சொந்தமானது. அவர் மாத்திரமே அதன்மீது உரிமை கொண்டாட முடியும். எந்த ஒரு ஊழியக்காரனும், அது ஒரு சபை பாஸ்டராக இருந்தால்கூட கர்த்தருடைய தசமபாகத்தின் மீது உரிமை கொண்டாட முடியாது. அதே வேளையில் கர்த்தர் தமக்குரிய தசமபாகத்தை அவருடைய பணிய செய்யும் லேவிக்கு கொடுக்கிறார்.இதோ லேவியின் புத்திரர் ஆசரிப்புக் கூடாரத்தின் பணிவிடைகளைச் செய்கிற அவர்களுடைய வேலைக்காக இஸ்ரவேலுக்குள்ளவை எல்லாவற்றிலும் தசமபாகத்தை அவர்களுக்கு சுதந்தரமாகக் கொடுத்தேன்(எண் 18:21). லேவியின் புத்திரரில் ஆசாரியத்துவத்தை அடைகிறவர்கள் தசமபாகம் வாங்குகிறவர்களுக்கு கட்டளை பெற்றிருக்கிறார்கள்(எபி 7:5). இன்று நம் மத்தியில் நிலைத்திருக்கிற லேவி பணியாளர் யார்? பரிசுத்தவான்கள் பூரனப்படும்பொருட்டு, சுவிசேஷத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள், போதகர்கள்(எபே 4:13). இதில் ஸ்தாபன சபைகளால் ஏற்படுத்தப்பட்டவர்கள், தங்களைத் தாங்களே மேற்கண்ட ஐந்துவகை வரங்களில் ஒன்றை அல்லது முற்றிலுமாகத் தங்கள் சுய இச்சையின்படி தங்களை ஏற்படுத்திக்கொண்டவர்கள் அடங்காது. இந்த ஐந்து வகை ஊழியத்தில் ஒருவன் தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆக கர்த்தருக்குரிய தசமபாகம் தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஐந்து வகை ஊழியர்களுக்கு மாத்திரமே பொருந்தும். ஆனால் இதை பங்கிட்டுக் கொடுப்பது யார்? ஒருவன் தன்னைத்தானே மேய்ப்பனாக ஏற்படுத்திக்கொண்டு கர்த்தருக்குரிய தசமபாகத்தை விசுவாசிகளிடமிருந்து அபகரித்து தன் தொப்பையில் தானே

போட்டுக்கொள்கிறான். மேலும் இவன் தன் மனம் போன போக்கில் கர்த்தருக்குரிய தசமபாகத்தை செலவு செய்கிறான். இவ்வாறாக கர்த்தருக்குரிய தசமபாகத்தை கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடைய கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட ஊழியக்காரர்களுக்கு பகிர்ந்து கொடுக்காமல் ஒருவன் தனக்கே எல்லாவற்றையும் அபகரித்துக்கொண்டு தேவன் பேரில் ஊழியம் செய்வானாகில் அவனிடத்தில் கர்த்தர் பிரியமாயிருப்பதில்லை. ஏனென்றால் அவன் ஒரு பொருளாசைக்காரனாகிய விக்கிரகாராதனைக்காரன். கர்த்தர் ஐந்து வகை ஊழியங்களை சபை பக்தி விருத்திக்காக ஏற்படுத்தியதால் கர்த்தருக்குரிய தசமபாகம் ஐந்து வகை ஊழியங்களுக்கும் பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டும். அன்று லேவியருக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. ஒரு லேவியனாக அனைத்தையும் அபகரித்துக்கொள்ளவில்லை. அன்று கர்த்தருக்குரிய தசமபாகம் பண்டகசாலைக்கு கொண்டுவரப்பட்டது. இன்று பண்ட சாலை என்பது லோக்கல் சபைகள். அன்று பண்டக சாலையிலிருந்து கர்த்தருக்குரிய தசமபாகம் லேவியர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டதுபோல இன்று லோக்கல் சபைகளுக்கு வரும் தசமபாகம் அனைத்து ஊழியர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டும். ஐந்து வகை ஊழியங்களையும் லோக்கல் சபைகள் பயன்படுத்த வேண்டும். மேய்ப்பர்களே எல்லாருக்கும் எல்லாம் என்ற மனப்பான்மை தவறு . ஆக லோக்கல் சபைகளில் அனைத்து ஊழியங்களும் பயன்படுத்தப்பட்டு அவர்களுக்கு கர்த்தருக்குரிய தசமபாகம் பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டும். ஒரு உண்மையும் உத்தமமுமான மேய்ப்பன் சபைக்கு வரும் கர்த்தருக்குரிய தசமபாகத்தின் மீது தன் கரத்தை வைக்காது, அதற்கென்று தனியாக பிரதிநிதிகளை அமைத்து அவர்களைக்கொண்டு ஐந்து வகை ஊழியங்களுக்கும் கர்த்தருக்குரிய தசமபாகத்தை பகிர்ந்து கொடுக்கச் செய்வான். இங்கு மேய்ப்பர்கள் ஆட்டுத் தொழுவத்துக்குள் வேறு வழியில் நுழைந்தபடியினால் கர்த்தருக்குரிய தசமபாகம் அனைத்தையும் தங்கள் தொப்பையிலே போட்டுக்கொள்கிறார்கள். பாருங்கள் வேலையாள் கூலிக்குப் பாத்திரவான். மேய்ப்பன் மாத்திரமா சபை பக்தி விருத்திக்கு அடுத்த ஊழியத்தில்? இதர நான்கு வகை ஊழியங்களும் கர்த்தருடைய சபை பக்தி விருத்தி அடையச் செய்யும் ஊழியத்தில் பங்கு கொள்ளவில்லையா? ஒரு மேய்ப்பன் மாத்திரமா சபையை பக்தி விருத்தி அடையச் செய்கிறான்? இல்லவே இல்லை! ஆனால் உங்கள் மேய்ப்பன் ஒரு மாய்மாலக்காரனாக இருப்பதால் கர்த்தருக்குரிய தசமபாகம் அனைத்தையும் அபகரித்துக் கொள்கிறான். இதர ஊழியங்களை கொள்ளையிடுகிறான். ஆதலால் இப்படிப்பட்ட விக்கிரகாராதனைக்காரர்களுக்கு உங்கள் தசமபாகத்தைக் கொடுப்பது தவறான நபருக்கு கர்த்தருக்குரிய தசமபாகத்தைக் கொடுப்பதாகும். ஆதலால் நீங்கள் கொடுக்கும் கர்த்தருக்குரிய தசமபாகம் கர்த்தருடைய கணக்கில் சேராமல் அது சாத்தானுடைய கணக்கில் சேர்க்கிறது. நீங்கள் கொடுக்கும் நோக்கம் நிறைவேற்றப்படாததால் அது உங்களுக்கு பலன் ஒன்றையும் கொண்டு வராது. உங்கள் மேய்ப்பன் ஏமாற்றுக்காரன். நீங்கள் ஒரு ஏமாளி. மறைமுகமாக சாத்தான் உங்களது தசமபாகத்தை தட்டிக்கொண்டு போகிறான். இது காரியமாக சில மேய்ப்பர்கள் கூறுவது என்ன? நாங்கள் எங்கள் சொந்த பிரயாசத்தின் மூலமாக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துகிறோம். ஆதலால் அவர்களிடமிருந்து கிடைக்கும் தசமபாகத்தை நாங்கள் ஏன் பிற ஊழியர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பதாகும். எங்கள் பிரயாசத்தின் பலன் எங்களுக்குத்தானே கிடைக்க வேண்டும் என்கிறார்கள். நாங்கள் பிரயாசப்பட, எங்கள் பிரயாசத்தின் பலனை பிறருடன் பகிர்ந்துகொள்வது நியாயமா என்று கேட்கிறார்கள். இது ஒரு வகையில் நியாயமாகத் தெரியலாம். ஆனால் அது அப்படி அல்ல. இங்கு நாம் சபை எப்படி உருவாகியது என்பதை வேத வாக்கியங்களின் அடிப்படையில் கவனிக்க வேண்டும். சபை உருவாவதற்கு தேவனுடைய நடைமுறை என்ன? சமாதானத்தைக் கூறி நற்காரியங்களை சுவிசேஷமாய் அறிவிக்க சுவிசேஷகர்கள் தேவனால் முதலில் அனுப்பப்பட வேண்டும். அவர்கள் பிரசங்கிக்கிறார்கள். அவர்களுடைய பிரசங்கத்தை ஜனங்கள் கேட்கிறார்கள். தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்கிறார்கள். தேவனைத் தொழுதுகொள்கிறார்கள். தங்கள் பாவத்தை அறிக்கைவிட்டு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெறுகிறார்கள். இவ்வாறாக இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தர் தமது சரீரமாகிய சபையில் சேர்த்துக் கொண்டு வருகிறார்(ரோ 10:13-17, அப் 2:47). சபை உருவாகியது. சபை உருவாகிய பின்தான் அங்கு மேய்ப்பன் பணி வருகிறது. ஒரு மேய்ப்பன் ஊர் ஊராக சென்று சுவிசேஷத்தை பிரசங்கித்து ஆத்தும ஆதாயம் செய்வதற்கு வேதவாக்கியங்களில் எங்கும் ஆதாரங்கள் கிடையாது. சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது சுவிசேஷகர்களுடைய பணி. அப்போஸ்தலருடைய பணியாகவும் அது இருந்தது. இந்த பணிகளை மேய்ப்பர்கள் தங்களுக்கென ஏற்படுத்திக்கொண்டு செய்ய ஆரம்பித்தார்கள். ஆனால் அவருடைய பணியை வேதவாக்கியங்கள் அடையாளம் காட்டுவது இல்லை. அவன் தன் சுயசித்தத்தின்படி தேவனுக்கென்று ஒரு பணியை செய்து வருகிறான். மக்கள் அவன் அழைப்பை அறியாது, அவனுடைய ஊழியத்தின் தன்மையை, நோக்கத்தை அறியாது அவன் வலையில் விழுந்துவிடுகிறார்கள். ஆக ஒரு சபை உருவாகுவதில் ஒரு மேய்ப்பனுக்கு எந்தவிதமான பங்கும் இல்லை. ஆடுகளை மேய்ப்பவன்தான் மேய்ப்பன். ஆடுகள் ஸ்தாபன சபைகளிலிருந்து பொதுஜன மக்களிடமிருந்து தேவனுடைய சத்தத்திற்கு செவிகொடுத்து வெளியெ வருகிறது. ஸ்தாபன சபையானது கோதுமையின் தண்டாக இருந்து கோதுமை மணியை வெளியே கொண்டுவர ஒத்தாசையாக இருக்கிறது. ஆனால் முடிவில் தண்டு எரிக்கப்படும். ஆதலால் ஒரு மேய்ப்பன் கர்த்தருக்குரிய தசமபாகத்தில் மேன்மை பாராட்டுகிறது வேதவாக்கியங்களின் அடிப்படையிலில்லை ஆதலால் கர்த்தருக்குரிய தசமபாகத்தை முற்றிலும் கொள்ளைப் பொருளாக தன் வீட்டிற்கு எடுத்துச் செல்லும் மேய்ப்பர்கள்மீது தேவன் பிரியமாக இல்லை.

15. **அந்நிய நுகத்தில் அவிசுவாசியுடன் பிணைப்பு:** இது குறித்து தேவனுடைய வார்த்தை என்ன கூறுகிறது? ஒரு விசுவாசி அந்நிய நுகத்திலே ஒரு அவிசுவாசியுடன் பிணைக்கப்படாதிருக்க வேண்டும். ஏனென்றால் நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தம் இல்லை. ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியம் இல்லை. கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவு எது? அவிசுவாசியுடன் விசுவாசிக்கு பங்கு கிடையாது. தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தம் கிடையாது எனக் கூறுகிறது(2 கொரி 6:14-18). இதன் பொருள் என்ன? ஒரு விசுவாசி அதாவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவரே ஒன்றான மெய்த்தேவன் என்ற விசுவாசிக்கும் ஒரு விசுவாசி, தேவத்துவத்தில் மூவர் உண்டு என்ற விசுவாசிக்கும் ஒரு நபரோடு ஐக்கியம் கொள்ளக் கூடாது. ஏனென்றால் முதிய நபரின் விசுவாசம் ஒரே தேவன் அவருடைய நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. பிந்திய நபரின் விசுவாசம் தேவத்துவத்தில் மூவருண்டு. ஒருவருடைய விசுவாசம் ஒன்று. அடுத்த நபருடைய விசுவாசம் மூன்று. இப்படியிருக்க ஒருவர் மற்றொருவரோடு விசுவாசத்தில் மாறுபட்டால் அவர்கள் மத்தியில் உள்ள ஐக்கியம் மேற்கண்ட போதனையை பிரதிபலிக்காது. வேதவாக்கியங்களை தியானிக்கும்போது ஒருவருக்கு அது ஒன்றாகத் தெரிகிறது அடுத்தது இன்னொருவருக்கு எங்கு பார்த்தாலும் அது மூன்றாகத் தெரிகிறது. இவர்கள் விசுவாசம் இப்படி இருக்கும்போது எப்படி இரண்டு பேரும் ஐக்கியம் கொள்ள முடியும்? இரண்டு பேர் ஒருமனப்பட்டிருந்தால் ஒழிய ஒருமித்து நடப்பார்களோ? (ஆமோஸ் 3:3). இரு வித்தியாசமான விசுவாசக் கோட்பாட்டிலுள்ளவர்கள் எப்படி ஒருமித்து நடக்க முடியும்? முடியாதே! காரியம் இப்படியிருக்க் ஒரு விசுவாசியும் ஒரு

அவிசுவாசியும் ஐக்கியம் கொள்ள முடியாது. இதைத்தான் 2 கொரி 6:14-18 வசனங்கள் நமக்குப் போதிக்கின்றன. ஆனால் நாம் இன்று காண்பது என்ன. வித்தியாசமான விசுவாசத்தில் உள்ளவர்கள் ஒருவருக்கொருவர் ஐக்கியப்பட்டுக்கொள்கிறார்கள். அவர்களுடைய விசுவாசம் அவர்கள் கிரியைகளில் பிரதிபலிப்பதாக இல்லை. இதில் முக்கியமாக நாம் காண்பது திருமணம் வரும்போது மாத்திரம் ஒருவருக்கொருவர் இசைந்து போகிறார்கள். தங்கள் விசுவாசத்தை தூக்கி எறிந்து விடுகிறார்கள். இரு துருவங்களாக இருந்தவர்கள் ஒருவருக்கொருவர் ஐக்கியம் கொண்டுவிடுகிறார்கள். இவர்கள் விசுவாசம் சோதிக்கப்படும்போது அதில் அவர்கள் நிலைத்து நிற்பதில்லை. ஒரு விசுவாசத்தில் உள்ளவர்கள் மற்றொரு விசுவாசத்தில் உள்ள ஆணையோ பெண்ணையோ திருமணம் செய்வது அவர்களுக்கு அது கண்ணியாய் இருக்கும். அவர்கள் மாய்மாலக்காரர்கள். ஆதலால் விசுவாசத்தின்முன் அவர்கள் விழுந்து போகிறார்கள். இப்படிப்பட்ட பச்சோந்திகள்மீது தேவன் பிரியமாய் இருப்பதுஇல்லை. பொதுவாக நன்கு படித்து, நல்ல உத்தியோகத்தில் நல்ல வருமானத்தில் கர்த்தருடைய கிருபையினால் இருக்கிறோம், நாங்கள் இரட்சிக்கப்பட்ட ஆவிக்குரியவர்கள் என்று தங்களை தாங்களே மேன்மைபடுத்தி மெச்சிகொள்ளுகிறார்கள். ஆனால் திருமண நேரங்களில் தான் இவர்கள் யார் என்பதை தங்களுடைய கிரியைகளில் வெளிபடுத்துகிறார்கள். திருமண நேரத்தில் தங்களுக்கு நன்கு படித்த, நல்ல உத்தியோகத்தில் உள்ள, அழகுள்ள மணமகள் தேவை, நகை, ரொக்கம் எவ்வளவு கொடுப்பீர்கள், நகை போடாவிட்டால் அதற்குரிய மதிப்பை ரொக்கமாக தருவீர்களா என்று பேரம் பேசுகிறார்கள்.இதுவே அவர்களுடைய இலட்சியத்தின் எல்லையாக இருக்கிறது.நிச்சயம்மாக முதலாவது இவர்கள் கிறிஸ்தவர்கள் அல்ல, இரட்சிக்கப்படவும் இல்லை, பரிசுத்த ஆவியை பெறவும் இல்லை. இவர்கள் தங்கள் வாழ்கையின் இலட்சியத்தை பணத்தின் மேல் கட்டும் பொருளாசைகாரர்கள். இவர்கள் திரித்துவ ஸ்தாபன சபையை சார்திருப்பதால் இவர்களது எண்ணங்கள், சிந்தனைகள் யாவும் சாத்தான்னுடையதாகவே இருக்கிறது . ஆதலால் இவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பதும் இல்லை, தேவன் இவர்களிடத்தில் பிரியமாக இருப்பதும் இல்லை. சில ஊழியக்காரர்களை நான் காண்கிறேன். அவர்கள் ஒரே தேவன் உண்டு. அவர் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என ஒருபக்கம் முழக்கம் இடுவார்கள். மறுபக்கம் தேவத்துவத்தில் மூவர் உண்டு என்ற போதனை கொண்ட திரித்துவ உபதேசத்தில் உள்ள சபைகளுடன் / போதகருடன் ஐக்கியம் கொண்டிருப்பார்கள். எதற்கு? ஒரு காணிக்கைக்காக. இப்படியாக ஒரு சரியான உபதேசம் இல்லாது இருபக்கம் தஞ்சாவூர் பொம்மைகளாக அநேக ஊழியக்காரர்கள் இருக்கிறார்கள். இவர்களிடத்திலும் தேவன் பிரியமாய் இருப்பதில்லை. இவர்களுக்கு முதுகு எலும்பு கிடையாது. ஸ்திரமாக அறிந்த சத்தியத்தில் நிலைத்திராமல் அதை பணத்திற்காகவும் புகழுக்காகவும் மறுதலிக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்கள் தேவனுடைய அழைப்பைப் பெறாது தாங்களாகவே ஊழியத்திற்கு வந்து தேவனுடைய நாமம் தூழிக்கப்படும்படி நடந்து கொள்கிறார்கள். இப்படிப்பட்ட ஊழியர்கள் நம் மத்தியில் அதிகம் அதிகம் உண்டு. விசுவாசத்தில் கலப்பு, ஊழியத்தில் கலப்பு, திருமணத்தில் கலப்பு பொதுவாக சொல்லப் போனால் எங்கும் எதிலும் கலப்படமே. கலப்படத்தை தேவன் விரும்புவது இல்லை. பாருங்கள், உன் மிருக ஜீவன்களை வேறு சாதியோடு பொலியவிடாயாக. உன் வயலிலே வெவ்வேறு வகையான விதைகளைக் கலந்து விதையாயாக. சணல் நூலும், கம்பளி நூலும் கலந்த வஸ்திரத்தை உடுத்தாதிருப்பாயாக(லேவி 19:19). பாருங்கள் தேவனுடைய வார்த்தை கலப்படத்தை தடை செய்கிறது. கலப்படம் தேவனுடைய கற்பனைக்கு விரோதமானது. மேலும் கவனியுங்கள். உன் திராட்சைத் தோட்டத்திலே பற்பல விதமான அதாவது கலப்படமான விதைகளை விதைக்காயாக. இது தீட்டு(உபா 22:9). ஒரே கலப்பையில் ஒருபுறத்தில் ஒரு மாட்டையும் மறுபுறத்தில் ஒரு கழுதையையும் பிணைத்து உழாதிருப்பாயாக.(உபா 22:10). நீ ஒரே தேவன் என்ற விசுவாசத்தில் உள்ளவன். ஆனால் உன் திருமணத்தில் திரித்துவ விசுவாசம் உள்ள ஒரு பெண்ணை விவாகம் பண்ணுகிறாய். இருவரும் ஒருவருக்கொருவர் வித்தியாசமான விசுவாசத்தைக் கொண்டவர்கள். காரியம் இப்படியிருக்க உன் இல்லற வாழ்க்கை எப்படி கிறிஸ்துவுக்குப் பிரியமாக இருக்கும்? உன் மனைவி உன் சரீரத்தின் ஒரு பாகமாக இருப்பாளாகில் அவள் உன் விசுவாசத்தில் இருக்க வேண்டுமே. அவள் இல்லையென்றால் எப்படி உன் சரீரத்தின் ஒரு பாகமாக இருக்க முடியும்? நீ தேவசித்தத்திற்கு மாறாக அவள் பொருளாதார வசதி(பொருளாசை) படிப்பு(ஜீவனத்தின் பெருமை), அழகு(வஞ்சனை உள்ளது) இவைகளில் மயங்கி நீ அவளைத் திருமணம் செய்துகொண்டதால் தேவன் உன்மீது பிரியமாக இல்லை.

16. **லவோதிக்கேயா சபைக்காலம் முடிந்துவிட்டது:** இந்நாட்களில் பலர் சபைக்காலத்தின் கடைசி சபையாகிய லவோதிக்கேயா சபைக்காலம் முடிந்துவிட்டது என உபதேசித்து சபை மக்களின் விசுவாச கப்பலை சேதப்படுத்தி வருகிறார்கள். ஆனால் சபைக்கால தூதனுடைய செய்தியானது கே.ப 391, பக்கம் 31, பத்தி 74, நாள் 30-08-1964-ல் இவ்வண்ணமாகக் கூறுகிறது. அதாவது சபைக்காலம் முடிந்துவிட்டது என்று நான்( சபைக்கால தூதன்) ஒரு போதும் கூறினதில்லை. அவ்விதம் நான் கூறியிருந்தால் அதைத் தவறாகக் கூறினேன். அல்லது நீங்கள் அதை தவறாகப் புரிந்துகொண்டீர்கள். இது கடைசி சபைக் காலம். இது முடிவாகவில்லை. இது முடிவடைந்தால் சபை போய்விடும். சபை உள்ளவரைக்கும் அது முடியவில்லை என்கிறார். பாருங்கள் சபக்காலம் முடிந்துவிட்டால் சபை எடுத்துக்கொள்ளப்பட்டது என்று அர்த்தம். அப்படியானால் இந்த உபதேசத்தைக் கொண்டவர்கள் எடுத்துக்கொள்ளப்படுதலில் கைவிடப்பட்டவர்களா? அவர்களுடைய உபதேசமே அவர்கள் தவறு என நியாயமப்படுத்துகிறது. சபைக் காலம் என்பது: சபை பெந்தெகொஸ்தே நாள் அன்று உருவாகியது முதல் அது எடுத்துக்கொள்ளப்படும் வரை இடைப்பட்ட காலம் ஆகும். ஆதலால் அந்த உபதேசத்திலுள்ள வேலையாட்கள் தேவனுடைய வார்த்தையில், இக்காலத்துக்குரிய செய்தியில் இல்லாத ஒன்றை உங்களிடத்தில் கொண்டுவரும்போது தேவ ஞானம் உங்களிடத்தில் இருந்தால் மட்டுமே அது சரி அல்லது தவறு என்பதை உங்களால் நிதானிக்க முடியும். இவ்வாறாக தவறான உபதேசங்களைக் கொண்டு வந்து சபையைக் கலக்குகிறவர்கள் தேவனுக்குப் பிரியமானவர்கள் அல்ல.

17. **பிரன்ஹாம் கிறிஸ்து:** நம் மத்தியில் சகோ பிரன்ஹாம்-ஐ கிறிஸ்து என்றும், அவரைக் கர்த்தராகிய பிரன்ஹாம் கிறிஸ்து என்று அழைத்து ஒரு தேவதூஷனத்தைக் கொண்டுவந்து மக்களை மயக்கும், கலக்கும் சாத்தானின் தூதர்கள், ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்தவர்கள் நம் மத்தியில் உண்டு. தங்கள் சாதூரியமான பேச்சினால், மாயையான வீண் பேச்சினால் அநேகரை மோசம் போக்குகிறார்கள். நிச்சயமாக சாத்தானுடைய ஆடுகள் மாத்திரமே இவர்களுக்கு செவிகொடுக்கும். இது குறித்து சகோ பிரன்ஹாம் கூறுகிறதாவது: முதலாவது நான் மேசியா அல்ல. மேசியா இயேசு கிறிஸ்துவே. ஆனால் நாமோ குட்டி மேசியாக்கள். நாம் ஒவ்வொருவரும் மேசியா என்றால், அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் என்று பொருள். தேவத்துவத்தின் பரிபூரணம் எல்லாம் சரீரப்பிரகாரமாக. கிறிஸ்துவுக்குள் வாசமாய் இருக்கிறது. எனக்குள்ளே தேவனுடைய ஆவியின் ஒரு பாகமே வாசமாய் உள்ளது. அதுவே உங்களுக்குள்ளும் வாசமாய் உள்ளது. நான் மேசியா என்று சொல்வேனாயில் நான் ஒரு பொய்யனாய் இருப்பேன். பாருங்கள் நான் ஒரு பொய்யனாக இருக்க விரும்பவில்லை(கே.ப 2:19 பக்கம் 88 பத்தி 232 நாள்

23-08-1964). இப்பொழுது நினைவில் கொள்ளுங்கள் நான் மேசியா அல்ல. நான் கிறிஸ்து அல்ல. ஆனால் அவர் இங்கு இருக்கிறார் என்பதை நீங்கள் கண்டுகொள்ள வேண்டுமென்று நான் முயற்சிக்கிறேன். அதுதான் அது. புரிகிறதா? இப்பொழுது அவர்(கிறிஸ்து) தேவ குமாரன். என்னைக் குறித்து என்ன? நானோ கிருபையினால் இரட்சிக்கப்பட்ட ஒரு பாவி(ஒரு நீதிமன்ற விசாரணை பத்தி 270 நாள் 12-04-1964). அப்படியானால் சகோ பிரன்ஹாம் -ஐ கர்த்தராகிய பிரன்ஹாம் கிறிஸ்து, நானும் என் வீட்டாரும் கர்த்தராகிய பிரன்ஹாம் கிறிஸ்துவையே சேவிப்போம் என்று முழங்குகிறவர்கள் வேறொரு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள். ஆதலால் அவர்கள் சபிக்கப்பட்டவர்கள். இதனால் அவர்களிடத்தில் தேவன் பிரியமாய் இல்லை. மறைந்த பாலாசீர் லாறியை மணவாளனாக கொண்டு, அவருடைய மணவாட்டியாக அவருடன் ஜீவித்து, தங்கள் கற்பை இழந்து வெளியே வந்த வேலூர் மறைந்த தாமஸ் மற்றும் மறைந்த புதுக்கோட்டை ஜெயராஜ் போன்றவர்களின் தோழியாக ஒரு வாழ்க்கை வாழ்ந்து வந்த திருச்சி பாஸ்டர்களில் அநேகர் இப்பொழுது சகோ. பிரன்ஹாமை மணவாளனாக ஏற்றுக்கொண்டு, விசுவாசத்தில் அவருடைய மாணவட்டியாக வாழ்ந்துகொண்டு தற்போது தங்களது கற்பை இழந்ததோடு மாத்திரம் அல்ல இக்காலத்துக்குரிய செய்தியையும் இவர்கள் கறைப்படுத்தி வருகிறார்கள். இப்பொழுது கோவை, ஊட்டி, திருச்சி போன்ற இடங்களில் உள்ள பாஸ்டர்களில் அநேகர் இவர்களால் வஞ்சிக்கப்பட்டு இவர்கள் கண்ணீயில் விழுந்துவிட்டார்கள் என அறிய வந்தேன். எனக்கு அருமையானவர்களே இந்த கூட்டத்தை அடையாளம் கண்டுகொண்டு அவர்களை நம்பி மோசம் போகாதீர்கள்.இந்நாட்களில் மணவாட்டி ஊழியம் வெளி 22:17 என்ற பெயரில் சகோ. ஜீவஜெயம், சென்னை ஏல்பெத்தேல் சபை (பாஸ்டர் P.M.A.சாமி) சுவிசேஷகர், அநேக தீர்க்கதரிசியின் செய்திகளை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டு வருகிறார். இவருக்கு பக்கபலமாக சகோ.ஞானசேகர் (பாஸ்டர் சாமியின் மருமகன்) மற்றும் பாண்டிச்சேரி சகோ.குமாரநேசர் இருந்து வருகிறார்கள். திருச்சி, கோவை, ஊட்டி போன்ற பகுதிகளில் இவர்களுக்கு நேரிடையாக மற்றும் மறைமுக ஆதரவாளர்கள் உண்டு. இவர்கள் தான் இவருக்கு புத்தகம் வெளியிட உதவிகள் செய்கிறார்கள். இவர்கள் பிரன்ஹாம் கிறிஸ்து என்ற விசுவாசத்தில் மிக்க உறுதியாக உள்ளவர்கள்.ஆனாலும் தங்களுடைய விசுவாசத்தை வெளிப்படையாக அறிக்கை செய்யாமல் மறைமுகமாக வெளிப்படுத்திவருவார்கள்.இவர்கள் வெளி 22:17 யை உபயோகபடுத்தி தங்கள் ஊழியத்தை மணவாட்டி ஊழியம் என அழைக்கிறார்கள். ஆனால் அப் பவுல் பிரசங்கியாத வேறொரு சுவிசேஷத்தை பிரசங்கித்து வருகிறார்கள். பவுலின் வார்த்தையின் படி இவர்கள் பிரன்ஹாம் கிறிஸ்து என்ற வேறொரு சுவிசேஷத்தை பிரசங்கித்து வருவதால்.தேவனுடைய பார்வையில் சபிக்கப்பட்டவர்களே. அவருக்கு பிரியமானவர்களும் அல்ல. பிரன்ஹாம் கிறிஸ்து உபதேசத்தில் இருந்துகொண்டு ஏழாம் சபைக்காக தூதனுடைய செய்திகளை கூகுள் மூலம் ஆங்கிலம் தமிழ் மொழிபெயர்க்க இவர்களுக்கு என்ன யோக்கிதை இருக்கிறது? பிரன்ஹாம் கிறிஸ்து கூட்டத்தார் செய்தியை கறைப்படுத்தும் பிசாசின் கூட்டத்தாரே. இவர்கள் கூகுள் வாயிலாக செய்தியை மொழிபெயர்ப்பது மாபெரும் தவறு. தேவன் தம்முடைய சுவிசேஷத்தை பிரசங்கிக்க இயந்திரங்களை பயன்படுத்தினது இல்லை. மனுஷர்களையே பயன்படுத்துகிறார். தீர்க்கதரிசியின் செய்திகளை ஒரு இயந்திரம் மொழி பெயர்க்க முடியாது. செய்தி எந்த ஆவியினால் பேசபட்டதோ அதே ஆவி கொண்ட ஒரு மனுஷனே அதை மொழி பெயர்க்க முடியும்.ஆனால் தீர்க்கதரிசியின் செய்திகளை மொழிபெயர்த்து வெளியிடுபவர்கள் மொழி பெயர்ப்பாளர்கள் யார் என்ற தகவலை வெளியிடுவதிலை. ஏனென்றால் செய்தியை ஒரு இயந்திரமே மொழிபெயர்கிறது. ஆக இவர்களது செய்தி மொழிபெயர்ப்பில் மாயம், வெளியிடுவதில் மாயம்.இவர்களுடைய காரியங்கள் யாவும் மாயையும் மனத்திற்கு சஞ்சலமு மாயிருக்கிறது. ஏனென்றால் இவர்களது உபதேசம் இவர்களது மொழி பெயர்க்கும் செய்திக்கு மாறாக இருக்கிறது. ஆக இந்த மணவாட்டி ஊழியம் வேறொரு சுவிசேஷத்தை மையமாக கொண்டிருப்பதால் இவர்களிடமிருந்து உங்களை விடுவித்து கொள்ளுங்கள். இவர்களுடைய வஞ்சக வலையில் விழுந்து விடாதீர்கள். இவர்கள் தங்களுடைய ஊழியத்தை கர்த்தராகிய பிரன்ஹாம் கிறிஸ்து மணவாட்டி ஊழியம் என்று அழைத்தால் அது நலமாக இருக்கும். பொதுவாக ஒருவன் ஒரு புத்தகம் வெளியிடுவானாகில் அதில் வெளியிடுபவர் விலாசம் கண்டிப்பாக கொடுக்கப்படவேண்டும். அனால் இவர்கள் தங்களது தொலைபேசி எண்ணையும், ஈமெயில் விலாசத்தையும் கொடுத்து சமாளிக்கிறார்கள். இதுவும் ஒரு மாயையான செயல்.

18. **பிரன்ஹாம் மனுஷ குமாரன்:** சகோ பிரன்ஹாம்-ஐ மனுஷ குமாரன் என்று அழைக்கும்/விசுவாசிக்கும் ஒரு கூட்டத்தார் நம் மத்தியில் உண்டு. இவர்களது விசுவாசம் பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட வேத வாக்கியங்களில் உள்ள விசுவாசத்திற்குப் புறம்பானது. இது குறித்து சகோ பிரன்ஹாம் என்ன கூறுகிறார்? நான் அந்த மனுஷ குமாரன் அல்ல(The Son Of Man ). நான் ஒரு மனுஷ குமாரன்(A son of man). இவ்விரண்டிற்கு நிறைய வித்தியாசம் உண்டு. இயேசு கிறிஸ்து: மனுஷ குமாரன், தேவ குமாரன், தாவீதின் குமாரன். நான் அந்த அபிஷேகம் பண்ணப்பட்ட மனுஷ குமாரன் அல்ல. என்னை உங்கள் சகோதரனாக அழைத்துக்கொள்வதைத் தவிர வேறு எந்த பெயரினாலும் என்னை அழைத்துக்கொள்ள விரும்பவில்லை(கே. ப 2:20 பக்கம் 43, பத்திகள் 101,103: பக்கம் 45, பத்தி 104, நாள் 23-08-1964). மேலும் மனுஷ குமாரன் என்பது கிறிஸ்து. தூதன்(சகோதரர் தன்னைக் குறிப்பிடுகிறார்). மனுஷ குமாரன் அல்ல. ஆனால் அவரால் அனுப்பப்பட்ட தூதன்(கடைசி காலத்தில் ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளவர்கள் பக்கம் 94, பத்தி 269, நாள் 25-07-1961). ஆக சகோ பிரன்ஹாம் தான் மனுஷ குமாரன் அல்ல மிக்கத் தெளிவாகக் கூறுகிறார். ஆனால் அவரை மனுஷ குமாரன் ஆக்குவது பிசாசின் தந்திரம். சபைகால தூதனுடைய பெயருக்கு களங்கம் விளைவிக்க பிசாசு கையாளும் தந்திரங்களில் இதுவும் ஒன்று. இப்படிப்பட்ட உபதேசங்களைக் கொண்டு வருபவர்கள், விசுவாசிப்பவர்களிடத்தில் தேவன் பிரியமாய் இல்லை. இவர்கள் யாவரும் பிசாசுக்கே ஊழியம் செய்கிறார்கள்.

19. **பிரன்ஹாம் - தேவன்:** சகோ பிரன்ஹாம்-ஐ தேவன் என்று அழைக்கும் ஒரு சாத்தானின் கூட்டத்தாரும் நம் மத்தியில் உண்டு. கடைசிக் காலத்திலேயே தங்கள் துன்மார்க்க இச்சைகளின்படி நடக்கிற பரிகாசக்காரர்கள் தோன்றுவார்கள் என்று இவர்களைக் குறித்துதான் கூறப்பட்டுள்ளது. ஏசா 46:5 என்ன கூறுகிறது? யாருக்கு என்னை சாயலும், யாருக்கு என்னை சமமும் ஆக்கி யாருக்கு நான் ஒப்பாய் இருக்கும்படிக்கு என்னை ஒப்பிடுவீர்கள்? பாருங்கள் இந்த பேலியாளின் மக்கள் சகோ பிரன்ஹாம்-ஐ தேவனுக்கு ஒப்பிடுகிறார்கள். இவர்களுடைய கிரியைகள் இவர்கள் யார் என்பதை எடுத்துக்காட்டுகிறது. இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் உபதேசம் குறித்து சகோ பிரன்ஹாம் என்ன கூறுகிறார்? இப்பொழுது சகோதரரே நாம் அறிந்திருப்பது என்னவெனில் மனிதன் தேவனாக இருக்க முடியாது. இருப்பினும் மனிதன் ஒரு வகையில் தேவனே, நீங்கள் தேவனாய் இருப்பதற்கென்று சிருஷ்டிக்கப்பட்டீர்கள். ஆனால் நீங்கள் இந்த

வாழ்க்கையில் இருக்கும்போது அல்ல. பாருங்கள் இயேசு நம்மைப்போன்று ஒரு மனிதனாக இருந்தார். ஆனால் தேவன் அவருக்குள் இருந்தார். தேவனுடைய பரிபூரணம் அவருக்குள்ளே வாசமாய் இருந்தது. நாமோ ஆவியை அளவாய் பெற்றிருக்கிறோம்(கே.ப 2:12 பக்கம் 110, பத்தி 426, நாள் 12-01-1961). மேலும் ஞாபகம் கொள்ளுங்கள். நான் ஒரு மனிதன். நான் தேவன் இல்லை. நான் உங்களைப் போன்று ஒரு மனிதனே(கே.ப. 2, பக்கம் 232 பத்தி 232 ). இவ்வாறாக சகோ பிரன்ஹாம் தான் தேவன் இல்லை என கூறுகிறார். ஆனால் ஆட்டுத் தொழுவத்துக்குள் பக்க வழியாய் நுழைந்த கள்ள கபடமுள்ள வேலையாட்கள் சத்தியத்தை சீர்குலைக்க எடுத்து கையாளும் உபதேசங்களில் ஒன்று இது. இஸ்ரவேல் ஜனங்கள் ஓரேபிலே ஒரு கன்றுக் குட்டியை உருவாக்கி தங்கள் மகிமையை புல்லைத் தின்கிற மனுஷ சாயலாக மாற்றினார்கள். ஆனால் அவர்களோ மாம்ச இச்சையினால் ஒரு புருஷனுக்கும் ஒரு ஸ்திரீக்கும் பிறந்து, துர்க்குணத்தில் உருவாகி, பாவத்தில் பிறந்த ஒரு மனுஷனை தேவனுக்கு சமமாக / தேவனாக மாற்றினார்கள். ஆதலால் இவர்கள் மேல் தேவன் பிரியமாய் இல்லை.

20. **மேலும் சகோ பிரன்ஹாமைக்குறித்து இவர்கள்:**

அ) அடிக்கப்பட்ட வண்ணமாய் இருந்த ஆடு (வெளி 5:6) ஆ) ஆட்டுக்குட்டி இ) நமது மீட்பர் ஈ) ஒமேகா உ) குற்ற நிவாரண பலி ஊ) மரித்து மூன்று நாட்களில் உயிர்த்தெழுந்தார் எ) பலமுள்ள வேறொரு தூதனுடைய (வெளி 10: 1) இடது கால். பாருங்கள் இவர்கள் தங்கள் மனம்போன போக்கில் போய் அபத்தமானதை உரைக்கிரதினாலே இந்த ஜனங்களுக்கு ஏற்ற பிரசங்கியாகி, தங்கள் பெலன் தேவனாலே உண்டாயிற்று என்று சொல்லி மிக மிக மிஞ்சிப்போய் குற்றவாளிகள் ஆனார்கள். தங்கள் வாயின் வார்த்தைகளினால் கர்த்தரை வருத்தப்படுத்துகிறார்கள். இதனால் தங்களுக்குக் கேடு உண்டாக்கி கொள்கிறார்கள். இவ்வாறாக சகோ பிரன்ஹாமைக் குறித்த போதனைகள் யாவும் உலகம் அனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய அந்த பெரிய வலுசர்ப்பத்திற்குரியது. ஆதியில் சர்ப்பம் தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல இந்த கிறிஸ்து பிரன்ஹாம், பிரன்ஹாம் மனுஷ குமாரன், பிரன்ஹாம் ஒமேகா, பிரன்ஹாம் தேவன் போன்ற நம்பிக்கை, விசுவாசம் உள்ளவர்களை மீண்டும் சர்ப்பமானது கிறிஸ்துவைப் பற்றிய உண்மையிலிருந்து விலகும்படி வஞ்சித்துவிட்டது. ஆதலால் இவர்கள் மேல் தேவன் பிரியமாய் இல்லை.

21. **ஸ்திரீயின் தலை முக்காடு:** புருஷன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவனுக்கு கனவீனம். ஸ்திரீ தன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவளுக்கு மகிமையாய் இருக்கிறது என்று சுபாவமே அவளுக்குப் போதிக்கிறது. தலை மயிர் அவளுக்கு முக்காடாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது (1 கொரி 11:14,15). திரித்துவ மக்கள் மத்தியில் பெண்கள் தங்கள் தலைமேல் ஒரு முக்காடு ஒன்றை சபை கூடுதலுக்குச் செல்லும்போதும், ஜெபிக்கும்போதும், ஆவிக்குரிய வரங்களை வெளிப்படுத்தும்போதும் போட்டுக்கொள்கிறார்கள். நமது இந்தியாவைப் பொருத்தவகையில் பெண்கள் தங்கள் சேலை முந்தானையை அல்லது துப்பட்டாவை முக்காடாகப் போட்டுக் கொள்கிறார்கள். ஆனால் மேல் நாடுகளில் தொப்பி அல்லது கைக்குட்டை போன்றவற்றைப் போட்டுக் கொள்கிறார்கள். இவை யாவும் தவறு. ஸ்திரீகளே உங்களுக்கு ஒரு முக்காடு உள்ளது. அது ஒரு தொப்பி அல்லது கைக்குட்டை என எனக்குக் காண்பிக்கும்படிக்கு நான் எவருக்கும் சவால் விடுகிறேன். உங்கள் தலைமயிர்தான் உங்களுக்கு முக்காடு(நாம் ஏன் ஒரு ஸ்தாபனம் அல்ல, பத்தி 125). ஸ்திரீகள் நீண்ட மயிரை வைத்திருக்க வேண்டியவர்களாய் உள்ளனர். அதுதான் அவர்களுடைய முக்காடாகும். இன்றைக்கு ஸ்திரீகளாகிய நீங்கள் கூறப்போனால் தொப்பி அணிகிறவர்கள் என்று எனக்குத் தெரியும். அது உங்களுடைய முக்காடு என்று கூறுகிறீர்கள். அது தவறு. வேதாகமம் ஒரு ஸ்திரீயினுடைய முக்காடு அவளுடைய தலை மயிரே என்று கூறுகிறது. ஆகவே இப்பொழுது ஸ்திரீகள் நீண்ட மயிரைக் கொண்டிருக்க வேண்டியவர்களாய் இருக்கின்றனர். இதைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ அது ஒரு பொருட்டல்ல. அது கர்த்தர் உரைக்கிறதாவது என்பதே (கே.ப 1:3 பக்கம் 50, பத்தி 127, நாள் 03-01-1954). 1 கொரி 11: 4,5 வசனங்களில் ஜெபம் பண்ணுகிறபோதாவது, தீர்க்கதரிசனம் சொல்லுகிறபோதாவது தன் தலையை மூடிக்கொண்டிருக்கிற எந்த புருஷனும் தன் தலையை கனவீனப்படுத்துகிறான். அதாவது தன் தலையாகிய கிறிஸ்துவைக் கனவீனப்படுத்துகிறான். இது ஆங்கிலத்தில்(Every man praying or prophesying, having his head covered dishonoureth his head என உள்ளது. அதாவது ஜெபம் பண்ணுகிற, தீர்க்கதரிசனம் சொல்லுகிற எந்தவொரு மனிதனும் தன் தலையை மூடிக்கொண்டிருந்தால் தன் தலையாகிய கிறிஸ்துவை கனவீனப்படுத்துகிறான். அவ்வண்ணமாகவே but every woman that prayeth or prophyseth with her head uncovered dishonoureth her head ஆனால் ஜெபம் பண்ணுகிற தீர்க்கதரிசனம் சொல்லுகிற எந்தவொரு ஸ்திரீயும் தன் தலையை மூடிக்கொள்ளாதிருந்தால் தன் தலையாகிய தன் புருஷனை கனவீனப்படுத்துகிறாள். இங்கு முக்காடு, முக்காடு என்று கூறப்பட்டுள்ளது இயற்கையான தலை மயிரே அன்றி செயற்கையான ஒரு தொப்பியோ, கைக்குட்டையோ, சேலை முந்தானையா, துப்பட்டாவோ அல்ல. ஒரு பெண் நீண்ட தலை மயிரை உடையவளாக இருக்க வேண்டும். அதன் வாயிலாக அவள் தன் தலையாகிய தன் கணவனை கனம் பண்ணுகிறாள். அவள் தன் தலை மயிரை கத்தரித்தோ அல்லது கைக்குட்டைத் தொப்பியினாலோ தன் தலையை மூடும்போது தன் புருஷனை கனவீனப்படுத்துகிறாள். அவ்வண்ணமாகவெ தன் தலை மயிரை நீளமாக வளர்க்கிற ஒரு புருஷன் தன் தலையாகிய கிறிஸ்துவை கனவீனப்படுத்துகிறான். அவன் தன் தலை மயிரை கத்தரிக்கும்போது தன் தலையாகிய கிறிஸ்துவை கனம் பண்ணுகிறான். 1 கொரி 11:10 ல் தூதன் என்பவன் ஒரு செய்தியாளன். ஒரு செய்தியாளன் தேவனால் அனுப்பப்பட்டவன். உங்களிடத்தில் அவன் வரும்போது நீங்கள் நீண்ட தலைமயிரை உடையவர்களாய் இருக்க வேண்டும். மற்றபடி நீங்கள் அவனால் கடிந்துகொள்ளப்படுவீர்கள் என்பதாகும். ஆக முடிவில் ஒரு ஸ்திரீ தன் தலையை தன்னுடைய சேலை முந்தானை, தொப்பி , கைக்குட்டைகளினால் மறைத்து, மூடி ஜெபிக்கும்போது, தீர்க்கதரிசனம் சொல்லும்போது தன் தலையாகிய தன் கணவனை கனவீனப்படுத்துகிறாள். ஒரு ஸ்திரீ தன் கணவனை கனவீனப்படுத்துவாளாகில் அவள் தேவசமூகத்தில் வருகிறதற்கு தகுதியற்றவள். அப்படிப்பவள்மீது தேவன் பிரியமாய் இருப்பது இல்லை.

22. **ஹாப் மேன் - இயேசு 33 வரைபடம்** - ஒரு விக்கிரகாராதனை: விக்கிரகாராதனை என்பது என்ன? காணப்படுகிற அல்லது காணப்படாத, அது ஒரு மனித உருவமாகவோ அல்லது ரூபமாகவோ அல்லது சாயலாகவோ அல்லது வானத்தில் காணப்பட்ட ஒரு அடையாளமாகவோ இருக்கலாம். அந்த அடையாளத்தை ஒரு உருவகமாக சிலை வடிவத்தில் உருவாக்கி, அல்லது ஒரு உருவத்தை சித்திரமாக வரைந்து அதற்கு தெய்வீக கனத்தைக் கொடுப்பது விக்கிரகாராதனை. நான் கர்த்தர், இது என் நாமம். என் மகிமையை வேறு ஒருவனுக்கும், என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன்(ஏசா 42:9). தேவன் தம்முடைய துதியை விக்கிரகங்களுக்கு மாத்திரம் அல்ல. சித்திரம் தீர்த்த உருவகங்களுக்கும் கொடுப்பது இல்லை. சித்திர வேலையான விக்கிரகங்களை நம்பி, வார்ப்பிக்கப்பட்ட சுரூபங்களை நோக்கி: நீங்கள் எங்கள் தேவர்கள் என்று சொல்லுகிறவர்கள்

பின்னடைந்தே மிகவும் வெட்கப்படுவார்கள்(ஏசா 42:17). யாருக்கு என்னை சாயலும் சமமும் ஆக்கி, யாருக்கு நான் ஒப்பாகும்படிக்கு என்னை ஒப்பிடுவீர்கள்(ஏசா 46:5). ஹாப்மேன் வரைந்த இயேசு 33 வயதில் என்ற சித்திரத்தின் சாயலுக்கு சமமாக்கியா? அல்லது ஒப்பாகவா? ஒருவன் வெள்ளி / பொன்னை தராசில் நிறுத்து தட்டானுடனே கூலி பொருத்தி ஒரு விக்கிரகத்தை உண்டு பண்ணி அதை வணங்கி, பணிந்துக் கொள்கிறான். ஆனால் நீங்களோ ஒரு சித்திரக்காரன் வரைந்த ஒரு சித்திரத்திற்கு தேவனின் சாயலைக் கொடுத்து, தேவனுக்கு சமமாக்கி, அதன் முன் நின்று வணங்கி பணிந்து கொள்கிறீர்கள். நீங்கள் இருவரும் ஒரே குட்டையி ஊறிய மட்டைகள்தான். இது ஒரு சித்திரக்காரனின் கைவேலையாகும். அதற்கு பேசும் சக்தி கிடையாது. அதனில் ஆவி இல்லை. தியானியுங்கள். எரே 10 அதி. அந்த சுவரைச் சுற்றிலும் சித்திரம் தீட்டப்பட்டிருந்தன. இஸ்ரவேல் மூப்பரில் எழுபது பேர் அதன் முன்பாக நின்றார்கள்.(எசே 8:11). ஆனால் இங்கு நீங்களோ காகிதத்தில் சித்திரம் தீட்டப்பட்டிருந்த ஒரு மானிட உருவத்திற்கு தெய்வீகத்தை கொடுத்து அதற்கு முன்பாக நின்று அதற்கு துதி கன மகிமை செலுத்துகிறீர்கள். அதை மகா சத்தமாய் கூப்பிட்டாலும் அது உங்களுக்கு செவி கொடாது. ஏனென்றால் அதில் ஜீவனில்லை. அது ஒரு காகிதத்தில் வரையப்பட்ட சித்திரமே. தேவனுடைய ரூபமாய் இருந்து, தேவனுக்கு சமமாய் இருந்த கிறிஸ்து இயேசு மனுஷ சாயலகி, மனுஷ ரூபமாய் காணப்பட்டார்( பிலி 2:6-8). இவரை நீங்கள் ஹாப்மேன் இயேசு 33 வயதில் வரைபடத்திற்கு சாயலாக்கலாமா? ரூபமாக்கலாமா? (ஏசா 40:18). இந்த படத்தின் சாயலையா நாம் தரித்துக் கொள்ள வேண்டும்? (1:கொரி 15:49). இந்த படத்தை தேவனுடைய சாயலுக்கு ஒப்பிடலாமா?(ரோ 8:29). நாம் விழிக்கும்போது தேவனுடைய சாயலில் திருப்தியாகவெண்டுமேயன்றி ஹாப்மேன் இயேசு 33 வயது வரைபடத்தின் சாயலிலா? (சங் 17:15) அப் யோவான் இப்படிப்பட்டதான ஒரு வரைபடத்தைக் காட்டியா இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாய் இருக்கிறார் என்றான்( 1 யோ 5:20). வானத்தில் ஒரு அடையாளம் வெளி 13:1 வரைபடம் கத்தோலிக்க திருச்சபையார் வீட்டை அலங்கரிப்பதுபோன்று நீங்கள் ஹாப்மேன் இயேசு 33 வயது வரைபடத்தினால் அலங்கரிக்கிறீர்கள். தேவனுடைய வேதத்தை நீங்கள் மறந்தீர்கள். தேவனைப்பற்றிய அறிவு உங்களுக்கு இல்லை. வேசித்தன ஆவி உங்கள் உள்ளத்தில் இருக்கிறது. ஆதலால் நீங்கள் தகாத கற்பனைகளைப் பின்பற்றுகிறீர்கள். தேவனை விட்டு விலகுகிற மாறுபாட்டை பின்பற்றிக்கொண்டீர்கள். ஆதலால் உங்கள் இருவர் மீதும் தேவன் பிரியமாய் இல்லை.

23. **நாம் ஆயிரம் வருட அரசாட்சியில் இருக்கிறோம்:** உமது பார்வைக்கு ஆயிரம் வருஷம் நேற்றுக் கழிந்த நாள் போலவும் இராச்சாமம் போலவும் இருக்கிறது (சங் 90:4). தேவனுடைய ஆயிரம் வருட அரசாட்சி ஒரு நாளுக்குரியது. அது முடிந்துவிட்டது என்ற ஒரு உபதேசமும் உண்டு. ஆனால் ஆயிரம் வருடம் அரசாட்சிக்கு முன். கீழ்க்கண்ட சம்பவங்கள் நடைபெறவேண்டும். அ) சபை எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். ஆ) புத்தியில்லாத கன்னிகைகள் 3 1/2 ஆண்டுகள் உபத்திரவத்துக்குள் செல்ல வேண்டும். இ) அர்மகேதேன் யுத்தம் நடைபெற வேண்டும். இந்த சம்பவங்களுக்குப்பின்புதான் ஆயிரம் வருட அரசாட்சி. இந்த அரசாட்சியில் மணவாட்டி மணவாளனுடன் இருப்பாள். இந்த ஆயிரம் வருட அரசாட்சி வரை மேசியா பூமிக்கு வரமாட்டார். ஏனென்றால் மணவாட்டி சபை ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, கர்த்தரை ஆகாயத்தில் சந்திக்கும். அவர் தம்முடைய மணவாட்டியை எடுத்துக்கொள்ள பூமிக்கு வருவதில்லை. அவர் மணவாட்டியை ஆகாயத்தில் எடுத்துக்கொள்கிறார்(கே.ப 2:12, பக்கம் 115, பத்தி 448, நாள் 12-01-1961). ஆக இயேசுவின் மணவாட்டி எடுத்துக்கொள்ளப்பட்டு அவர் மகிமையில் பிரவேசித்து, அங்கு கல்யாணம் செய்து, பூமிக்குத் திரும்பி மணவாளன் மணவாட்டியுடன் வந்து ஆயிரம் வரும் வாழ்கிறார்கள்(கே.ப 2:19 பக்கம் 83-84, பத்தி 222, நாள் 23-08-1964). ஆக நாம் ஆயிரம் வருட அரசாட்சியில் இருக்கிறோம் அல்லது ஆயிரம் வருட அரசாட்சி முடிந்துவிட்டது, இயேசு கிறிஸ்துவின் திருமணம் 1963-ல் நடந்துவிட்டது போன்ற உபதேசங்கள் யாவும் பரத்திலிருந்து உண்டானது அல்ல. இவர்கள் தங்கள் பொய்களினால் ஜனங்களை சந்தோஷப்படுத்துகிறார்கள். அக்கிரமத்தில் பசித்தாகமாக இருக்கிறார்கள். இவர்கள் சத்தியம் அல்லாத ஒன்றை சத்தியம் எனக் கூறி மக்களை நம்ப வைக்கிறார்கள். ஆனால் இவர்களுடைய உபதேசங்கள் எல்லாம் லௌகிக ஞானத்தினால் பிறந்த உபதேசங்கள். எந்த ஒரு உபதேசமும் தேவனுடைய வார்த்தைக்குப் புறம்பாக இருக்குமானால், அதைக்கொண்டு வருபவர்கள் அதை விசுவாசிப்பார்கள் யாவர்மீதும் தேவன் பிரியமாய் இருப்பது இல்லை.

24. **வெளி 10:1-2:** இங்கு பலமுள்ள வேறொரு தூதன் வானத்திலிருந்து வருவதைக் காண்கிறோம். அவன் தனது வலது பாதத்தை சமுத்திரத்தின் மேலும், இடது பாதத்தை பூமியின் மீதும் வைத்திருந்தான். இது குறித்து ஒரு மாறுபாடான உபதேசம் என்னவென்றால் தூதனுடைய வலது கால் சகோ பிரன்ஹாமை (அமெரிக்கா) குறிக்கிறது என்றும், இடது கால் வேலூர் சகோ தாமஸ் (இந்தியா) குறிக்கிறதென்ற ஒரு உபதேசம் பிசாசினால் கொண்டு வரப்பட்டது. கிறிஸ்து வானத்தில் இருந்து அக்கினி ஸ்தம்பத்தில் இறங்கி உடன்படிக்கை தூதனாக இனி காலம் செல்லாது என்ற தூதைக் கொண்டுவந்த பலமுள்ள வேறொரு தூதன். தூதன் என்றால் செய்தியைக் கொண்டு வருகிறவன். ஆக செய்தியைக் கொண்டுவருகின்ற தூதன் மணவாளனாக இருக்க முடியாது. கிறிஸ்து இங்கு தூதன் என்ற ஸ்தானத்தில்தான் வந்தாரேயன்றி தம்முடைய மணவாட்டிக்கு மணவாளனாக அல்ல. ஆக வெளி 10:1 க்கும் 1963 பிப்ரவரி 28-ல் தோன்றிய மேக வட்ட வளையத்துக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. மேக வட்ட வளையத்தினால் தேவன் இந்த மணி நேரத்திற்கான செய்தியை அடையாளத்தின் வாயிலாக உறுதிப்படுத்தினார். அது அவ்வளவுதான். அதற்கு மிஞ்சியது அனைத்தும் லௌகிக ஞானம். இப்பொழுது இதன் சாராம்சம் என்ன? வெளி 10:1-ல் பலமுள்ள வேறொரு தூதன் வானத்திலிருந்து இறங்கி வருகிறான். வெளி 10:2 -ல் திறக்கப்பட்ட ஒரு புத்தகம் அவன் கையில் இருக்கிறது. அதாவது வெளி 5:1-ல் உள்ளும் புறமும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளினால் முத்தரிக்கப்பட்ட புத்தகத்தின் முத்திரைகள் உடைக்கப்பட்ட பிறகு, புத்தகம் திறக்கப்பட்ட நிலையில் உள்ளது. இப்பொழுது இந்த முத்திரைகளில் உள்ள இரகசியங்கள் வெளிப்பட வேண்டும். இது வெளி 10:4-ல் உள்ள ஏழு இடி முழக்கங்கள் முழங்கும் சமயத்தில் வெளிப்படும்(ஏ.மு பக்கம் 120, பத்தி 29- பழைய மணவாட்டி கூடாரம் பதிப்பு). ஏழு முத்திரைகளினால் முத்திரிக்கப்பட்ட இந்த புத்தகத்தில் அடங்கியுள்ள இரகசியங்கள் ஏழாம் சபைக்கால தூதன் செய்தி முழங்கும்போது வெளிப்படும்.(ஏ.மு பக்கம் 122 பத்தி 37). இப்பொழுது இந்த இரகசியங்கள் வெளிப்பட வேண்டிய நேரம் வந்துவிட்டதால் இனி காலம் செல்லாது என்ற ஒரு செய்தியோடு இந்த பலமுள்ள வேறொரு தூதன் வருகிறான். நம்முடைய ஆவிக்குரிய ஆகாரம் தேவனுடைய வார்த்தைகளிடமிருந்து மாத்திரமே வர வண்டும். இப்பொழுது இந்த பலமுள்ள வேறொரு தூதன் பூமிக்குரிய தூதன் அல்ல. இந்த **இனிக்காலம் செல்லாது** என்ற செய்தி வானத்தின் கீழ் இருக்கிற பூமிக்கும், சமுத்திரத்திற்கும் செல்ல வேண்டும் (ஆதி 1:9,10). சமுத்திரத்தீவுகளில் தேவனுடைய ஜனத்தில் மீதியானவர்கள் உண்டு. (ஏசா 11:11). கர்த்தரின் நாமத்தை சமுத்திரத் தீவுகளில் மகிமைப்படுத்துகிறவர்களுண்டு.( ஏசா 24:14,15). இப்பொழுது கவனியுங்கள் நியாயத்தீர்ப்பின் நாள் பூமியும் சமுத்திரமும் தங்களில் உள்ளவர்களை ஒப்புவிக்கவேண்டும்

(தா னி 12:2, வெளி 20:13) ஆதலால்தான் இனி காலம் செல்லாது என்ற செய்தி வானத்தின் கீழெங்கும், பூமி, சமுத்திரத்திற்கு சாட்சியாகச் செல்ல வேண்டும். ஆதலால்தான் பூமிக்கும் சமுத்திரத்துக்கு சாட்சியாக அந்த பலமுள்ள வேறொரு தூதன் தன்னுடைய வலது பாதத்தை சமுத்திரத்தின் மேலும் தன்னுடைய இடது பாதத்தை பூமியின் மேலும் வைத்தான். இப்பொழுது மிகவும் முக்கியமாக நீங்கள் கவனிக்கவேண்டிய காரியம் என்னவென்றால் இது பலமுள்ள வேறொரு தூதனாகிய கிறிஸ்துவினுடைய தத்ரூபமான தோற்றம் இல்லை. மாறாக கிறிஸ்துவின் பிரசன்னம். பாருங்கள் சகோ பிரன்ஹாம் தேவன் தமது விசேஷ குணங்களினால் அடையாளால் கண்டுகொள்ளப்படுகிறார். பத்தி எண் 159 நாள் 11-03-1964 என்ற செய்தியில் கூறுகிறார்: நான் மேசியா அல்ல. நான் கிறிஸ்து அல்ல. ஆனால் அவர் இங்கு இருக்கிறார். பாருங்கள் அதுதான் அது. அது கிறிஸ்துவின் பிரசன்னம். அதுபோன்று தான் வெளி 10:1-ல் கிறிஸ்துவின் பிரசன்னம். மேலும் ஒரு எடுத்துக்காட்டு. கவனியுங்கள். இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்(மத் 18:20). இதுதான் அது. இது தேவனுடைய பிரசன்னம். மாம்சத்தில் தோற்றம் அல்ல. பாருங்கள். மீட்பின் புத்தகத்தோடு பூமியும் சமுத்திரமும் ஆரம்பத்திலும் ( வெளி 5:13 முடிவிலும் (வெளி 10:2) தொடர்பு கொண்டதாகவே இருக்கிறது. நான் இங்கு எழுதியுள்ள காரியங்களை சிந்தித்து பாருங்கள். கர்த்தர் உங்களுக்கு எல்லா காரியங்களிலும் புத்தியைத் தந்தருளுவார். மேற்கண்ட வேற்றுமையான உபதேசங்களைக் கொண்டு வந்தவர்களை பின்பற்றுகிற யாவரும் ஜென்ம சுபாவத்தாரும் ஆவி இல்லாதவர்களாக இருக்கிறபடியினால் அவர்கள் அனைவர் மீதும் தேவன் பிரியமாய் இல்லை.

25. **புதிய நாமம் வெளி 2:17 மற்றும் 3:12:** இந்த புதிய நாமம் குறித்து அநேக அந்நிய போதனைகள் உண்டு. பிரன்ஹாம் கிறிஸ்துதான் அந்த புதிய நாமம் என ஏழாம் சபைக்கால தூதனும் தீர்க்கதரிசியுமாகிய சகோ. வில்லியம் மாரியன் பிரன்ஹாம் பெயருக்கு களங்கத்தை கொண்டுவர சாத்தான் எடுத்த முயற்சி ஆகும் இது . தேவனுடைய வார்த்தைக்கு நாம் யாருமே நம்முடைய சொந்த வியாக்கியானத்தைக் கொடுக்கக் கூடாது. சுத்தமான கலப்படமில்லாத ஒருத்தி கிறிஸ்துவுக்குத் தேவை. அவள் ஸ்தாபன சபைகளுடனும் / தேவனுடைய வார்த்தைக்கு தன் சுயபுத்தியைச் சார்ந்து வியாக்கியானம் செய்யும் ஒருவனுடனும் அவள் சரசம் செய்யும் ஒருத்தியாக இருக்க முடியாது. பாருங்கள் ஒருவன் தன் மனைவி மற்றொருவனோடு சரசம் செய்ய விரும்பமாட்டான். அதுபோல தேவனுடைய வார்த்தைக்கு அப்படிப்பட்ட விவேகத்திற்கு நீங்கள் செவி சாய்த்தால் சாத்தனுடன் நீங்கள் சரசம் செய்கிறீர்கள் என்று அர்த்தம். நாம் கலப்படமற்றவர்களாய் இருக்க தேவன் விரும்புகிறார். தேவனுடைய வார்த்தையில் நிலை நில்லுங்கள். ஏனென்றால் கிறிஸ்து தம்முடைய மணவாட்டி தேவனுடைய வார்த்தையில் சுத்தமானவளாய் நிலைத்து இருக்க விரும்புகிறார். ஆனால் நீங்கள் தேவனுடைய வார்த்தைக்கு அப்பாற்பட்ட உபதேசங்களில் கலந்து இருப்பதால் சாத்தானோடு சரசம் கொண்டிருக்கிறீர்கள். ஆதலால் உங்கள் மேல் தேவனுக்குப் பிரியமில்லை. இப்பொழுது நாம் தேவனுடைய வார்த்தையோடு இந்த புதிய நாமம் குறித்து தியானிப்போம் - ஜெயம் கொள்கிறவனுக்கு அ) மறைவான மன்னாவை புசிக்கக் கொடுக்கிறார். ஆ) வெண்மையான குறிக்கல்லை கொடுக்கிறார். இ) அந்த வெண்மையான குறிக்கல் உள் புதிய நாம் ஒன்று எழுதப்பட்டுள்ளது ஈ) அந்த புதிய நாமத்தை பெறுகிறவனே அன்றி வேறொருவனும் அறியக்கூடாது. அதாவது புதிய நாமத்தை பெறுகிறவன் நானாக இருந்தால் என்னைத் தவிர வேறு எவரும் அதை அறிய முடியாது. மற்றொருவர் அது குறித்து நானும் அறிந்திருக்கிறேன் என்று கூறினால் அவன் பொய்யன். இது ஆங்கிலத்தில் To Him that overcometh will I give to eat of the hidden manna. And will give Him a white stone. And in the stone a new name was written, which no man knoweth except that He receive it. இப்பொழுது கவனியுங்கள். திருச்சபையின் ஆதி பிதாக்கள் மரித்த பிறகு சத்தியம் யாருக்கும் புலப்படாமல் மன்னா மக்களுக்கு மறைக்கப்பட்டது. ஆனால் அது ஒவ்வொரு சபைக் காலத்தின் தூதனுக்கு அவர்கள் காலத்தில் வெளிப்பாட்டை (மன்னா) இயேசுவிடமிருந்து பெற்று மக்களுக்கு அறிவித்தார்கள். தேவன் தம்முடைய மறைவான மன்னாவை ஜெயம் கொள்கிறவனுக்கு மாத்திரமே கொடுக்கிறார். ஜெயம் கொள்ளுகிறவன் யார்? அந்தந்த சபைக் காலத்தில் ஆவியானவரால் செவி திறக்கப்பட்ட எவனும் சத்தியத்தை கேட்கிறான். அதை இருதயத்தில் ஏற்றிக் கொண்டு விசுவாசிக்கின்றான். மன்னாவை - வெளிப்பாட்டை ஏற்றுக்கொண்டது மாத்திரமல்ல , அதன்படி நடந்து கனி கொடுக்கிறான். இயேசு கிறிஸ்து ஜெயம் கொள்கிறவனுக்கு. வெண்மையான குறிக்கல்லை(White Stone) கொடுக்கிறார். அது அந்த சபைக் காலத்தில் வார்த்தையின் நிமித்தம் அவன் அனுபவித்த பாடு கஷ்டங்களுக்கு சன்மானம். இது என்ன? இயேசு பேதுருவுடன்: இந்த கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன் என்றார். கல் எதைக் குறிக்கிறது? இயேசு ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று அவன் பெற்ற வெளிப்பாடு ஆகும். ஏனெனில் சிலர் அவரை யோவான் ஸ்நானன் என்றார்கள். சிலர் எலியா என்றார்கள். தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றார்கள். அதை அவர்கள் லௌகிக ஞானம் – மாம்சமும் இரத்தமும் வெளிப்படுத்தியது. ஆனால் பேதுருக்கு இயேசு: ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்ற வெளிப்பாட்டை பரலோகத்திலுள்ள பிதா வெளிப்படுத்தினார் என்கிறார். அதுதான் காரியம். இன்றும் அவ்வாறாகவே நடந்து வருகிறது. அநேகருக்கு அவர்கள் பெற்ற வெளிப்பாடு அவர்கள் மாம்சமும் இரத்தமும் வெளிப்படுத்தினதாக இருக்கிறது. பிரன்ஹாம் கிறிஸ்து கூட்டத்தினர் இங்கு தான் உள்ளார்கள். திரித்துவ ஸ்தாபன சபைகள் இங்குதான் தங்களை அடையாளம் காட்டுகிறார்கள். இப்பொழுது கவனியுங்கள். அந்த கல்லுக்குள் (வெளிப்பாட்டுக்குள்) அந்த வெளிப்பாட்டை பெற்றவன் மாத்திரமே அறியக் கூடிய புதிய நாமம் எழுதப்பட்டிருக்கிறது.

**39.** அ) புதிய நாமம் அளிக்கப்படுவது நமக்கு ஒன்றும் புதியது அல்ல. ஆபிராம் - ஆபிரகாம் என்றும், சாராய் - சாராள் என்றும், யாக்கோபு - இஸ்ரவேல் என்றும், சீமோன் - பேதுரு, கேபா என்றும் அழைக்கப்பட்டார்கள். இந்த பெயர் மாற்றம் இவர்களுடைய ஜீவியத்தில் ஒரு பெரிய மாற்றத்தை உண்டுபண்ணியது. இவர்களுடைய ஜீவியத்தில் ஒரு மாற்றம் காணப்பட்டதால் பெயர் மாற்றப்பட்டது. ஆபிரகாம் - சாராள் தங்களுக்கு பிறக்கப்போகும் குமாரனை பெற்றுக்கொள்ள ஆயத்தமாயிருந்தபோது அவர்கள் பெயர் மாற்றப்பட்டது. அதுபோல யாக்கோபு தேவனோடு போராடி வெற்றிபெற்ற பிறகு அவன் பெயர் இஸ்ரவேல் என்று மாற்றப்பட்டது. சீமோன் என்ற பேதுரு, சவுல் என்ற பவுல் கர்த்தரை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டபோது அவர்கள் பெயர் மாற்றப்பட்டது. நிச்சயமாக நம்முடைய பெயரும் ஒரு நாள் மாற்றப்படும். அப்பொழுது நாம் புதிய நாமத்தைப் பெற்றுக்கொள்வோம். ஒருவேளை இது உலகத் தோற்றத்திற்கு முன்பு ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்ட நம்முடைய பெயராகக் கூட இருக்கலாம். ஏனென்றால் நாம் பிறப்பதற்கு முன்பே பெயரிடப்பட்டிருக்கிறோம் என வேத வாக்கியங்களில் காண்கிறோம். நம்முடைய அந்த நாமத்தை தேவன் மாத்திரமே அறிவார். நாம் ஒன்றும் அறியோம். ஆனால் அது

ஒருநாள் நமக்கு வெளிப்படுத்தப்படும். தேவன் நமக்கு வெளிப்படுத்துவார். இது குறித்து நீங்கள் ஏழு சபைக் கால வியாக்கியானம் - பெர்கமு - பக்கம் 295 - 298 வரை தியானிக்கலாம்.

ஆ) **அடுத்து வெளி 3:12** ஜெயம் கொள்கிறவனுக்கு அ) தேவன் அவனை தேவனுடைய ஆலயத்தின் தூணாக்குகிறார்

ஆ) தேவனுடைய நாமம் அவன் மீது எழுதப்படும் இ) புதிய எருசலேமாகிய தேவனுடைய நகரத்தின் நாமம் அவன் மேல் எழுதப்படும் ஈ) தேவனுடைய புதிய நாமமும் அவன் மேல் எழுதப்படும். ஜெயம் கொள்கிறவர்கள் தேவனுடைய ஆலயத்தின் தூணாக நிற்பார்கள். தேவனுடைய ஆலயம் என்பது என்ன? இயேசு தம்முடைய சரீரத்தை தேவனுடைய ஆலயம் என்று கூறுகிறார். நாமே அவருடைய சரீரமாய் இருப்பதால் பரிசுத்தஆவி நமக்குள் வாசம் செய்யும் தேவனுடைய ஆலயமாய் இருக்கிறோம். தூண் என்பது எதைக் குறிக்கிறது? இது கட்டிடத்தை தாங்கும் அஸ்திவாரத்தில் ஒரு பாகம் ஆகும். அப்படியானால் ஜெயம் கொள்கிறவன் அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் வகித்த ஸ்தானத்தை வகிக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல வாசலாகிய இயேசுவின் மூலம் உள்ளே பிரவேசித்து அவருடைய சரீரமாகிய ஆலயத்தின் ஒரு பாகம் ஆகிறார்கள். தேவன் ஒரு மனிதனை தம்முடைய ஆலயத்தில் ஒரு தூணாக நிறுத்தி அவனை அஸ்திபாரத்தின் ஒரு பாகமாக்குகிறார். அப்படியானால் அவரை அவனுக்கு வெளிப்படுத்தி வார்த்தையின் உண்மையான அர்த்தத்தை அவனுக்கு வெளிப்படுத்துகிறார்.

இ) அடுத்து தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டு இயேசு என்ற பெயரில் அழைக்கப்பட்டார்( லூக் 1:31). பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்ற மூன்று தன்மைகளை (Attributes) ஒருவரே கொண்டதால் கர்த்தராகிய (பிதா) இயேசு (குமாரன்), கிறிஸ்து (பரிசுத்த ஆவி) என அழைக்கப்பட்டார். ஒரு பெண் தன் கணவனின் பெயரைத் திருமணத்திற்குப் பிறகு தரித்துக் கொள்கிறாள். அதுபோன்று கிறிஸ்துவின் மணவாட்டியும் தன் மணவாளனாகிய கிறிஸ்துவை சேரும்போது அவருடைய நாமத்தைத் தரித்துக்கொள்கிறாள். இவர் பரலோகத்திலும் பூலோகத்திலும் உள்ள முழு குடும்பத்திற்கும் நாமகாரணராகிய இயேசு கிறிஸ்து. ஆக தேவனுடைய நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஆகும். பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்பது தேவனுடைய நாமம் அல்ல(எபே 3:14,15). ஆனால் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து.

ஈ).அடுத்து தேவனுடைய நகரத்தின் நாமம்: யோவானாகிய நான் புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை தேவனிடத்திலிருந்து பரலோகத்தை விட்டு இறங்கிவரக் கண்டேன். அது புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல் ஆயத்தமாக்கப்பட்டிருந்தது (வெளி 21:2). Bride - Church is the New Jerusalem. The church itself is the new jerusalem . தேவனுடைய நகரத்தின் நாமம் புதிய எருசலேம் ஆகும். உ). அடுத்து தேவன் தம்முடைய புதிய நாமத்தை அவன்மேல் எழுதுவார். எல்லாம் புதிதாக்கப்பட்ட பிறகு தேவன் ஒரு புதிய நாமத்தைத் தரிப்பார். அந்த நாமம் மணவாட்டியின் நாமமுமாக இருக்கும். அந்த பெயர் என்னவாயிருக்கும் என்று யாரும் உத்தேசிக்க முடியாது. ஆனால் அது தக்க சமயத்தில் ஆவியானவரால் திட்டவட்டமாக வெளிப்படுத்தப்படும். இது குறித்து நீங்கள் ஏழு சபைக்கால வியாக்கியானத்தில் பிலதெல்பியா சபைக்காலம் பக்கம் 443-445 வரை தியானிக்கலாம். ஆக தேவனுடைய புதிய நாமம் பிரன்ஹாம் கிறிஸ்து என்பது வேதவாக்கியங்களுக்குப் புறம்பானது. வேதவாக்கியங்களுக்குப் புறம்பானது எதுவும் சாத்தானுடையதே. ஆதலால் புதிய நாமம் பிரன்ஹாம் கிறிஸ்து என்று போதிப்பவர்கள், அந்த விசுவாசத்தில் இருப்பவர்கள் யாவரும் கிறிஸ்துவைவிட்டு வெளியே. கிறிஸ்துவின் சரீரத்தில் அவயவமாக இல்லை. ஆதலால் தேவன் அவர்களிடத்தில் பிரியமாய் இல்லை.

**40. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை பற்றிய வெளிப்பாடு:** திவ்ய வாசகனாகிய யோவானுக்கு வெளிபடுத்தின விசேஷம் இயேசு கிறிஸ்துவை பற்றிய ஒருமுழு வெளிப்பாட்டைகொண்டது. இது இயேசு கிறிஸ்து யார் என்று வெளிப்படுத்துகிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து: 1. இருக்கிறவர் 2. இருந்தவர் 3.வருகிறவருமானவர் (வெளி 1:4,8). 4. உண்மையுள்ளசாட்சி 5. மரித்தோரிலிருந்துமுதற்பிறந்தவர் 6.பூமியின்இராஜக்களுக்குஅதிபதி (வெளி 1:5) 7. இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர் (வெளி 1:8) 8.அல்பா , ஓமெகா (வெளி 1:8). 9. அல்பா, ஓமெகா, முந்தினவர் ,பிந்தினவர் ( வெளி 1:11, 21:5,6) 10. முந்தினவரும், பிந்தினவரும் ,உயிர் உள்ளவருமாய் இருக்கிறவர் (வெளி 1:17) 11.மரித்தேன் ,ஆனாலும் இதோ சதாகாலங்களிலும் உயிரோடுயிருக்கிறேன், ஆமென் என்றவர் (வெளி 1:18)12. நான் மரணத்திற்கும், பாதாளத்திற்கும் உரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன் என்றவர் (வெளி 1:18) 13.ஏழு நட்சத்திரங்களை தம்முடைய வலதுகரத்தில் ஏந்திக்கொண்டு, ஏழு பொன் குத்துவிளக்குகளின் மத்தியிலே உலாவிக்கொண்டிருக்கிறவர் (வெளி 2;1)14.முந்தினவரும், பிந்தினவரும், மரித்திருந்து பிழைத்தவரும் ஆனவர் (வெளி 2:8) 15.இருபுறமும் கருக்குள்ளபட்டயத்தை உடையவர் (வெளி 2;12) 16. அக்கினி ஜுவாலை போன்ற கண்களும், பிரகாசமான வெண்கலம் போன்ற பாதங்களும் உள்ள தேவகுமாரன். (வெளி 2;18) 17. உள்ளிந்திரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கிறவர் (வெளி 2;23). 18. உங்களில் ஒவ்வொருவனுக்கும் உங்கள் கிரியைகளின் படியே பலன் அளிப்பேன் என்றவர் (வெளி 2:23.) 19. தேவனுடைய ஏழு ஆவிகளையும், ஏழு நட்சத்திரங்களையும் உடையவர் (வெளி 3:1). 20. பரிசுத்தமுள்ளவரும், சத்தியமுள்ளவரும், தாவீதின் திறவுகோலை உடையவரும், ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்கு திறக்கிறவரும், ஒருவரும் திறக்ககூடாதபடிக்கு பூட்டுகிறவருமாயிருக்கிறேன் என்றவர் (வெளி 3:7). 21. உண்மையும் சத்தியமுள்ள சாட்சியும், தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற ஆமென் என்றவர் (வெளி 3:14). இதுவரை தேவன் இயேசு கிறிஸ்து யார் என்பதை ஏழு சபைகளுக்கும் வெளிப்படுத்தினார்.

**41. அடுத்து யோவான் பரலோக தரிசனங்களை காண்கிறான். அவன் கண்டதாவது:** 1. வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது. 2. அந்த சிங்காசனத்தின் மேல் ஒருவர் வீற்றிருந்தார்.( வெளி 4:2) கவனியுங்கள் பரலோகத்தில் ஒரு சிங்காசனம் மாத்திரமே, அதில் ஒருவர் மாத்திரமே வீற்றிருந்தார். மூவர்கள் அல்ல, இருவர்கள் அல்ல, சிங்காசனத்தில் மூன்று பேரை சித்தரித்து காட்டும் திரித்துவ உபதேசம் பிசாசினுடையதே. திரித்துவத்தை உபதேசிப்பவர்களும், விசுவாசிப்பவர்களும் பிசாசினுடைய கரத்திலே உள்ளனர். பாருங்கள் சாத்தனும் ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்துக்கொள்வானே. மேலும் சாத்தானுடைய ஊழியக்காரர்கள் நீதியின் ஊழியக்காரனுடைய வேஷத்தை தரித்துக்கொள்வர்களே (2 கொரி11:14,15) ஆகையால் நாம் 100 சதவீதம் நம் மத்தியில் திரித்துவ உபதேசத்தை கொண்டுவருபவர்கள் அனைவரும் சாத்தானுடைய ஊழியக்காரர்கள் என்று உறுதியாக கூறலாம். பரலோகத்தில் வாசல் திறக்கப்பட்டிருந்தது. அங்கு ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது, அதில்

மூவர் அல்ல, இருவர் அல்ல, ஒருவரே வீற்றிருந்தார்.3.அந்த சிங்காசனத்தை சுற்றி ஒரு வானவில் இருந்ததது.(வெளி 4:3) 4. அந்த சிங்காசனத்தை சூழ இருபத்துநான்கு சிங்காசனங்கள் இருந்தது. அதில் இருபத்துநான்கு மூப்பர்களும் உட்கார்ந்து இருந்தார்கள்.(வெளி 4:4) 5. சிங்காசனத்தின் மத்தியிலும்,சுற்றிலும், நான்கு ஜீவன்கள். முதலாம் ஜீவன் சிங்கத்திற்கு ஒப்பாகவும், இரண்டாம் ஜீவன் காளைக்கு ஒப்பாகவும், மூன்றாம் ஜீவன் மனுஷமுகம் போன்ற முகம் உள்ளதாய் இருந்தது. நான்காம் ஜீவன் பறக்கிற கழுகுக்கு ஒப்பாய் இருந்தது (வெளி 4:6,7). 6. நான்கு ஜீவன்களும் இருந்தவரும், இருக்கிறவரும், வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், என்று இரவும் பகலும் ஓயாமல் சொல்லிக்கொண்டிருந்தன(வெளி 4:9). பாருங்கள் இந்த இருந்தவரும், இருக்கிறவரும், வருகிறவருமாகிய நபர் யார்? அவர் சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர்.

**42.** இப்பொழுது கவனியுங்கள், சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்து, சதாகாலங்களிலும் உயிரோடு இருக்கிறவருக்கு அந்த ஜீவன்கள் மகிமையையும், கனத்தையும், ஸ்தோத்திரத்தையும் செலுத்தும் போது, இருபத்துநான்கு மூப்பர்களும், சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து சதாகாலங்களிலும் உயிரோடு இருக்கிறவரை தொழுது கொண்டார்கள். கர்த்தாவே, தேவரீர், நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர் என்றார்கள் ( வெளி 4:9-11) இதைதான் அப்.யோவான் அவர் உலகத்தில் இருந்தார் (இயேசு ) அவரால் உலகம் உண்டாயிற்று ஆனால் உலகமோ அவரை அறியவில்லை என்கிறான் (யோ 1:10). ஆம் இந்த உலகத்திற்குரியவர்களாகிய திரித்துவ ஸ்தாபன சபைகளும், அவைகளின் ஊழியக்காரர்களும் அவரை அறியவில்லை. அவர்கள் அறிந்துகொள்ளவும் மாட்டார்கள். அறிந்திருந்தவர்களாயிருந்தால் மகிமையின் தேவனை மூவராக விசுவாசிக்கமாட்டார்கள். பாருங்கள் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் கிறிஸ்துவுக்குள் சரீரப்பிரகரமாக வாசமாய் இருக்கிறது (கொலோ 2:9).

**43.** இப்பொழுது கவனியுங்கள் பரலோகத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது. அதில் ஒருவர் வீற்றிருந்தார். அது யார் என்பது குறித்து வேதவாக்கியம் என்ன கூறுகிறது? இதோ சகல ஜாதிகளிலும், கோத்திரங்களிலும், ஜனங்களிலும், பஷைக்காரரிலும் இருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள் வெள்ளை அங்கிகளை தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளை பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன். அவர்கள் மகா சத்தமிட்டு: இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள். அதோடு மட்டுமல்ல தூதர்கள் யாவரும் சிங்காசனத்திற்கு முன்பாக முகம் குப்புற விழுந்து தேவனை தொழுதுகொண்டு: ஆமென் எங்கள் தேவனுக்கு துதியும் மகிமையும் ஞானமும், ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவதாக ஆமென் என்றார்கள்.( வெளி 7:9-12). மீண்டுமாக அந்த ஆட்டுக்குட்டியானவரை இருபத்துநான்கு மூப்பர்களும், நான்கு ஜீவன்களும், வணக்கமாய் விழுந்து : ஆமென், அல்லேலுயா என்று சொல்லி சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் தேவனை தொழுதுகொண்டார்கள்.(வெளி 19:4) மேலும் இங்கு நீங்கள் நன்கு கவனித்தீர்கள் ஆனால் தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் ஒருவரே. அவரே சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்தவர். அடுத்து இத்துடன் வெளி 7:17 ஐ தியானியுங்கள். இங்கு சிங்காசனத்தின் மத்தியில் இருக்கிறவர் ஆட்டுக்குட்டியானவர் என்பதை காண்கிறோம். மேலும் வெளி 22:1,3 ஐ தியானியுங்கள். இங்கு தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் என காண்கிறோம். ஆக பரலோகத்தில் ஒரே ஒரு சிங்காசனம் மாத்திரம் இருந்தது. அதில் தேவனும் ஆட்டுக்குட்டியானவருமாகிய ஒருவர் வீற்றிருந்தார். அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார் (எரே 10:10,1 யோ 5:20) இவரே உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி( யோ 1:29). ஆம், தேவனும் ஆட்டுக்குட்டியும் ஒருவரே அன்றி இருவர் அல்ல. ஆக திரித்துவ உபதேசத்தில் உள்ள அனைவரும், தேவனை அறியாதவர்களும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்களுமாய் இருக்கிறபடியினால் கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப்படும்போது நீதியுள்ள ஆக்கினைக்கு உட்பட்டவர்களாய் இருக்கிறபடியினால் அவர்கள் மீது தேவன் பிரியமாக இல்லை. இது நூறுசதவிகிதம் தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் உள்ள உண்மை/சத்தியம்.

**44.** இவ்வாறாக நான், ஸ்தாபன சபைகள், அதன் ஊழியக்காரர்கள், இவர்களைப் பின்பற்றும் விசுவாசிகள் மற்றும் ஒரே தேவன் உண்டு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் என்று விசுவாசிக்கின்றோம், ஊழியம் செய்கிறோம், கர்த்தருடைய வருகை வந்துவிட்டது. இயேசு கிறிஸ்து 1963-ல் பூமிக்கு வந்து அவருக்குத் திருமணம் நடைபெற்றுவிட்டது, ஒரு மனுஷனுடைய சரீரத்தில் மலம் மற்றும் ஜலம் முறையாக வெளியேறினால் அந்த சரீரத்திற்கு எந்தவிதமான வியாதியும் வராது - அனுகாது. அது ஆரோக்கியமான சரீரம். அதுபோல மலமானது தேவனுடைய வார்த்தைக்கும், ஜலமானது தேவனுடைய ஆவிக்கும் எடுத்துக்காட்டாக இருக்கிறது. வார்த்தையும் ஆவியும் உங்களில் வாசம் பண்ணினால் உங்கள் சரீரம் ஆரோக்கியமாக இருக்கும் என தன் வாய்க்கு வந்தபடியெல்லாம் உதறித்தள்ளும், பேய்தனத்துக்கடுத்த போதனைகளை உபதேசிக்கும் நுங்கம்பாக்கம் சபை பாஸ்டரின் மனம் போன போக்கில் மாறுபாடானவைகளைப் பின்பற்றி, நடந்து பரிசுத்தருடைய வசனத்தை அசட்டை பண்ணி, கர்த்தருடைய வேதத்தை வெறுத்து, அறிந்தோ அறியாமலோ, உணர்ந்தோ உணராமலோ தங்கள் முகத்தை அல்ல முதுகையே தேவனுக்கு காட்டினார்கள். ஏனென்றால் இவர்கள் அப்போஸ்தல தீர்க்கதரிசிகளுடைய உபதேசத்தை முற்றிலுமாக ஏற்றுக்கொண்டு அவர்களுக்குக் கீழ்ப்படிவது இல்லை. அந்தந்த சபைக்காலத்து தூதனுடைய செய்திக்கு முற்றிலுமாக கீழ்ப்படியாது அவற்றைப் புரட்டுகிறார்கள். தங்கள் சொந்த வியாக்கியானத்தைக் கொடுக்கிறார்கள். தேவசித்தத்திற்குப் புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்கிறார்கள். இவர்களுடைய அக்கிரமங்களையும் மீறுதல்களையும் கண்ணாரக் கண்டும், காதுகளால் கேட்ட பிறகும் அமைதியாக இருக்க என்னால் முடியவில்லை. ஆதலால்தான் இந்த செய்திப் புத்தகத்தை எழுதலானேன். ஆனால் தபால் துறையினால் புத்தக வெளியீடு கடந்த நான்கு மாதங்களாக தடை பட்டது. அதலால் தான் தற்போது புத்தக வடிவத்தில் சில மாற்றங்கள் செய்துள்ளேன். நீங்கள் நான் எழுதியவைகளை விசுவாசிகலாம், விசுவாசியாமல் அவைகளை அசட்டையும் செய்யலாம். ஆனால் ஒன்று மட்டும் மீண்டும் கூறி உங்களை எச்சரிக்க விரும்புகிறேன். உங்களுடைய அவிசுவாசம் தேவனுடைய உண்மைகளை அவமாக்காது. அது உங்களால் கூடாது. தேவனிடத்தில் பட்சபாதம் இல்லை. இன்னும்

தேவன் விரும்பாத எத்தனையோ காரியங்களை இங்கு நான் எழுதிக்கொண்டே போகலாம். ஆனால் அவைகள் அனைத்தையும் குறித்து நான் இதுவரை அநேக செய்திகள் முழுமையாக எழுதியுள்ளேன். ஆதலால் இங்கு மிக சுருக்கமாகவும் குறைவான எண்ணிக்கையில் எழுதியுள்ளேன். இதில் எந்தெந்த நடத்தைகளில் தேவன் உங்கள் மேல் பிரியமாய் இல்லை என்பதை தெரிந்துகொள்ளலாம். அவர் உங்களை விக்கிரகாராதனையில் இருந்து வெளியே கொண்டுவந்தது உண்மைதான். இஸ்ரவேல் ஜனங்களை ஆதரித்து, ஆசீர்வதித்ததுபோல் உங்களையும் இப்பிரபஞ்சத்துக்குரிய நன்மைகளால். ஆசீர்வதித்தது உண்மைதான். ஆனாலும் அந்த இஸ்ரவேல் ஜனங்களைப் போல் நீங்களும் தேவனுடைய கற்பனைகளுக்கும், பிரமாணங்களுக்கும், கட்டளைகளுக்கும், நீதிநியாயங்களுக்கும், அப்போஸ்தல தீர்க்கதரிசிகளுடைய உபதேசங்களுக்கும், தேவனுடைய வார்த்தைக்கும், சபைக் காலத்து தூதனுடைய செய்திகளுக்கும் கீழ்ப்படியாமல் அவற்றை உங்கள் முதுகுக்குப் பின்னால் எறிந்து போட்டீர்கள். ஏனென்றால் உங்கள் கண்களுக்கு முன்பாக தெய்வ பயம் இல்லை. நல்லதல்லாத வழியில் நிலைத்திருக்கிறீர்கள். உங்கள் விருப்பப்படியே நடந்து வருகிறீர்கள். உங்கள் மனம் போன போக்கில் போனீர்கள். உங்களுடைய இருதயம் தேவனிடத்தில் நிலைவரப்படவில்லை. அவரிடத்தில் திரும்புவதற்கும் உங்கள் கிரியைகளை சீர்திருத்தவில்லை. நீங்கள் ஆட்டத்தின் விதிமுறைகளை தவிர்த்து தவறாக விளையாடிவிட்டு ஜெயத்தை எதிர்பார்க்கிறீர்கள். இது தவறு. நீங்கள் கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரமாகவே விளையாட வேண்டும். உங்கள் வழிகள் ஆண்டவரிடத்தில் செம்மையாக இல்லை. அவர் உண்மையாக நடக்கிறவன் மீதே பிரியப்படுகிறார். ஆதலால் உங்களிடத்தில் தேவன் பிரியமாக இல்லை. உங்கள் வழிகளின் பலனை கர்த்தர் உங்கள் மேல் சுமரப் பண்ணுவார். ஊழியக்காரனாகிய நீங்கள் காயீனுடைய வழியிலே நடந்து பிலேயாம் கூலிக்காக செய்த வஞ்சகத்திலே விரைந்தோடி, கோராவைப் போன்று எதிர்த்துப்பேசி தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக எதிர்த்து நின்ற பாவத்துக்குள்ளாகி கெட்டுப் போனீர்கள். உங்களுக்காக, மார்க்கம் தப்பி அலைகிற நட்சத்திரங்களாக அலைகிற உங்களுக்கு யூதா:13 நியாயத்தீர்ப்பே வைக்கப்பட்டிருக்கிறது. தேவன் பட்சபாதமற்றவர். சத்திய வசனம் முற்றிலுமாக உங்கள் வாயிலிருந்தும், இருதயத்திலிருந்தும் நீங்கிவிட்டபடியினால் அபாத்திரர் ஆகிய உங்கள் மேல் எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை தேவன் செலுத்துவார். ஆனால் கிறிஸ்துவின் மணவாட்டி தேவனுடைய வார்த்தையின், இந்த கடைசிக் கால சபை தூதனுடைய செய்தியின் ஒரு பாகமாக இருக்கிறபடியினால். அவளை எந்தொரு குளறுபடி உபதேசமும் வஞ்சிக்க முடியாது. தேவனுடைய வார்த்தை மாத்திரமே அவளுக்கு தீபம். தேவனுடைய வார்த்தை போதிக்கும் வண்ணமாக அதில் அவள் நிலைத்திருப்பாள். ஏனென்றால் அவள் வார்த்தையின் ஒரு பாகமாக இருக்கின்றாள். ஆதலால் சாத்தான் அவளை நெருங்க முடியாது. ஆதலால் எனக்குப் பிரியமானவர்களே நீங்கள் கறை அற்றவர்களும், பிழை இல்லாதவர்க்களுமாய் சமாதானத்தோடே தேவனுடைய வருகையில் காணப்படும்படி உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் குற்றமற்றதாக காக்கப்பட ஜாக்கிரதையாய் இருங்கள். ஆனால் தேவனோ உங்களில் ஒருவரும் கெட்டுப்போகாமல் மனம் திரும்ப வேண்டும் என்று விரும்பி உங்கள் மேல் நீடிய பொறுமை உள்ளவராய் இருக்கிறார். அதலால் காலத்தை பிரயோஜனப்படுத்திக்கொளுங்கள்.

45. முடிவாக கர்த்தருக்குப் பயந்து அவருடைய கற்பனைகளுக்கும், கட்டளைகளுக்கும், பிரமாணங்களுக்கும், அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய உபதேசங்களுக்கும், இக்காலத்துக்குரிய செய்திக்கும் கீழ்ப்படிந்து கர்த்தருடைய கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள்மேல் கர்த்தர் பிரியமாய் இருக்கிறார். இந்த புதிய ஆண்டில்(2016) கர்த்தர் உங்கள் வேண்டுதல்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றுவாராக. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனே கூட இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் அன்பில்
சகோ.காலேப் யோசுவா

**If Undelivered**
**Please Return to:**

**Caleb Joshua**
**11/2, Upstair, Opp.E.B.**
**Periyaar Nagar, Senneerkuppam,**
**Poonamallee P.O.**
**Chennai -600 056**

**PRINTED BOOK**
**Under Clause No. 128 P.O. Guide Rules**
**Rs. One per every 100 gms**
**To:Rev, Pr, Bro, Sis..........................**
**.........................................................**
**.........................................................**
**.........................................................**
**.........................................................**

**Owned and Published by Caleb Joshua from 11/2, Upstair, Opp.E.B. Periyar Nagar Senneerkuppam, Poonamallee P.O. Chennai - 600 056 and Printed by V.R. Sermakani, Sakthi Process, 2/1F Kummalamman Kovil St, Tondiarpet, Chennai. 600 081.**
**Ph: 044- 25956006. Editor Caleb Joshua**